# சேக்கிழார்



ஞான பரம்பரை

முனைவர் இரா. செல்வக் கணபதி

www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI



சேக்கிழார்

www.saivamonline.com

# சேக்கிழார்

## 1. தெய்வச் சேக்கிழார்

### அருண்மொழித் தேவர்

தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பெறும் சமயம் சைவம். சைவத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடித்தளம் இரண்டு. ஒன்று கற்கோயில்கள்; மற்றொன்று சொற்கோயில்கள். இருபத்தேழு அருளாளர்களால் அருளிச்செய்யப்பெற்ற பன்னிரு திருமுறைகள், தமிழ்நாட்டுச் சைவர்களின் 'மூல நூல்களாக'ப் போற்றப் பெறுகின்றன. பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப் பெற்றிருக்கும் நூல் திருத்தொண்டர்புராணம் என்பது. இதனைப் பெரியபுராணம் என்றே அழைக்கின்றனர். இந்நூலை இயற்றியளித்தவர் சேக்கிழார். ''தெய்வம் மணக்கும் செய்யுள் எல்லாம்'' என்று இந்நூல் போற்றப்பட்டது. இது குறித்து இவரைச் சைவர்கள் தெய்வச் சேக்கிழார் எனப் போற்றுவர். இவரது 'இயற்பெயர்' அருண்மொழித் தேவர்.

### சேக்கிழார் புராணம்

சேக்கிழாரின் வரலாற்றை அறிய உதவும் நூல் திருத்தொண்டர் புராண வரலாறு. இந்நூலைச் சேக்கிழார் புராணம் என்றும் கூறுவர். இந்நூலை இயற்றியவர் சைவ சாத்திர நூல் ஆசிரியர்களுள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இந்நூல் பாயிரம் உட்பட நூற்று மூன்று செய்யுள்களால் பாடப் பெற்றுள்ளது. சேக்கிழார் புராணம் அல்லாது, இவரது வரலாற்றைத் தொகுக்கச் சில கல்வெட்டுக்களும் சான்றுகளாகக் கிடைத்துள்ளன. வேறு சில

www.saivamonline.com

நூல்களும் சிறு சிறு குறிப்புக்களை வழங்குகின்றன. இவற்றின் துணை கொண்டு சேக்கிழார் வரலாறு முதற்கண் விரித்துரைக்கப் படுகிறது.

## ஊரும் பேரும்

பாலாறு பாய்ந்து வளம் சுரப்பது தொண்டைநாடு. தொண்டை நாடு, இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று புலியூர்க் கோட்டம். இக்கோட்டத்தில் இடம் பெற்றிருந்த வளநாடுகளுள் ஒன்று குன்றை வளநாடு. இதன் தலைநகரம் குன்றத்தூர். ஒருகாலத்தில் சோழ மன்னன் ஒருவன், குன்றத்தூர்ப் பகுதியில், நாற்பத்து எண்ணாயிரம் வேளாளர் குடும்பங்களைக் குடியேற்றினான். தொண்டைநாட்டு வேளாளர் களுள் ஒரு குடியினர் 'சேக்கிழார்' மரபினர் எனச் சுட்டப்பட்டனர். இம்மரபில் அருண்மொழித் தேவரும், அவர் தம்பி பாலறாவாயரும் உதித்தனர். இளமையிலேயே, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய அருண்மொழித் தேவரை, அக்காலத்தில் சோழநாட்டை ஆண்ட மன்னன் தருவித்து,அவரைத் தலைமை அமைச்சராக்கிக் கொண்டான். அவருக்கு 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டமும் வழங்கினான்.

சேக்கிழார், திருநாகேச்சரம் என்ற திருத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவன்பால் பெரிதும் பத்திமை பூண்டு வாழ்ந்துவந்தார். தாம் பிறந்த குன்றத்தூரிலும், சிவனுக்கு ஆலயம் ஒன்றை அமைத்து, சிவனை எழுந்தருள்வித்து 'நாகேச்சுவரர்' எனப் பெயர்சூட்டி மகிழ்ந்தார்.

## சீவக சிந்தாமணி

சேக்கிழார் காலத்தில், திருத்தக்கதேவர் என்ற சமணர் ஒருவரால் இயற்றப்பெற்ற, சீவக சிந்தாமணி என்ற பெருங் காப்பியம், தமிழ்மக்களைப் பெரிதும் ஈர்த்திருந்தது. அக்காலத்தில் நாடாண்ட சோழவேந்தனும், இக்கதையில் ஈடுபாடு கொண்டு, புலவர் வாயிலாக, அந்நூலின் சுவை கேட்டு மகிழ்ந்திருந்தான். சைவத்தில் பற்றுறுதி கொண்டிருந்த சேக்கிழார், இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்கவல்ல, சிவகதைகள் பல இருக்க, அவகதை ஒன்றைக் கேட்டு மன்னன் காலம் கழிப்பதை அறிந்து பெரிதும் வருந்தினார். தக்க தருணத்தில், சோழனுக்குத் தம் கருத்தை எடுத்துரைத்தார். கேட்ட மன்னன், தாங்கள் கூறவந்த சிவ கதை யாது? அதனை எனக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

www.saivamonline.com

## சிவ கதைகள்

சோழ மன்னனுக்குச் சேக்கிழார், நாயன்மார் அருள் வரலாறு வந்த முறைமை எடுத்துரைத்தார். தில்லைச் சிற்றம்பலவன், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டத் தொகை பாட அடி எடுத்துக் கொடுத்தமை: அவர், அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு, சிவன் அடியார் வரலாறுகளைப் பதினொரு பாடல்களில் பாடியமை: திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள், திருத்தொண்டத்தொகையில் குறிக்கப்பெற்ற சிவன் அடியவர் வரலாறுகளை விரித்துக் கலித்துறை யாப்பில், திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூல் ஒன்றை இயற்றியமை: அந்நூல் பெருமைகளைத் திருமுறைகண்ட இராசராசன், சிவாலய தேவன் முதலியோர் கேட்டு மகிழ்ந்திருந்தமை முதலிய யாவற்றையும், சேக்கிழார் மன்னனுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

## சோழன் வேண்டுகோள்

சோழமன்னன், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மற்றும் நம்பி யாண்டார் நம்பிகளால் விரித்துரைக்கப்பெற்ற நாயன்மார் வரலாறு களைத் தமக்கு எடுத்துரைக்குமாறு சேக்கிழாரை வேண்டினான். சேக்கிழாரும், தில்லைவாழ் அந்தணர் வரலாறு முதலாகத் திருநீலகண்டத்துப் பாணர் ஈறாக அமைந்த திருத்தொண்டத் தொகை வரிசைமுறைப்படி, அறுபது தனியடியார், ஒன்பது தொகையடியார் வரலாறுகளைத் தாம் உணர்ந்தவாறு சோழன் மனம் மகிழ விரித்துரைத்தார். மன்னன், மங்கைபாகராகிய சிவனாரின் திருவருளையும், நாயன்மார்கள் தொண்டு செய்து பேறுபெற்ற சிறப்பையும் கேட்டு நெஞ்சம் தழைத்தான். சேக்கிழாரை நோக்கி, நாயன்மார் அருள் வரலாறுகளை விரித்துரைக்கும், நூல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டிநின்றான்.

## சிற்றம்பலவன் அருள்

மன்னன் இட்ட கட்டளைக்கு மனம் மகிழ்ந்த சேக்கிழார், அவன் வழங்கிய செல்வங்களுடன், தில்லையைச் சென்று சேர்ந்தார். சிற்றம்பலவன் திருமுன்பு சென்று உள்ளமுருக வழிபட்டார். சிவன் அடியார்களாகிய நாயன்மார்களின் வரலாறுகளை விரித்துரைத்துக் காப்பியம் ஒன்றை இயற்றத் தில்லைச் சிற்றம்பலவனை, முதல் அடி எடுத்துத்தருமாறு வேண்டிப் பணிந்தார். சிவனருளால் 'உலகெலாம்' என்ற பேரொலி சிற்றம்பலத்திலிருந்து புறப்பட்டுச் சேக்கிழார் உள்ளிட்ட அனைவர் செவிகளையும் நிறைத்தது. தில்லை

www.saivamonline.com

மூவாயிரவரும், திருமடங்களின் தலைவர்களும், மற்றுமுள்ளோரும் இப்பேரொலி கேட்டுத் தலைமீது கைகுவித்து, உள்ளம் உருகினர். தில்லைவாழ் அந்தணர்கள், தில்லைக் கூத்தனுக்கு அணிவித்த மாலை, திருநீறு, பரிவட்டம் முதலியனவற்றைச் சேக்கிழாருக்கு வழங்கிப் பெருமைசெய்தனர்.

## திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை விரித்துரைப்பதற்கு முன்பாகத் திருநெறி கண்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிய மூவரையும் நெஞ்சில் வைத்து வணங்கிப்போற்றி, திருநீறு முதலிய சிவ சாதனங்கள் அணிந்தார். தில்லைத் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபம் சார்ந்த சேக்கிழார், சிவன் அடி எடுத்துக் கொடுத்த 'உலகெலாம்' என்ற தொடரை முதன்மையாகக் கொண்டு,

" உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் "

என்று, தில்லை அம்பலவானைப் போற்றி, திருத்தொண்டர் புராணம் என்னும் அருளியல் காப்பியத்தை இயற்றினார்.

## விண்ணில் எழுந்த ஒலி

சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் இயற்றி, நிறைவித்தமை, சோழ மன்னனுக்குத் தெரியவந்தது. சோழன், தன் பரிவாரங்களுடன் தில்லை சேர்ந்தான். சேக்கிழாரும், தில்லைவாழ் அந்தணர்களும், தவம் பெருக்கும் சீலர்களும், மன்னனை எதிர்கொண்டு வரவேற்றனர்.

## அரங்கேற்ற ஏற்பாடுகள்

அரங்கேற்றத்திற்கு நாள் குறித்து சோழன் சிவன் அடியார்கள் அனைவருக்கும் திருமுகம் அனுப்பினான். திருமுறைகளில் வல்லவர்கள், சிவாகமச் செல்வர்கள், வேதவிற்பன்னர்கள், தமிழ் இலக்கிய - இலக்கணங்களில் வல்லவர்கள் எனப் பலரும் மன்னன் அழைப்பினை ஏற்றுத் தில்லை வந்து சேர்ந்தனர். தில்லை அம்பலவன் திருமுன்பு, திருத்தொண்டர்புராண அரங்கேற்றத்திற்

www.saivamonline.com

குரிய பணிகள் யாவும் குறைவற நிறைவேற்றப்பெற்றன. இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்றாகிய 'திருவாதிரை' சிவனுக்கு உகந்த ஒன்று. சீர்காழியில் திருஞானசம்பந்தர் அவதாரம் செய்ததும், உமையம்மை அருளிய ஞானப்பால் பருகி, அவர் சிவஞானசம்பந்தராகியதும் திருவாதிரை நாளில்தான். இச் சிறப்புடைமை கருதி ஒரு சித்திரை மாதத் திருவாதிரை நாளில் புராண அரங்கேற்றம் தொடங்கியது.

## தொண்டர் சீர் பரவுவார்

சேக்கிழார், தாம் இயற்றிய திருத்தொண்டர்புராணத்தின் நுட்பங்களையெல்லாம், கற்றவர் அவையில், ஓராண்டுக் காலம் விரித்துரைசெய்தார். அடுத்துவந்த, சித்திரை மாதத் திருவாதிரை நாளில், புராண அரங்கேற்றம் நிறைவிற்கு வந்தது. சோழனும், ஏனையோரும், புராண விரிவுரை கேட்டு அகமகிழ்ந்தனர். தில்லை வாழ் அந்தணர்கள், தொண்டர் புராணத்தைச் 'சிவம்' எனக் கருதிப் போற்றிச் சிவமூலமந்திரத்தால் அருச்சனை செய்து வணங்கினர். சோழன், சேக்கிழாரையும், திருத்தொண்டர் புராணத்தையும், யானைமீது இருத்தித் தான் பின்னால் அமர்ந்து, தன் இரு கைகளாலும் வெண்சாமரம் வீசி, திருவீதி உலா வரச்செய்தான். தில்லையம்பலவன்முன் சார்ந்து, புராணத்தைச் சேக்கிழார் நடராசப்பெருமான் திருமுன்பு வைத்து வணங்கினார். சோழன் சேக்கிழாருக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று பட்ட மளித்துப் போற்றினான். தில்லையில் குழுமியிருந்தோர் எல்லாரும், சேக்கிழாரை உளம் உருகிப் போற்றி நின்றனர். 'அநபாயன்' என்ற பெயர் கொண்ட அச்சோழமன்னன், திருத்தொண்டர் புராணத்தைச் செப்பேட்டில் எழுதச்செய்வித்து, முன்னரே தொகுக்கப் பெற்றிருந்த, பதினொரு திருமுறைகளுடன் சேர்த்துச் சிறப்புச் செய்தான். அன்றுமுதல், சேக்கிழார் அருளிய இத் திருத்தொண்டர் புராணம், பன்னிரண்டாம் திருமுறை எனப் போற்றப் பெறுவதாயிற்று.

## பாலறாவாயர்

மூத்தவராகிய சேக்கிழாருக்குச் சிறப்புச் செய்த அநபாயன், அவர் இளவல் பாலறாவாயரைத் தருவித்து, அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டம் வழங்கி, அவரைத் தன் அரசவையில் அமைச்சராக்கி மகிழ்ந்தான்.

www.saivamonline.com

சேக்கிழார், தில்லை நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார். தேவார மூவர்களையும், அவர்களால் போற்றப்பெற்ற அடியார்களையும் தாமும் போற்றி, சிவனடியார்களுடன் தலை நிலையிலிருந்து, தில்லையம்பலவன் தாள்மலர்களில் கலந்தார்.

## இரண்டாம் குலோத்துங்கன்

பிற்காலச் சோழர்களில் ஒருவன், இரண்டாம் இராசராசன் என்பான். இவன் இரண்டாம் குலோத்துங்கனின் மகன். இவன் மகனே மூன்றாம் குலோத்துங்கன். இரண்டாம் இராசராசசோழன் ஆட்சியின் 17 ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று, திருமழபாடி ஆலயத்தில் உள்ளது. இதில், ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள், இராமதேவனான, உத்தம சோழப் பல்லவராயன் என்பான், திருமழபாடி ஆலயத்திற்குத் தொண்ணூறு பேராடுகளை நிபந்தமாக வழங்கிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில், நிபந்தம் வழங்கியவராகக் குறிக்கப்படுபவர், சேக்கிழாரே என்பது ஆராய்ச்சியாளர் பலருக்கும் உடன்பாடாக உள்ளது. எனவே, மேற்குறித்த இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியின் பிற்பகுதி தொடங்கி, இரண்டாம் இராசராசன், மற்றும் அவன் மகன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் முற்பகுதி வரை சேக்கிழார் வாழ்ந்தவர் என்பது புலனாகிறது. சேக்கிழாரைத் திருத்தொண்டர் புராணம் பாட வேண்டிய, 'அநபாயன்' இரண்டாம் குலோத்துங்கன் என்றும், சேக்கிழார் காலம், கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து சுட்டியுள்ளனர்.

## பாராட்டுரைகள்

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரை, உமாபதி சிவம், தாம் பாடிய திருத்தொண்டர்புராண வரலாற்றில்,

" தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார்பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி "

என்று போற்றி வணங்குகின்றார். மாதவச் சிவஞானமுனிவர் என்ற பெருங்கவிஞர், சேக்கிழாரை,

www.saivamonline.com

" தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதிகுன்றை வாழ்
சேக்கிழா னடி சென்னி இருத்துவாம் "

என்று வணங்கித் துதிக்கிறார். 'கவிராட்சசர்' என்று போற்றப் பெறும் கச்சியப்ப முனிவர்,

" ..........மற்றனெனத்
தகையா அன்பின் விரித்துலகோர் தம்மை அடிமைத் திறப்பாட்டின்
வகையா நின்ற சேக்கிழான் ஒளிர்பொற் கமலத் தாள்பணிவாம் "

என்று தாமும் வணங்கி, ஏனையோரையும் வணங்குமாறு அழைக்கிறார். நாயன்மார் வரலாறு விரித்துரைத்த சேக்கிழாரை, யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு. ஆறுமுக நாவலர் 'சேக்கிழார் நாயனார்' என்று அழைத்து மகிழ்ந்தார். தமிழ்நாட்டுச் சைவர்கள் திருவள்ளுவரை அடுத்துச் சேக்கிழாரைத் ''தெய்வச்சேக்கிழார்'' என்று அழைத்து மகிழ்கின்றனர்.

❀

www.saivamonline.com

# 2. பெரியபுராணம்

## மாக் கதை

சேக்கிழாரின் பெரியபுராணம், தமிழில் எழுந்த பெருங் காப்பியங்களுள் ஒன்று. 'உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல்' என்ற வகையில் எழுந்த வரலாற்றுப் பெருநூல் இது. இந்நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதினொரு பாடல்களால் இயன்ற, திருத்தொண்டத்தொகை என்ற நூலைப் பதிகமாகக் கொண்டும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத் தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகக் கொண்டும், சேக்கிழாரால் விரிநூலாகப் பாடப்பெற்றுள்ளது. சேக்கிழார் இந்நூலுள் எடுக்கும் மாக் கதை என்ற தொடரை ஆண்டுள்ளார். மாக் கதை என்பதே 'பெரிய கதை' எனப் பொருள்பட்டு, பிற்காலத்தே 'பெரிய புராணம்' என வழங்கலாயிற்று என்றும் கூறுவர். செயற்கரிய செயல் செய்வாரைப் 'பெரியர்' என்று திருவள்ளுவர் குறிப்பர். நாயன்மார் பலரும், செயற்கரிய செயல் செய்த பெரியராதலான், இந்நூல் 'பெரியர் புராணம்' எனப் போற்றப்பெற்றுப் பின்னர்ப் 'பெரிய புராணம்' எனத் திரிந்தது என்பாரும் உளர்.

## பின்புலங்கள்

சேக்கிழாரின் பெரியபுராணம் தோன்றுவதற்குப் பின்புலமாக அமைந்த, அக்காலச் சமூகம், மற்றும் சமயச்சூழல்களை ஆராய்ந்து தெளிவது, பெரிதும் நலம்பயக்கும். திருத்தொண்டர் புராண வரலாற்றில், அக்காலச் சோழமன்னனும், மக்களும், சீவகசிந்தா மணியின் மேல், பெரு விருப்பம் கொண்டிருந்தமையை மாற்றவே, சேக்கிழார் பெரியபுராணம் பாட நேர்ந்தது என்ற குறிப்புக் காணப் படுவது முன்னரே சுட்டப்பெற்றது. வளமும், அமைதியும் நிறைந்த நாடுகளுள், மக்கள், கேளிக்கை நாட்டம் கொண்டு வாழ்வர் என்பது

www.saivamonline.com

பொதுவான ஒரு மதிப்பீடு. பழையாறையில் ஒடுங்கிக் கிடந்த சோழர்கள், விஜயாலயன் நிகழ்த்திய திருப்புறம்பயப் பெரும்போருக்குப் பின், மீண்டும் தலை எடுத்தனர். நானூறு ஆண்டுக்காலம் பிற்காலச் சோழர் ஆட்சி நிலை கொண்டது. காவிரி தந்த வளனும், சோழர் தந்த பாதுகாவலும் காரணங்களாக,மொழி, சமயம், கலைகள் யாவும் வளர்ந்தன. கவலைகள் இல்லாத சோழநாட்டுச் சமுதாய வாழ்வில், மக்கள் கேளிக்கை நாட்டம் கொண்டு, சமணநூல் என்றும் பாராது, சீவகசிந்தாமணியின் சிருங்காரச் சுவையில் திளைத்திருக்கலாம் என்பது ஏற்கத்தக்கதே ஆகும்.

## ஆடவர் ஒழுக்கம்

சமண சமயநூல் என்பதற்காகமட்டு மல்லாமல், சிவாலயங்கள் பல எழுந்தும், திருமுறைகள் பல தோன்றியும், தம் நாட்டு மக்கள், சீவக சிந்தாமணியின் சிருங்கார ரசத்தில் திளைத்து, பக்தி நெறி மறந்தமையின், அவர்களைச் சைவநெறியில் திருப்ப வேண்டும் என்ற எண்ணமும், சேக்கிழாருக்கு இருந்திருத்தல் கூடும். சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய ஒன்று இரண்டு நூல்களைத் தவிர, தமிழில் எழுந்த பெருங்காப்பியங்கள் பலவும், கதைக் கருவைத் தமிழ் மண்ணில் தேர்ந்துகொள்ளாமல், நடையிட்டதற்குக் காரணம், நன்கு ஆராயப்படவேண்டும். சமூக ஒழுங்கை விரும்பிய தமிழ்ப் பெருங்கவிஞர்களுக்கு, நெறி திறம்பிய, ஆடவர் வாழ்வைக் கதைக் கருவாகத் தேர்ந்துகொள்ள விருப்பம் இல்லாது இருக்கலாம்.

## மனிதகுல ஒருமை

சோழ நாட்டில், காவல்மிக்க நல்லாட்சியும், வளமும் இணைந் திருந்தும், தொழில்வழி வந்த சாதியம், சமூக நல்லிணக்கத்திற்குத் தடையாக நின்றது. உறவு, சாதி, மொழி என்பவனவற்றிற்கெல்லாம் மேலாக மனித குலத்தைப் பேதமில்லாது, ஒரு வட்டத்துக்குள் கொண்டுவருவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்யவல்லது என்ற சேக்கிழாரின் நல்லெண்ணம்கூடப் பெரிய புராணத் தோற்றத்திற்கு, ஒரு காரணமாக இருந்திருக்கலாம். தேவார ஆசிரியர்கள் வாழ்விலும், சாதியக் கட்டுக்களைத் தகர்க்கும் பல கூறுகள் அமைந்துகிடந்தமை, சேக்கிழாரைச் சிந்திக்க வைத்திருக்கலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின், திருத்தொண்டத்

www.saivamonline.com

தொகைப் பதிவுகள், இடம் பெற்றிருந்த நாயன்மார் குல மரபுகள், சிவன் சந்நிதியில் மனித குலத்தை ஒருங்கிணைக்க இக்கதை உதவும் என்ற நம்பிக்கையைச் சேக்கிழாருக்குத் தந்திருக்கலாம். சேக்கிழார், இத்தடத்தில் பதித்த அழிக்க ஒண்ணாத முத்திரைகள் பல. அவை பின்னர் விரிவாக இந்நூலுள் விளக்கப்படவுள்ளன.

## வரலாற்று ஆய்வு

மூன்றாவதாகப் பெரியபுராணம் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் தோற்றம் கொண்டதற்கு உரிய வேறு ஒரு காரணமும் உண்டு. தமிழில் சங்க இலக்கியங்கள் பலவும், மனிதனை மையப்படுத்தி, மானுடத்தைக் கருவாகக் கொண்டே எழுந்தன. இறையவர்கள், சங்க நூல்களில், பாட்டுடைத் தலைவர்களின் அருளையும் ஆற்றலையும் விளக்க, உவமையாகவே முன்னிறுத்தப்பட்டனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சமய எழுச்சிக்காலம் பிறந்தது. அதுமுதல், சேக்கிழார் வாழ்ந்த கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை, ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள், தமிழ்க் கவிதைகளிலிருந்து, மானுடம் அகற்றப்பட்டு, இறையவர்கள் முன்னிறுத்தப்பட்டனர்.

## காதலால் விளைந்த கதை

தென்தமிழ்நாடு செய்த தவப்பயனால், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அவதரித்தனர். சமணத்தை வீழ்த்தி, சைவத்திற்குப் புதுவாழ்வு தந்தனர். தமிழ் மொழி தளிர்த்தது. தமிழ்க் கலைகளாகிய இசையும் கூத்தும் மீண்டும் தலை எடுத்தன. சைவசமயம் முடிசூடிக் கொண்டது. இத்தனை இருந்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திரு அவதாரத்திற்கான காதலைச் சொல்லவந்த சேக்கிழார். மாதவம் செய்த தென் திசை வாழவும், தீதில்லாத அடியவர் வரலாறு கூறும் திருத்தொண்டத் தொகை, தமிழ் மண்ணில் பிறக்கவுமே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காதல் அரும்பிற்று என்று அழகிய பதிவு ஒன்றைத் திருமலைச் சருக்கத்தில் பதிவு செய்கிறார். மேற்குறித்த தொடர்கள், சைவ சமய வரலாற்றில் நன்கு உற்று நோக்கி ஆராயப்பட வேண்டுவன.

## சிவனார் திருவுள்ளம்

ஆண்டவன் அருளும் புகழும் பாடுவதிலும் மேலாக, அவன் பெயரால் சிற்றுயிர்களுக்கும் மனித குலத்திற்கும்

www.saivamonline.com

அருந்தொண்டாற்றிய மாமனிதர்கள் போற்றப்பெற வேண்டும் என்பதே சேக்கிழாரின் பெருவிருப்பம் என்பது உறுதியாகிறது. சமூக நலம் கலவாத சமய வாழ்வைச் சேக்கிழார் பெரிதாகப் போற்றவில்லை. சிவனார் திருவுள்ளம்கூடத் தம்மைப் பாடுவதிலும், தம் அடியார்களைப் பாடுவதிலேயே மகிழ்ந்தது என்பதைப் பெரிய புராணத் தோற்ற வரலாறு காட்டுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதன் முறை 'பித்தா' என்றும், இரண்டாம் முறை அடியவர் புகழ் தொகுக்கத் 'தில்லை வாழ் அந்தணர்' என்றும் அடி எடுத்துக் கொடுத்ததோடு, சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என அசரீரி பிறப்பித்ததும் கூர்ந்து நோக்கத்தக்கன.

## மானுடத்திற்கு முதன்மை

எனவே, அளவற்ற பத்திமையில் தலைநின்று, சடங்குச் சமயம் நிலைகொண்டு எழுவதைச் சேக்கிழார் உணர்ந்திருக்க வேண்டும். மனிதர்களும் மனிதமுயற்சிகளும் அவர்தம் பேராற்றல் களும், உலகவர்முன் நிறுத்தப்பட வேண்டும். ஆண்டவன் நிகழ்த்திய அற்புதங்கள் கேட்டு அதிசயித்து, அந்நியப்பட்டு நிற்பவர்களைத் தன் ஒத்த மனிதன் ஒருவன் நிகழ்த்திய அற்புதங் களைச் சுட்டுவதன் மூலம், அவர்களோடு இணைந்து, நடையிட வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக மாற்றச் சேக்கிழார் உளம் கொண்டிருத்தல் வேண்டும்.

## மூன்று காரணங்கள்

மேற்குறித்தவற்றை உற்று நோக்கினால், சேக்கிழாரின் பெரிய புராணம் தோற்றம் கொண்டதற்கான சமூக-சமயத் தாக்கங்களை இனங்காண முடியும். நெறி திறம்பிய ஆடவர் வாழ்வை நேர்படுத்தி, ஒழுக்கம் மிக்க சமயவாழ்விற்கு அவர்களை மடைமாற்றுவது ஒன்று. இரண்டாவது, மனித குலத்தைச் சாதியக் கட்டுக்களிலிருந்து விடுவித்து, ஓர் இறைவன் பெயரால் ஒருங்கிணைப்பது. மூன்றாவது, கவிதைகளில்மட்டு மல்லாது, சமூகத்திலும் இறைவனுக்கு இணையாக, சற்று மேலாக, மனிதத்தை முன்னிறுத்தி, மக்களைத் தொண்டு நெறிக்கு அழைத்துச் செல்வது. இவை காரணங்களாகவே இறைவனும் மனிதர்களும் இணைந்து நடையிடும் தம் காப்பியத்திற்கு, இறைவன் பெயரை முன்னிறுத்தாது, திருத்தொண்டர் புராணம் என மானுடத்தை

www.saivamonline.com

முன்னிறுத்திச் சேக்கிழார் பெயர் சூட்டியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

## திருத்தொண்டத் தொகை

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணக் காப்பியக் கட்டமைப்பை ஒரு சிறிது காணலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி என்பன திருத்தொண்டர் புராணம் பாட உந்துதலாக அமைந்தமை முன்னரே குறிக்கப்பட்டது. திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களால் இயன்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவர் வாழ்ந்த கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னாகவும் வாழ்ந்திருந்த சிவத் தொண்டர்களின் செய்திகளை அரிதின் முயன்று திரட்டித் தம் திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்துள்ளார். ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளில் வாழ்ந்திருந்த சிவநெறிச் செல்வர்களை, ஒருசேரப் பதிவு செய்ததன் வழி, தமிழக வரலாற்றில், வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமைகிறது. தனித்தொண்டு ஆற்றியவர்களைமட்டும் திரட்டாது, ஒன்பது குழுவினரையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிவு செய்துள்ளார். முன்னவர்கள் 'தனி அடியார்கள்' என்றும், பின்னவர்கள் 'தொகை அடியார்கள்' என்றும் குறிக்கப்பெற்றனர்.

## பாராட்டுரைகள்

சைவ இலக்கிய வரலாற்றில், பெரும் திருப்பத்தை விளைவித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர் வடித்தளித்த திருத்தொண்டத் தொகையையும், அருமை உணர்ந்த பின்வந்தோர் பெரிதெடுத்துப் போற்றியுள்ளனர். சேக்கிழார், தம் நூலின் மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் நிறைவில்,

> **" நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து**
> **ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்**
> **தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன்**
> **வாச மலர்மென் கழல் வணங்க வந்தபிறப்பை வணங்குவாம் "**

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை நெஞ்சார வணங்கி மகிழ்கிறார். இவ்வாறே, தம் நூலுள் சேக்கிழார், இம்முதல், தமிழ் வரலாற்றுப் பதிவை நெஞ்சாரப் போற்றி,

www.saivamonline.com

" தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை "

என்றும்,

" தீதிலாத் திருத் தொண்டத் தொகை "

என்றும்,

" புற்றிடத்து எம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத் தொண்டத் தொகை "

என்றும்,

" மூலமான திருத்தொண்டத் தொகை "

என்றும் பலவகையில் ஏற்றுப் போற்றுவதைக் காணமுடிகிறது.

## திருத்தொண்டர் திருவந்தாதி

ஒன்றிரண்டு நாயன்மார்களைத் தவிர, ஏனை நாயன்மார் வரலாறுகள் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் மிகச் சுருக்கமாகவே திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு, சரியான வரலாற்றை அறிதல் மிகவும் கடினம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சின்னஞ்சிறு பதிவுகளுக்குத் தம் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலால் ஒளியூட்டியவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருந்த, நம்பியாண்டார் நம்பிகள். தம் நூலுள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான்பெருமாள், கோச்செங்கட் சோழர் என்பவர்களுக்குமட்டும் தலா இரண்டிரண்டு பாடல்களால் வரலாறு வகுக்கிறார். எஞ்சியோர் வரலாறுகள் ஒவ்வோர் பாடலால் விரிக்கப்பட்டுள்ளன. சுந்தரர் வரலாறு மட்டும், பதினொரு பாடல்களால் இடையிடையே விரிக்கப்பட்டு உள்ளது. வேறு சில செய்திகளையும் பேசி, இந்நூல் எண்பத் தொன்பது கட்டளைக் கலித்துறைகளால் நிறைவு பெறுகிறது.

## புகழுரைகள்

வரலாற்றுத் தேடலில் கள ஆய்வு மேற்கொண்டு, திருத் தொண்டத் தொகைக்கு ஒளியூட்டிய நம்பியாண்டார் நம்பிகளைத் திருத்தொண்டர் திருவந்தாதியின் இறுதியில் காணப்படும் தனிப்பாடல் ஒன்று, திறம் தெரிந்து போற்றுகின்றது.

www.saivamonline.com

" பொன்னி வடகரை சேர்நாரையூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதி, தேம், மரபு, செயல்
பன்ன அத்தொண்டத் தொகை வகை பல்கும் அந்தாதி தன்னைச்
சொன்ன மறைக்குல நம்பி பொற்பாதம் துணை துணையே, "

சேக்கிழார்

" அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம் "

என்று மனவணக்கம் செய்து, நூல் விரிக்கிறார். என்றாலும், முற்றிலுமாக நம்பியாண்டார் விரிக்கும் வரலாறுகளை ஏற்றுப் போற்றாது, சில வரலாறுகளில், அவரோடு முரண்படவும் செய்கிறார். என்றாலும், நம்பியாண்டார் நம்பிகள் முயற்சி உன்னதமானது என்பதில் ஐயமில்லை.

## காப்பிய உருவாக்கம்

சேக்கிழாரின் பெரியபுராணம் மேற்குறித்த இரண்டு நூல்களின் விரிநூலாக - ஒரு பெருங்காப்பியமாக மலர்ந்தது. அக்காலத்தில், கதை நிகழ்த்துவதற்கு உரிய யாப்பாக விருத்தப்பாக்கள் கண்டு தெளியப்பட்டிருந்தன. சேக்கிழாருக்கும் பெரிதும் இவ் யாப்புப் பயன்பட்டது. தம் பெருங்காப்பியத்தை இரண்டு பெருங் காண்டங்களாகப் பகுத்துக்கொண்டார். திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாடல்களின் தொடக்கங்களை உள்வைத்துச் சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டினார். தனியே, முதற்கண் கதை நடத்த ஏதுவாகத் திருமலைச் சருக்கம் ஒன்றையும் - பதின்மூன்றாவதாகக் கதை முடிக்க, வெள்ளானைச் சருக்கம் ஒன்றையும் இணைத்துக் கொண்டு, சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை நிறைவித்தார். நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களால் நூல் நிறைவு பெற்றது. விருத்தப்பாக்களோடு, தரவு கொச்சகக் கலிப்பா, கலிநிலைத்துறை, கலி விருத்தம், வஞ்சி விருத்தம் முதலிய யாப்புக்களும் சேக்கிழாரால் ஏற்றுப் போற்றப்பெற்றன.

## பாதுகாவல் உணர்வு

திருத்தொண்டத் தொகை குறித்த, தனியடியார் அறுபதின்மரோடு, அன்னார் வரலாற்றைப் பதிவு செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர்தம் பெற்றோர் இருவரையும் இணைத்து,

www.saivamonline.com

தனியடியார் தொகையை, அறுபத்து மூன்றாகச் சேக்கிழார் உயர்த்திக் கொண்டார். சுந்தரமூர்த்திகளின் வரையறையைத் தமக்குப் பாதுகாவலாகக் கொண்ட சேக்கிழார், தம் காலத்துக்கு முற்பட்டவராக வாழ்ந்திருந்த மாணிக்கவாசகர் முதலியோர் வரலாற்றைப் பாடாது விடுத்தார்.

## காப்பியக் கட்டமைப்பு

தமிழ்ப் பெருங்காப்பியம் ஒன்றை முன்னிறுத்தித் தமிழில் எவரும் காப்பிய இலக்கணம் படைத்திருக்கவில்லை. வடமொழியிலிருந்து, தண்டி முதலியோர் படைத்த காப்பிய இலக்கணம், தமிழிலும் நிலவியிருந்தது. தன்னேரிலாத தலைவன் ஒருவன், பெருங்காப்பியத்திற்கு வேண்டும். பல அங்கங்கள் பாடப் பெற வேண்டும். 'அறுபத்து மூன்று சிறுகதைகளின் தொகுப்புப் போல் தோன்றாமல், பெரிய புராணத்தை ஒரு காப்பியக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்த சேக்கிழாரின் புலமைத் திறம் வியப்பைத் தருகிறது. திருத்தொண்டத் தொகை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பியத் தலைவராக முன்னிறுத்தி, அவர் வரலாறு புனையும் நோக்கில், அவரால் போற்றி வணங்கப் பெற்ற அடியவர் வரலாறுகளைச் சுவை குன்றாது நிரலே புனைந்து, நடுவிலும், நிறைவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறே நாட்டிக் காப்பியம் நிறைவித்திருப்பது தமிழ்க் காப்பிய உலகிற்கு முதலாகவும் அதுவே இறுதியாகவும் நிற்கிறது. சேக்கிழாரின் பெரிய புராணம், கடந்த எண்ணூறு ஆண்டுகளில் தமிழ்மொழி, தமிழ்க்கலைகள், தமிழர் சமயமாம் சைவம், தமிழ்ச் சமுதாயம் முதலியவற்றின்மேல் பதித்த அடிச்சுவடுகளும் விளைத்த மாற்றங்களும் அடுத்து வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்படவுள்ளன.

## பதிப்புக்கள்

பெரிய புராண வருகையைத் தொடர்ந்து நாயன்மார் சிறப்பு உரைக்கும் கவிதை நூல்களும், உரைநடை நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் தமிழில் பலவாகத் தோன்றின. சேக்கிழாரின் பெரிய புராணத்திற்குச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம், திருப்பனந்தாள் காசி மடம், சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் முதலியன நல்ல மூலநூல் பதிப்புக்களை வெளிக் கொண்டுவந்தன. நாவலர் பதிப்பையே புதிய பதிப்பாகக் கோலாலம்பூர்ச்

www.saivamonline.com

சைவ சிந்தாந்த நிலையம் அழகுற வெளியிட்டுள்ளது. சிவக் கவிமணி திரு.சி.கே.சுப்பிரமணிய முதலியார் மிக விரிவான முறையில் உரை கண்டு பல தொகுதிகளாக வெளிட்டார். அமரர் திரு.அ.ச. ஞானசம்பந்தன் பெரிய புராணத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து பல நூல்களை வெளியிட்டார். ஈழப்பகுதியில் பெரிய புராணம் பெரிதும் நிலைகொள்ளத் தவத்திரு. ஆறுமுக நாவலர் எழுதிய பெரிய புராண சூசனம் துணை நின்றது. அவற்றின் திறம் விரிக்கின் பெருகும்.

❀

www.saivamonline.com

# 3. சமயப் பணிகள்

## காப்பியப் பணி

கவிஞர்கள், பெரிதும் சமூக நோக்குப் படைத்தவர்கள். தம் படைப்பின்வழி, சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற பெருநோக்கு தமிழ்க் கவிஞர்கள்பால் நிறைந்து நின்றது. காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளையும் கற்பாரை அடையச் செய்ய வேண்டும் எனப் பிற்காலத்தார் இலக்கணமும் வகுத்தனர். காப்பியம் உணர்த்தும் தலையாய ஒன்றைப் 'பாவிகம்' என்று வடநூலார் குறித்தனர். தமிழில் கவிஞர் சிலர், சில குறிக்கோள்களை முன்னிறுத்திக் கொண்டு, அவற்றை வற்புறுத்தும் நோக்கிலேயே, தம் நூலை ஆக்கினர். சிலப்பதிகாரம் அதற்கு ஒரு சான்றாக உள்ளது. பெரும்பாலான தமிழ்க் கவிஞர்கள், கதை நடத்தும் போக்கில், தம் சமூகத்திற்கு நல்லறிவு கொளுத்தும் பணியை விருப்போடு செய்துள்ளமையை அறிய முடிகிறது. இவ்வகையில், சேக்கிழார் தம் பெரியபுராணக் காப்பியத்தின் வாயிலாக நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ்ச் சமுதாயத்தை நெறிப்படுத்தும் அரிய முயற்சியை மேற்கொண்டார். அவர் காப்பியப் பணியில் சைவ சமயமும் தமிழர் சமுதாயமும் தமிழ் மொழியும் தமிழ்க் கலைகளும் பெரும் வளர்ச்சி பெற்றன.

## வரலாற்றுக் காப்பியம்

சேக்கிழார் அருளிய பெரிய புராணம், அடிப்படையில், ஒரு சமயப் பெருங்காப்பியம். தம் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தை உயர்நிலைக்கு எடுத்துச்செல்வதில், அவர் பெரு நாட்டம் கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. இறைமைக் கோட்பாட்டை ஏற்றுப் போற்றும் சமயங்கள் பலவும், நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே, தத்தம் சமய உண்மைகளை நிலை நாட்ட முயன்றன. சில நடைமுறைச் சம்பவங்களின்மேல், அவை

www.saivamonline.com

பெரிதாகக் கற்பனைகளை உலவவிட்டன. இதனால், அவற்றின் நம்பகத்தன்மை ஐயத்திற்கு உரியனவாயின. தமிழிலும், பல சமயச் சார்பு இலக்கியங்களுக்கு மேற்குறித்த நம்பகத்தன்மை இல்லாமலேயே போயிற்று. சேக்கிழாரின் பெரிய புராணம் இறைமைக் கோட்பாட்டை ஏற்றுப் போற்றியபோதும், அதன் வரலாற்றுப் பின்புலத்தால், நம்பகத்தன்மை மிக்கதாக உயர்ந்தது. தமிழில் சிறப்பித்துக் கூறப்படும் முப்பெரும் சைவச் சார்புப் புராணங்களில் பெரிய புராணத்திற்குமட்டுமே வரலாற்று உண்மை பேசும் காப்பியம் என்ற அங்கீகாரம் கிடைத்தது. நாயன்மார்கள் வாழ்ந்த காலம் தொடங்கி, தம் காலம் வரையிலான, ஏறத்தாழ ஓர் ஆயிரம் ஆண்டுக்காலத் தமிழ்நாட்டுச் சைவ - சமய வரலாற்றைச் சேக்கிழாரின் பெரிய புராணம் பதிவு செய்து நிற்கிறது. நம்பகமான, ஒரு வரலாற்றுப் பதிவைப் பெரியபுராணத்திற்கு இணையாகப் பதிவு செய்த தமிழ் நூல் வேறு ஒன்றும் இல்லை.

## வாய்ப்புகள்

சோழப் பேரரசர்களின் அவையில், முதலமைச்சராகப் பணியாற்றிய வாய்ப்பு, சேக்கிழாருக்கு நாயன்மார் வரலாறுகளைத் தொகுப்பதில் பெரிதும் உதவியாக அமைந்திருக்க வேண்டும். அறுபத்து மூன்று நாயன்மார்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, சைவப்பணியாற்றிய இடங்கள் பலவற்றையும், சேக்கிழார், நேரில் சென்று காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார். நாயன்மார்கள் வாழ்ந்த நாட்டுப் பிரிவு, நகர் அமைப்பு, குலமரபு, குடிமரபு முதலியனவற்றைப் பதிவு செய்வதில் அவர் நிகழ்த்திய கள ஆய்வு முயற்சிகளைப் பெரியபுராணப் பதிவுகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சேக்கிழாரின் வரலாற்றுப் பார்வையின் சிறப்பினை, நாம் அறிந்து மகிழப் பெரிய புராணத்துள், அளவற்ற பதிவுகள் நிறைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் காணலாம்.

## வரலாற்றுப் பதிவுகள்

மெய்ப்பொருள் நாயனார், அறுபத்து மூவருள் ஒருவர். அவர் அருள் வரலாறு தொடங்கும் முதற்பாடலிலேயே சேக்கிழார்,

> **" சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி**
> **மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான் "**

என நாயனாரின் நாடு, நகர், மரபுகளைப் பதிவு செய்து காட்டுகிறார். அவர் நாடு சேதி நாடு என்றும், அதன் தலைநகர் திருக்கோவலூர்

www.saivamonline.com

என்றும், அவர் மலைநாட்டு அரசர் மரபாகிய 'மலாடர்' மரபில் வந்தவர் என்றும், மேற்குறித்த பதிவு வரலாற்றை அறியத் துணையாகிறது. அமர்நீதி நாயனார் வரலாற்றுத் தொடக்கத்தில்,

" சீரில்நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமை சேர்பதி பழையாறை "

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. அமர்நீதி நாயனார் பிறந்த பழையாறை, பொன்னி நன்னாடு என்று பெயர் பெற்ற காவிரி வளங்கொழிக்கும் சோழநாடு என்பதும், பழையாறை மலர்ப் பொழில்களால் சூழப்பட்டிருந்தது என்பதும், தேர் ஓடும் அகன்ற வீதிகள் கொண்டது என்பதும், வரலாற்றுப் பெருமை மிக்கது என்பதும் இப்பாடல்வழி அறியவருகின்றன.

**அகச்சான்று காட்டல்**

குங்குலியக் கலய நாயனார், பிறந்த ஊர் திருக்கடவூர். சமய வரலாற்றில், தம் அன்பராகிய மார்க்கண்டேயர்மேல் வந்த எமனைச் சிவன், காலால் உதைத்துக் காத்தருளிய தலம், திருக் கடவூர் என்று குறிக்கப்படும். ஆட்சியாளர் சிறப்பு உரைப்பது போல், சேக்கிழார், சில ஊர்களுக்குச் சமய வரலாற்றுச் சிறப்புக்களையும் உரைத்துச் செல்வார்.

" தோய்ந்த நீள் சடையார் பண்டு தொண்டர் மேல் வந்த கூற்றைக்
காய்ந்த சேவடியார் நீடி இருப்பது கடவூராகும் "

என்ற பாடல் வரிகளில், மேற்குறித்த சமய வரலாற்று உண்மை சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைப் போலவே, திருஞானசம்பந்தர், திருக்காளத்தி ஆலயத்துள் புகுந்து, சிவனை வணங்கி எழுந்து, தம் இரு கைகளையும் தலைமேல் கூப்பி நின்றதும், அவர் கண்களில், அன்பே வடிவாக வாழ்ந்திருந்த கண்ணப்ப நாயனார் திருமேனி பதிந்தது என்று சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தில் ஒரு பதிவை அமைக்கிறார்.

" சூழ்ந்து வலம்கொண்டு இறைவர் திருமுன்பு எய்தித்
தொழுது தலைமேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்து எழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார் "

என்ற வரிகளில் திருக்காளத்தி, கண்ணப்ப நாயனார் வாழ்ந்திருந்த ஊர் என்பதும், ஞானசம்பந்தர் காலத்திலேயே காளத்திநாதன்

www.saivamonline.com

சந்நிதியில் கண்ணப்ப நாயனார் திருமேனி அமைந்திருந்தது என்பதையும், சிவனை வணங்கி எழுந்த சம்பந்தர், கண்ணப்பர் திருமேனி கண்டு, மீண்டும் வீழ்ந்து, அவரை வணங்கினார் என்பதும் தெரியவருகின்றன.

## குலமரபு காட்டல்

நாடு நகரப் பதிவுகள், ''சிவத்தல வரலாற்றுப் பின்னணிகள் பேசுவது போன்றே, சேக்கிழார், பல நாயன்மார் வரலாறுகளில், அன்னார் குலம், குடி மரபுகளையும் பதிவு செய்துள்ளார். திருத்தொண்டத் தொகையும் திருத்தொண்டர் திருவந்தாதியும் வழங்கிய சிறு குறிப்புக்களின்மேல் சேக்கிழார் அரிதின் முயன்று, தேடி, நாயன்மார் குலமரபுகளை ஒளியூட்டுகின்றார். சாதி, குல பேதம் பாராட்டும் நோக்கம் சிறிதும் இன்றி, வரலாற்றுப் பதிவுக்குத் தேவைப்படுவனவற்றைமட்டுமே சேக்கிழார் எடுத்துரைக்கிறார். திருநீலகண்டர் என்ற பெயரில் நாயன்மார் இருவர் இருப்பதால், வேறு பிரித்துக் காட்டச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் திருத்தொண்டத்தொகையில் 'திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்' என்று குலமரபு சுட்டிச் செல்கிறார். சேக்கிழாருக்குப் பிறப்பால் வரும் பேதமின்றி, அனைத்துச் சாதியினரும் சிவனுக்குத் தொண்டு செய்து ஒரு குலமாக வாழ வேண்டும் என்ற பெருநோக்கு உண்டு. அந்நோக்கம் நிறைவேறத் தேவையான அளவே, அவர் நாயன்மார் குலமரபுகளைப் பதிவு செய்கிறார்.

## நனி நாகரிகம்

சுந்தரர் 'குயவர்' என்று குறித்த திருநீலகண்டரைச் சேக்கிழார் 'வேட்கோவர் குலத்து வந்தார்' என்று செம்மைப்படுத்துகின்றார். இயற்பகை நாயனாரை, சாதிப்பெயர் ஒன்றும் சுட்டாது, வருண அடிப்படையில், 'அக்குலப்பதிக் குடி முதல்வனார்' எனவே காட்டி நிறைகிறார். விறல்மிண்ட நாயனாரை, 'அப்பொற் பதியிடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்' என்று பொதுப்பட 'வேளாளர்' என்று சுட்டுகின்றார். வேளாளர் சிலரைச் சூத்திரக் குடியினர் என்று குறிக்கும் போக்கும் பெரியபுராணத்துள் உண்டு. 'ஆயர் குலத்தை விளக்கிட வந்து உதயம் செய்தார்' என்று ஆனாய நாயனாரை 'ஆயர்' என்று சுட்டுகிறார். நந்தனார் வாழ்ந்த இடத்தைப் 'புலைப்பாடி' என்றும், 'கடைஞர் இருப்பு' என்றும் பதிவு செய்யும் சேக்கிழார், அவரை 'ஊர்ப் புலைமை ஆன்ற தொழில் ஆயத்தார்' என அறிமுகப்படுத்துகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார் சடையனாரை 'மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை

www.saivamonline.com

செய்யும் வேதியர்' என்று குறித்து நிற்கிறார். பூசலாரை 'அருமறைமர'பில் வந்தவர் என்று சுட்டுகின்றார். பிற்காலத்தார் குலமரபு பற்றிப் பேசிய சாதியச் சுட்டுக்கள் பலவும் சேக்கிழாரால் நனி நாகரிகமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் உற்று நோக்கத்தக்கது.

## சமயப் போராட்டங்கள்

சேக்கிழார் வாழ்ந்திருந்த கி.பி. 12-ஆம் நூற்றாண்டில், வைதிக சமயங்களாகிய சைவமும் - வைணவமுமே சிறப்புற்று நின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், தண்டியடிகள், கணம்புல்ல நாயனார் முதலியோர் நிகழ்த்திய போராட்டங்களால், புறச் சமயங்கள் என்று சுட்டப்பட்ட சமணமும் பௌத்தமும் தலை சாய்ந்து தேய்ந்தன. நாயன்மார் வரலாறுகளை விரித்துரைக்கும் போக்கில், அவர்கள் காலத்தில் நிலவிய சமயங்களின் நிலை குறித்தும் அவை தம்முள் நிகழ்த்திய போராட்டங்கள் குறித்தும் உரிய பதிவுகளைச் சமய வரலாற்றைப் பிற்காலத்தார் அறிந்து கொள்ளுமாறும் சேக்கிழார் பல பதிவுகளைப் பெரிய புராணத்துள் அமைத்துள்ளார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், தமிழகத்தின் வடபகுதி யாகிய பல்லவர் ஆட்சிப் பகுதிகளில் அரசியல் சமயமாகச் சமணம் நிலைகொண்டிருந்தது. தென்பாண்டி நாட்டில் பாண்டியன் சமண குருமார்கள் அறிவுரை கேட்டே ஆட்சி செய்திருந்தான். திருப்பாதிரிப் புலியூரிலும் மதுரையை அடுத்த ஆனைமலைப் பகுதிகளிலும் சமணர்களும் சமண மடங்களும் நிலவியிருந்தன. மதுரையை அடுத்தும் சிதம்பரம் பகுதியிலும் பௌத்தர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்து சமயப் போராட்டங்களிலும் வாக்குவாதங்களிலும் ஈடுபட்டு வந்தனர். 'காபாலிகம்' முதலிய வட புலத்துச் சமயத்தாரும் தமிழகத்தில் ஆங்காங்கே வாழ்ந்திருந்தனர். குறிஞ்சி நிலப் பகுதிகளில் முருக வழிபாடு சிறந்திருந்தது. இம் மதங்கள் பலவும் இடையறாது, ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு, சமூக அமைதிக்கு இடையூறு செய்துவந்தன. ஆட்சியாளர்கள் - அமைச்சர் சொற்கேட்டு ஆளாது, மத குருமார்களின் ஆலோசனை பெற்று, மதச்சார்பு அரசியல் நிகழ்த்தி வந்தனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் நிகழ்த்திய போராட்டங்களுக்குப்பின் சமணமும்-பௌத்தமும், வலியிழந்தன. வைதிக சமயமாகிய சைவம், பெரிதும் சீர்மை பெற்றது.

## அகச்சான்று காட்டுதல்

தமிழகச் சமய வரலாறு குறித்த மேற்காணும் உண்மைகள் யாவும் சேக்கிழாரால் பெரியபுராணத்துள் விரிவாகப் பதிவு செய்யப்

www.saivamonline.com

பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் தம் தாய்ச் சமயமாகிய சைவத்தை விடுத்துச் சமணம் சார்ந்த செய்தியைச் சேக்கிழார்,

**" நல்லாறு தெரிந்து உணர நம்பர் அருளாமையினால்**
**கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம் குறுகினார் "**

என்று குறிப்பிடுகிறார். கொல்லாமை என்பதைத் தம் சமயத்தின் உயிர்நாடிக் கொள்கை என்று கூறிக்கொண்டு, கொலைத் தொழிலை மறைந்து செய்யும் கொடியவர்களாகச் சமணர்கள் அக்காலை வாழ்ந்திருந்தமை இக்குறிப்பால் புலனாகிறது. சமணக் குருமார்களின் பொய்யுரை கேட்டு, நாடாண்ட பல்லவனும்,

**" அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று**
**மருள் கொண்டு "**

வாழ்ந்திருந்தான் என்பதைப் பெரிய புராணம் இனம் காட்டுகிறது. சீர்காழியில் திருஞானசம்பந்தரின் பெற்றோர் புறச் சமயங்களை அழித்தொழிக்கும் திறம் கொண்ட பிள்ளை ஒன்று வேண்டும் என்று சிவனை நினைவு கூர்ந்து விண்ணப்பித்துள்ளனர்.

**" ....பரசமயம் நிராகரித்து நீறாக்கும்**
**புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார் "**

எனவரும் பெரியபுராணத் தொடர் சிந்திக்கத்தக்கது.

## சமண - பௌத்தம்

சமணத்திலிருந்து, மீண்டும் தம் தாய்ச்சமயத்திற்கு மீண்ட திருநாவுக்கரசருக்குப் பல்லவ மன்னன் பல கடும் தண்டனைகளைத் தந்தான். சிவனருளால் நாவுக்கரசர் அவற்றினின்றும் உய்ந்தார். பல்லவன் மனம் திருந்திச் சமணம் விடுத்துச் சைவம் சார்ந்தான். சமணப் பள்ளிகளும் பாழிகளும் இடிக்கப்பட்டன. இதனைச் சேக்கிழார்

**" வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த**
**காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்**
**பாடலிபுத்திரத்தில் அமண்பள்ளியொடு பாழிகளும்**
**கூட இடித்துக்கொணர்ந்து குணபர ஈச்சரமெடுத்தான் "**

எனப் பதிவு செய்துள்ளார். திருஞானசம்பந்தர் புராணத்தில், பாண்டியன் மனம் மாறி, சைவம் மீண்டபின் சமணக் குருமார்கள் பலரும் கழுவேறி மாய்ந்தமை குறிக்கப்பட்டுள்ளது. திருவாரூரில் கண்பார்வையற்ற தண்டியடிகள் என்ற சிவனடியார் நிகழ்த்திய, கோயில் திருக்குளம் தூர்வாரும் பணிக்குச் சமணர்கள் இடையூறு

www.saivamonline.com

செய்தமையும் சேக்கிழார் பதிவில் உள்ளது. சோழ நாட்டுப் போதிமங்கையில் புத்த நந்தி என்பாரொடு திருஞான சம்பந்தர் வாதமிட்டு வென்ற செய்தியும் பதிவில் உள்ளது.

## போராட்டம் ஏன்?

சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான, நாயன்மார்களின் போராட்டங்கள் - வெறும் சமயச் சண்டைகள் அல்ல என்பதும் தமிழ்மொழி, கலைகள், கலாசாரக் கூறுகள், பண்பாடு, பெண்மை இவற்றுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டிருந்த, அன்னாரை வீழ்த்துவதன்வழி மீண்டும் தமிழகத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கையின் வழிப்பட்டதே என்பதைச் சேக்கிழார் தம் நூலுள் தெளிவுபடுத்தியுள்ளார். சமண, பௌத்தர்கள் தமிழ்மொழி நிலை கொண்டிருந்த பகுதிகளில் பாலி, மற்றும் சமஸ்கிருத மொழிகளை, நிலைபெறச் செய்தனர். தமிழ்க் கலைகளாகிய இசையும் - கூத்தும், காமத்தைத் தூண்டுவன என்று மக்கள்முன் பேசினர். புனித நீராடல், தல யாத்திரை, உருவ வழிபாடு என்று வாழ்ந்துவந்த தமிழர் கலாசாரங்கள் ஏளனப்படுத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டுக் கூறுகளாகிய திருவிழாக்கள் - கேளிக்கைகள் - நகை அணிந்து அலங்கரித்துக்கொள்ளல் யாவும் இகழப்பட்டன. பெண், காமத்தைத் தூண்டுபவளாகவும், தவத்துக்கு எதிரியாகவும் சித்திரிக்கப்பட்டாள். பெண்ணாகப் பிறந்த பிறவியில் வீடுபேறு இல்லை என்றும் மீண்டும் ஒரு முறை அன்னார் ஆணாகப் பிறந்தே வீடு பெற இயலும் என்றும் அவர்களால் கூறப்பட்டது. தேவாரங்களின் துணையோடு இவற்றிற்கெல்லாம் சேக்கிழார் தம் நூலுள் பரவலாக மறுப்புரைத்துக் காப்பியம் நடத்தியுள்ளார்.

## அரிய சான்றுரைகள்

சேக்கிழாரின் மேற்குறித்த மறுப்புரைகளுக்கான சில அரிய தொடர்களை இங்கே எடுத்துக்காட்டுவது பொருத்தமாக அமையும். தமிழ் மொழியின் மேன்மையைச் சேக்கிழார்.

**" ஞாலமளந்த மேன்மைத் தமிழ் "**

என்றும்

**" அசைவில் செழும் தமிழ் வழக்கே**
**அயல் வழக்கின் துறை வெல்ல "**

என்றும் குறித்துக் காட்டுகின்றார். திருஞானசம்பந்தரைச் 'சந்தமுத் தமிழ் விரகர்' என்றும், 'இயலிசைத் தலைவனார்' என்றும் குறிக்கிறார். திருநாவுக்கரசரைத் 'தமிழ் மொழித்தலைவர்' என்றும்,

www.saivamonline.com

'இன்தமிழ்க்கு மன்னனான வாகீசத் திருமுனி' என்றும் சிறப்பிக்கிறார். இசைக்கலை மேன்மையை, 'அன்பு ஊறி மிசைப் பொங்கும் அமுத இசை' என்றும், 'எவ்வுயிரும் என்பூடு கரைந் துருக்கும் இன்னிசை' என்றும் சிறப்பித்துரைக்கிறார். தமிழ்க் கலாசாரக் கூறுகளுள் ஒன்றாகிய விருந்தோம்பலை இளையான் குடி மாற நாயனார், மற்றும் அப்பூதி அடிகளார் வரலாற்றில் விரிவாகப் பேசுகிறார். தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஆடவர் ஒழுக்கத்தைச் சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றில் ஆடவர்கள் இல்லத்தில் இல்லாமல், பெண்டிர் மட்டும் தனித்திருக்கும் இல்லத்தில் வேற்று ஆடவர் புகுவது நாகரிகம் அன்று என்று குறித்துக் காட்டுகிறார். ஓர் ஆதீனத் தலைவருக்கு நிகராகப் பிற மதத்திலிருந்து திரும்பும் ஒருவருக்கு உலகத்தார் பார்வையில், வாழ்விழந்தவராகக் காணப்படும் ஒரு பெண், திருநீறு கொடுத்து, வரவேற்கும் உரிமை உடையவர் என்பதை உறுதி செய்கிறார். இவற்றின் திறமெல்லாம் பின்னர் விரிவாகப் பேசப்படவுள்ளன.

## வரலாற்றுப் புலம்

மேலும், பெரியபுராணத்துள் காணப்படும் பல அரிய வரலாற்றுப் பதிவுகள், இந்நூலை, ஒப்பற்ற ஒரு வரலாற்றுக் காப்பியம் என்று மெய்ப்பிக்கின்றன. தில்லைப் பொன்னம்பலத் திற்கு ஆதித்த சோழன் பொன் வேய்ந்தான். இமயநெற்றியில், சோழன் ஒருவன், புலிக்குறி பொறித்தான். ஒரு காலத்தில் பெண்ணையாறு, துறையூரின் தெற்கில் பாய்ந்து சென்றது. காஞ்சிபுரத்தைக் கரிகாலன் புதுக்கி அழகு செய்தான். சிறுத்தொண்ட நாயனார், வடபுலத்து வாதாபி நகரை வென்று தீயூட்டி மீண்டார். இவையும் இவைபோல்வன பிறவுமாகிய குறிப்புக்கள் பலவும் ஒருங்கிணைந்து, சேக்கிழாரின் பெரியபுராணத்தை வரலாற்று ஆய்வுக்கு இசைவுடையதாக ஆக்கி நிற்கின்றன. இத்தகு வரலாற்றுக் காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு, சேக்கிழார், தம் தாய்ச் சமயமாகிய சைவ சமயவளர்ச்சிக்கு, ஆற்றியுள்ள அரும்பணிகளை முதற்கண் இனம் பிரித்துக் காணலாம்.

## நம்பிக்கை ஊட்டுதல்

கடவுட் கோட்பாட்டை ஏற்றுப் போற்றும் உலகச் சமயங்கள் பலவும் தத்தம் சமயக் கடவுளரின் அளப்பரிய கருணையையும், அருளிப்பாட்டையும் மக்கள் அறிந்து, ஈடுபாடு கொண்டு, தம் சமயத்தை நோக்கி வருமாறு, பல கதைகளைப் படைத்துக்

www.saivamonline.com

கொண்டன. அவற்றுள் பல, உண்மை நிகழ்வுகளின்மேல் பின்னப்பட்டன. சில, கற்பனையாக ஓர் உண்மையை உணர்த்தப் படைத்துக்கொள்ளப்பட்டன. வேறு சில, சிறு உண்மைச் சம்பவத்தின்மேல், விரிவான கற்பனை கலந்து வடிக்கப்பட்டன. கட்புலனுக்கு வாராத கடவுளை உணர்வதும் அறிவதும் கற்றவர்களுக்கேகூட எளிதானவை அல்ல. கல்வி அறிவற்ற, பாமரர்களைச் சமயத்தின்பால் ஈர்ப்பது பெரிதும் அரிதான செயல். ஆயினும், மேற்குறித்த இரு திறத்தாருக்கும் சமய வாழ்வில் ஈடுபாடும் நம்பிக்கையும் உண்டு. அவற்றை உறுதி செய்ய, இன்னார் ஒருவர், இன்னதைச் செய்து, இறையருள் பெற்றார் என்றோ இவ்வாறு நடந்துகொண்டவர்களை நாடி, இறைவன் அருள் செய்தான் என்றோ கதை ஒன்றை முன்னிறுத்தும்போது அது சாத்தியம் ஆகிறது. கற்றவர்கள், நம்பிக்கை இருந்த போதும் கதை நிகழ்வுகளின் மேல் வினா எழுப்புவர். கல்லாதார், நம்பிக்கையோடு ஏற்றுப் போற்றுவர்.

## சேக்கிழார் சாதனை

சைவம் செய்த நல்வினைப் பயனாகத் தமிழகத்தில் சிவனருள் பெற்றுச் சிறந்த, நாயன்மார் சிலரைப் பட்டியலிட்டு வழங்கினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் குறித்த, அடியவர் வரலாறுகளை வெறும் கதைகளாக விரித்துரைக்காது, சமய வளர்ச்சிக்குரிய கூறுகளையும் உடன் இணைத்துச் சேக்கிழார் சைவ சமயத்திற்குப் பெரும் ஆக்கத்தைச் சேர்த்தார். முற்றிலும், அறிவாராய்ச்சிக்கு உட்பட்டதாகச் சமயத்துறையில் கதை புனைதல் இயலாது. எனினும், 'கடவுள் நம்பிக்கை உடையவராய்த் தம் சமயத்தை ஏற்றுப் போற்றுவாருக்கு இசைவுடையனவாகச்' சேக்கிழாரின் கதைப் புனைவுகள் அமைந்தன. சில மானுட எத்தனத்துக்கு உட்பட்டன. சில, இறைமைக் கோட்பாட்டுக்குமட்டுமே இசைந்து வருவன. என்றாலும், அவற்றுள்ளும் முரண்படாது ஏற்றுப் போற்றுமாறு சைவ சமய உண்மைகளை இணைத்துச் சேக்கிழார், பெரும் சாதனை புரிந்துள்ளார்.

## முதல் நூல்

கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குப் பின், தமிழகத்தில் சைவ சமயம் பெற்ற பன்முக வளர்ச்சியில் சேக்கிழாரின் கொடை பெரிது. கற்பாரைச் சமய உணர்வோடு ஈர்த்து நின்று உயர்த்தும் அரிய கலை, சேக்கிழாருக்குக் கைவந்த ஒன்று. பக்திச் சுவை இழையோடும்

www.saivamonline.com

அவர்தம் கதைகளில், சமய உணர்வு படைத்தோர் கரைந்து நெகிழ்வர். சமய உண்மைகளோடு தனிமனித மேம்பாட்டுக் கூறுகளும் சமுதாய ஒழுங்குகளும் சேக்கிழாரால் கலந்தே பெரியபுராணத்துள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தைத் தவிரப் பிற மாநிலங்களிலோ பிற சமயங்களிலோ பெரியபுராணத்திற்கு நிகரான ஒரு கதை நூல் இல்லை. இது தமிழ் நாட்டுச் சைவர்களின் தவம்! சேக்கிழாரின் செந்தமிழ்க்கொடை! சேக்கிழார், இந் நூலைத் தாமே முயன்று, முதல் நூலாகப் படைத்தார். தழுவல் நூல் இது என்றோ, வேறு ஒரு மொழியிலிருந்து இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டது என்றோ கதைபுனைய முயன்றோர் தோற்றனர்.

## சேக்கிழாரின் வெற்றி

இத்தகு பெருமைமிக்க தம் படைப்பாகிய பெரிய புராணத்தின் வழி சேக்கிழார் சைவ சமயப் பன்முக வளர்ச்சிக்கு அரிய கொடைகள் பலவற்றை வழங்கினார். தேவார மூவர் வருகைக்குப்பின் தமிழகத்தில் சிவாலயங்கள் புதிய எழில் பெற்றன. மூவர் பாடிய தலங்கள் என்று அவற்றைத் தனி எடுத்துச் சைவர்கள் போற்றத் தலைப்பட்டனர். நித்திய பூசைகளும் மாத வழிபாடுகளும் பெருந் திருவிழாக்களும் கோயில்கள்தோறும் நிகழ்த்தப்பட்டன. சேக்கிழார் காலத்துக்கு முன்வரை இல்லாத சிறப்பாகப் பெரியபுராண அரங்கேற்றத்திற்குப் பின், சிவாலயங்களில் செயற்கரிய செயல் செய்து பெரியரான நாயன்மார்களின் திருமேனிகள் எழுந்தருளச் செய்யப்பட்டு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. சைவ சமய வரலாற்றில் இதனை ஒரு பெரிய மாற்றம் என்றே கூறவேண்டும். ஏன் எனில், சில குலத்தில் பிறந்தவர்களைக் கோயிலுக்குள் நுழைந்து சிவனை வழிபடுவதற்கே மறுப்புத் தெரிவித்தவர்கள் மத்தியில், அதே குலத்தில் உதித்த ஒருவர், நாயனாராகி, ஆலய வளாகத்தில் வணங்கத்தக்கவராக உயர்ந்தமை சேக்கிழாரின் வெற்றி என்றே கருதப்பட வேண்டும்.

## அடியவர் வழிபாடு

சிவ வழிபாடுமட்டுமே சிறந்திருந்த தமிழகத்தில் சேக்கிழாரின் வருகைக்குப்பின் அடியவர் வழிபாடும் சிறக்கலாயிற்று. திருநாவுக்கரசர் திருநாமம் ஒன்றைமட்டும் பற்றி நின்று, ஓர் அப்பூதி அடிகள் திருவருள் பெற்றார். திருஞானசம்பந்தருக்கு யாழ்மீட்டிய, தாழ்த்தப்பட்ட குலத்தவராகக் கருதப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் கருவறைவரை சென்று யாழ் மீட்டும் பேறு

www.saivamonline.com

வாய்த்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நட்புத் திறத்தால் சேரமான் பெருமாள் நாயனார் உடலோடு கயிலை சேரும் வாய்ப்பு அமைந்தது. அடியார்களுக்கு உணவளித்த அன்பில், இளையான் குடிமாறர் சிவனருள் வாய்க்கப்பெற்றார். பசித்தோர்க்குச் சோறிட்ட காரைக்கால் அம்மையார் சிவனால் 'அம்மா' என்று அழைக்கும் பேறு பெற்றார். சிவ வழிபாட்டுக்கு இணையாகக் கால்கொண்டு வளர்ந்த பெரிய புராண அடியவர் வழிபாடு, சைவ சமய வளர்ச்சியில் மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்தது. இறைவன் அருள்பெற, பக்தி ஒன்றே வழி என்று கூறப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தில் வேறு சில வாயில்களும் இறையருளுக்கு உண்டு என்று கண்டு கொள்ளப்பட்டது.

## புதிய சிவ நெறி

கடைச் சங்க காலம்வரை, தமிழர் வழிபாட்டில் அன்பே முதன்மை பெற்றிருந்தது. புலால் உணவும் முருகனுக்கு ஆடு களைப் பலியிடும் பழக்கமும் ஓரளவு வழக்கில் இருந்திருக்கின்றன. வைதிக சமயம், பெரு வேள்விகளை முன்னிறுத்தி உயிர்களைப் பலியிட்டு அவற்றின் இரத்தங்களை வேள்வித் தீயில் இட்ட செயல்களில் தமிழ் மக்கள் முழு உடன்பாடு கொண்டிருக்கவில்லை. அக்காலை, வேத வேள்விகளுக்கு எதிராகவே, குறிப்பாக உயிர்க்கொலைகளைக் கண்டித்தே, சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் கால் ஊன்றின. அன்பு வழிபாட்டில் விருப்பம் கொண்டிருந்த பண்டைத் தமிழர்களுக்கு அன்பு வழி காட்டிய, சமண பௌத்த மதங்கள் விருப்பமுடையனவாயின. வேத வேள்விகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பில் தமிழ் மக்களை மீண்டும் ஈர்க்க, வைதிக மதங்கள் உயிர்க் கொலை விடுத்துக் கருணையை மூலமாக ஏற்றுப் போற்றத் தொடங்கின. சமண - பௌத்த மதவாதிகளின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறான செயற்பாடுகளால், காலப்போக்கில் தமிழர்கள் மீண்டும் அவற்றை விடுத்து வைதிக மதங்களை ஏற்கத் தொடங்கினர். சமண, பௌத்தர்களின் தெளிவற்ற கடவுள் கோட்பாடுகளும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையனவாக அமையவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திருஞானசம்பந்தர் வருகையால், வைதிக மதம், புதிய உயிர் இரக்கக் கோட்பாட்டுடன் தமிழகத்தில் நிலைபெறுவதாயிற்று. உயிர்ப்பலி கலவாத, ஒரு புதிய சிவ நெறி, கருணையே மூல மந்திரம் என்று கொண்ட நன்னெறி தமிழகத்தில் உருக்கொண்டது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

www.saivamonline.com

வேதவழிப்பட்ட சிவநெறியில் தாங்கள் இணைந்து நின்று, அந்நெறியைத் தமிழகத்தில் விதைத்துச் சைவப் பயிர் வளர்க்கத் தொடங்கினர்.

## நான்கு வழிமுறைகள்

புத்துருக் கொண்ட சைவ சமயவளர்ச்சிக்குப் பெரியபுராணம் வாயிலாகச் சேக்கிழார் நான்கு வழிமுறைகளை முன் வைத்தார். திருமூலதேவ நாயனார் முதலிய சைவசமய முன்னோர் காட்டிய நெறிமுறைகளை உள்வாங்கிக்கொண்ட சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை முன்னிறுத்தி, உயிர் இரக்கம், மனித நேயம், மனிதப் பண்பாடு முதலிய மூன்றோடும், வழிபாட்டையும் ஒன்றாக இணைத்துச் சைவ சமய வளர்ச்சிக்குப் புதிய வேகத்தை ஏற்படுத்தினார். கோயிலுக்குள்மட்டுமே வாழ்ந்திருந்த சடங்குச் சமயமாகிய சைவம், தளைகளை உடைத்துக்கொண்டு, சமூக வீதிக்கு வரவும், உயிர் இரக்கம் முதலிய செயல்களால் சைவம் புத்தழகு பெறவும், மனித நேயம் முதலியவற்றால் சைவம் உயிர்ப்புடையதாக மாறவும் சேக்கிழார் தம் நூலைப் பயன் கொண்டார். சைவ சமய வளர்ச்சிக்கான கூறுகளைக் கோயில்களை விடுத்து, வீதிகளில் தேடவேண்டும் என்ற எண்ணம் சேக்கிழாராலேயே முதன்முதல் தோற்றம் கொண்டது.

## பக்தி மார்க்கம்

சேக்கிழார், தம் பெரியபுராணத்துரைக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் 'தொண்டர்' என்றும், அவர்தம் பணிகளைத் 'தொண்டு' என்றும் குறிக்கிறார். பெரிய புராணத்தில் ஊடுருவி நிற்கும் தலைமைப் பண்பு, 'தொண்டு' என்பதே. தொண்டர் புராணம் என்ற குறியீடும், சேக்கிழார், 'தொண்டர் சீர் பரவுவார்' என்று போற்றப்பெற்றதும் இங்கே நினைவுகூரத் தக்கன. சமூகத்தில் பிறந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் தொண்டு செய்யும் கடமை உடையவன். சேக்கிழார் நோக்கில் அத் தொண்டு இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். ஒன்று, சிவத் தொண்டு. மற்றொன்று, சிவன் பெயரால் மனித குலத்திற்குச் செய்யும் தொண்டு. சிவத்தொண்டு என்பது சிவாலயத்தைச் சார்ந்து நின்று, ஆலயப் பணிகளைச் செய்தல். ஆலய வளாகத்தை, திருவீதிகளைத் தூய்மை செய்தல், மலர் பறித்து மாலை கட்டித் தருதல் முதலான தொண்டுகள். இதனைச் 'சரியை' நெறி என்று சாத்திரக்காரர்கள் கூறுவர். இதனை, ஒரு நோக்கில், 'பக்தி மார்க்கம்' என்றும் கூறலாம்.

www.saivamonline.com

இத்தகு சரியைத் தொண்டு செய்தோர் பலர், பெரிய புராணத்துள் உள்ளனர்.

## தொண்டர் இலக்கணம்

மேற்குறித்த, சரியைப் பணி செய்வாரை, 'அடியார்' என்றும், அவர்கள் செய்யும் பணி, 'இறைபணி' என்பதால், அன்னார் கூட்டத்தைத் திருக்கூட்டம் என்றும் சேக்கிழார் குறிப்பர். அத்தகு அடியார்கள் என்பவர் எத்தகையவர், அவர்தம் இலக்கணம் என்ன என்பனவற்றையும் சேக்கிழார் இனம் காட்டுவர். சிவத்தொண்டர் என்பாருக்குச் செல்வம்பற்றிய மகிழ்ச்சியோ, வறுமை பற்றிய துன்பமோ சிறிதும் இல்லை. மண் ஓட்டையும் பொன்பாளத்தையும் வேறுபாடின்றி ஒன்றெனக் கருதும் இயல்பினர். நெஞ்சில் பெருக்கெடுக்கும் அன்பால் சிவனை வழிபடுவதே அன்றி, அவ்வழிபாட்டின் பயனாக வீடுபேற்றையும் விரும்பாதவர். அன்னாரின் அணிகலன்கள் எல்லாம் உருத்திராக்க மாலைகளே. கந்தை ஆடைகளே அவர்கள் உடுப்பன. இறை பணியல்லாது, வேறு ஒரு குடும்பப் பாரம் இல்லாதவர். பரிவோடு கூடிய அன்பு வடிவினர்; யாதொன்றையும் பெற இயலவில்லையே என்ற குறை ஒன்றும் இல்லாதவர். இத்தகு இலக்கணம் படைத்து நின்ற அடியர் பலர் பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளனர்.

## அகச்சான்று காட்டுதல்

மேற்குறித்த இலக்கணங்கள் இரண்டு பாடல்களால் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் "

என்ற தொடருக்கு இலக்கணமாகப் பலர் நின்றாலும், திருநாவுக்கரசர், நம் நெஞ்சத்தில் வருகிறார். திருப்புகலூரில், இறைவன் அளித்த பொன்னையும் மணியையும் கைகளால் தீண்டாது, உழவாரத்தால் எடுத்து வீசி எறிந்தார் நாவரசர். சேக்கிழார் அவர் நிலைமையை,

" புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை "

என்று குறிக்கிறார். தொண்டர் இலக்கணமாகச் சேக்கிழார்,

www.saivamonline.com

" கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் "

எனக் குறித்தமைக்கு ஏற்ப வாழ்ந்த காரைக்கால் அம்மையார்,

" இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும். "

எனச் சிவனிடம் விண்ணப்பித்ததாகச் சேக்கிழார் சுட்டுகிறார்.

" ஆரங் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர் "

என்ற அடியார் இலக்கணம்,

" சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் "

என்ற நாவரசர் உருவ வருணனையுடன் இணைதல் சிந்திக்கத் தக்கது.

" ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ "

என்ற தொண்டர் இலக்கணம் கண்ணப்பர் இயல்புரைக்கும்

" அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ "

என்ற தொடரால் இனங்காட்டப்படுகிறது.

## வளர்ந்த மனநிலை

இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது, ஒருவகையில், மனித குலத்திற்குச் செய்யும் தொண்டாகவே வந்து நிறையும். ஆலயத்தை அலகிட்டு, மெழுக்கிட்டுத் தூய்மை செய்தால், வழிபட வருவாருக்கு அவை உதவியாக அமையும். உழவாரத்தால் நாவுக்கரசர் தில்லைத் திருவீதிகளைத் தூய்மை செய்தார் என்றால், வீதி வழி நடப்பவர் அனைவருக்கும் அது நன்மை பயப்பதாகவே அமையும். திருக்கடவூர் ஆலயத்தில் சிவன் சந்நிதியில், குங்குலியக்கலயர் தூபப் புகை எடுத்து நின்றார் என்றால், வழிபட வருவார் மனம் மகிழ, மணம் நுகர்வர் என்பதுதானே கருத்து. அரிவாட்டாயர் செந்நெல்லும், கீரையும், மாவடுவும் சிவனுக்கு நாள்தோறும் படையலிடும் நியதி கொண்டவர் என்றால், படையலிட்ட பொருள்கள் மனிதர்களுக்குத்தானே பயன்படப்

www.saivamonline.com

போகின்றன. ஒன்றுமில்லை என்ற மனோபாவம் தொலைந்து, ஏதோ ஒன்று இருக்கிறது என்று நம்புவதும், அதனை ஒருவடிவில், உருவில், திருமேனியில் காணமுடியும் என்று நம்புவதும், நாம் செய்யும் அன்பு உபசரிப்புக்களை அது ஏற்கும் என்று உளமார எண்ணுவதும், அதனை வழிபட்டால் நலம் பெருகும் என்று உணருவதும் எல்லாம்கூட, ஒரு வளர்ந்த மன நிலை என்பது புலனாகும். இந்த அன்பு, மெல்ல மெல்லச் சமுதாயத்தின்மீதும் சக மனிதர்கள்மீதும் படரத் துணை செய்யும் என்பதும் ஏற்கக் கூடியதே.

## தொண்டில் ஊற்றம்

சரியை நெறி நின்று, கோயிற் பணி செய்வாரைப் புறக் கோலம் புனையாது, அன்னார் அடிமன உறுதியையே சேக்கிழார் பெரிதெடுத்துக் காட்டுகிறார். கரூரில் சிவகாமி ஆண்டார் என்ற ஓர் அந்தணர் வாழ்கிறார். பொழுது விடிவதன்முன் எழுவது, குளிர்ந்த நீரில் நீராடுவது, நந்தவனம் சென்று வண்டு மூசாமுன் மலர்களை விரல் நுனியால் பிரித்தறிந்து பறிப்பது, மாலை கட்டுவது, அவற்றை நாட்காலைப் பூசைக்குச் சிவாலயத்தில் சேர்ப்பது என்ற ஒரே பணியை, ஊற்றத்தோடு வாழ்நாள் முழுவதும் அவர் செய்து வருகிறார். ஒருநாள், அவர் பூக்கூடையைப் பறித்து, யானை தரை மீது தேய்க்கிறது பொறாது, சிறுபிள்ளை போல் தரைமீது புரண்டு அரற்றுகிறார் முதியவர். உலக அனுபவம் மிக்கவர்; வேறு மலர் பறித்துச் சூட்டலாம் என்று தம்மைத் தாமே சமாதானம் செய்து கொண்டிருக்கலாம். அலறிக் கூக்குரல் இடுகிறார். சேக்கிழார் சொல்ல வருவது ஒன்று உண்டு. பூத் தொண்டு இன்றியமையாதது தான்; என்றாலும், அத்தொண்டு இடையறவுபடுதல் கூடாது என்ற உறுதியும் இடையறவு பட்டுவிடும்போது கிளர்ந்தெழலும், தொண்டின் வழிவந்த மனவலிமைகள். அறவினை யாதாயினும் அவை இடையறவு படாது நிகழ்தல் வேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளம். பூசைக்குரிய நெல்லும், பிறவும், வயல் வெடிப்புகளில் சிதறிவிட, அரிவாட்டாயர் பொறாது தம் கழுத்தை அறுத்துக் கொள்ள முனையும் ஆவேசத்தில், அறம், இடையறவுபட்டுவிடுதல் கூடாது என்ற உணர்வே நாம் போற்றிக் கொள்ள வேண்டுவது.

## வழிபாட்டின் பயன்

நாகப்பட்டினத்தில் வாழ்ந்திருந்த ஒரு மீனவர் அதிபத்தர். சிவன் தாள்களில் அன்பு பூண்டவர். மீன் விற்று வரும் செல்வத்தால் வாழ்ந்துவந்தவர். தம் சிவபக்தியின் வெளிப்பாட்டை,

www.saivamonline.com

அவர் ஒரு புதிய வழியில் புலப்படுத்தினார். கடல் நடுவே பயணித்து, மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த அவருக்குச் சிவாலயம் சென்று, மலர் பறித்திட்டு வணங்கும் வாய்ப்பில்லை. நாள்தோறும், தான் வீசும் வலையில் அகப்படும் மீன்களுள் தலையாயது ஒன்றை, இறைவன் பெயர் நினைந்து, மீண்டும் கடலுள் விட்டு விடுவதையே, அவர் வழிபாடாகக் கொண்டிருந்தார். காலப்போக்கில், மீன் வளம் சுருங்கியது. வறுமை சூழ்ந்தது. மிக்க வறுமையில் வாடும் நாள்களில் ஒருநாள் வீசிய வலையில் விலை மதிக்க முடியாத பொன்மீன் ஒன்று அகப்பட்டது. அதனை எடுத்துத் தம் வறுமை நோக்காது கடலில் விடுத்தார். மறுபடியும், மறுபடியும் வீசிய வலையில், அதே பொன்மீன் மட்டுமே சிக்கியது. உடன் மீன்பிடிக்க வந்தவர்கள் சினம் கொண்டனர். தொடர்ந்து பொன்மீனைச் சிவனுக்கு என்று கடலுள் விடுத்தார். சிவன் காட்சி தந்து அருள்பாலித்தான். அதிபத்தர், அறுபத்து மூவரில் ஒருவரானார். மனிதப் பண்புகளை உறுதிபெறச் செய்யும் இத்தகு மனோபாவங்களையே, சேக்கிழார், வழிபாட்டின் பயன் என்று இனம் பிரித்துக் காட்டுகின்றார். இந்த மனநிலையும் உறுதியும் ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் கலக்கும்போது, அவை தரும் பயன்பாடு பெரிதாகும்.

## சில படிப்பினைகள்

நாயன்மார் வரலாறுகளை விரித்துரைக்கும் சேக்கிழாருக்கு அவர்களை ஒளியூட்டிக் காட்டி மனித குலத்திற்குச் சில படிப்பினைகளை வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந் திருப்பதை அறிய முடிகிறது. சமூகத்தில், சமயம் சார்ந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டிருப்போரை அதன் உண்மை உணராத சிலர் ஏளனம் செய்தல் உண்டு. சேக்கிழாரின் பெரியபுராணம், அத்தகையோரை நாண வைக்கும். சமய நாட்டமுடைய மக்கள் வாழும் நாடுகளில் மனித ஒழுக்கமும் சமூக இணக்கமும் நிறைந் திருப்பதையும், ஏனைய நாடுகளில் இவை இல்லாதிருப்பதையும் அன்னோர் அறிந்திருக்கவில்லை. தனக்கு மேல், உயர்ந்த பொருள் ஒன்று உள்ளது என்ற எண்ணமும், அது நம் செயல்களைப் பார்த்திருக்கும் என்ற உணர்வும், என்றென்றும் எங்கெங்கும் அது நமக்குத் துணையாகும் என்ற நம்பிக்கையும், மனித இனத்தை நேர்பட எடுத்துச்செல்லத் துணைபுரிவன. சேக்கிழார், இத்திறம் உணர்ந்த அறிஞர். சமயச் சார்புடைய வரலாறுகளிடையே, மானுடத்தை உயரச் செய்யும் பதிவுகள் பலவற்றை அவர் பொதிந்தே வைத்துள்ளார்.

www.saivamonline.com

## திருநீலகண்டம்

தில்லையில் மண்பாண்டம் செய்து விற்கும் குலாலர் மரபில் வந்த இளைஞர் ஒருவர் அறநெஞ்சினர். சிவ பக்தி மிக்கவர். தம்மால் இயன்ற அறமாகத் தம்மை நாடி வருபவர்களுக்கு, மண்ணால் செய்யப்பட்ட திருவோடு ஒன்றை வழங்கி வருகிறார். இறைவன் திருநாமங்களுள் ஒன்றாகிய, 'திருநீலகண்டன்' என்பதில் பேரீடுபாடு கொண்டு, அடிக்கடி அதனை உச்சரித்து வந்தவர் என்பதால், ஊரார் அவரைத் திருநீலகண்டர் என்றே அழைத்தனர். சமய வாழ்வு வாழ்வோர் தனி மனித ஒழுக்கம் காக்க அறிந்திருத்தல் வேண்டும் என்ற உண்மை அறியாத அவர், அழகும் இளமையும் இருக்கும் மனைவி இல்லத்தில் வாழவும், ஒருநாள், ஒரு பரத்தையோடு உறவாடி மீள்கிறார். குறிப்புக்களால், கணவர் பரத்தமை உணர்ந்த மனைவி, அவர், தம்மைத் தீண்ட நெருங்கும்போது, திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டு, 'எம்மைத் தீண்டாதீர்' என்று தடுக்கிறார். அக்கணத்திலேயே, கணவனார் மனம் மாறுகிறார். 'எம்மை' என்று மனைவி கூறிய காரணத்தால், அவரை மட்டும் அல்லாது, இப்பிறப்பில் வேறு எந்தப் பெண்ணையும் மனத்தாலும் தீண்டேன் என்று உறுதி பூண்கிறார். நான்கு சுவர்களுக்கு இடையே இருவரும் பல்லாண்டுகள் காமத்தை வென்று வாழ்ந்து காட்டுகின்றனர்.

## தனிமனித ஒழுக்கம்

திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை, சமயநெறி நிற்போர் தனி மனித ஒழுக்கத்தில் தலைநிற்க வேண்டும் என்று வற்புறுத்தி நிறைகிறது. 'திருநீலகண்டம்' என்ற திருநாமத்தின்மேல் கொண்ட, அச்சம் காரணமாக அல்லாது, அந்நாமத்தின்மீது கொண்ட மிகப்பெரிய மரியாதை காரணமாகவே, அவர் மனமாற்றம் நிகழ்ந்ததாகச் சேக்கிழார் இனங்காட்டுகிறார். இறை அன்பும், இறைவன் திருநாமத்தின்மீதான பற்றுறுதியும் ஒரு மனிதனை ஒழுக்கநெறி நிறுத்த உதவின என்பதைப் பகுத்து உணரும்போது, சமயம் தனிமனித ஈடேற்றத்திற்கு அரிய பலனாற்ற இயலும் என்ற உண்மை வெளிப்படுகிறது.

## பெண் உரிமைப் போராட்டம்

இவற்றிற்கெல்லாம் மேலாக, வேறு சில உண்மைகளையும் சேக்கிழார், இவ்வரலாற்றில் ஊடாகப் பதிவு செய்து, நம்மை

www.saivamonline.com

நெறிப்படுத்த முனைகிறார். தறிகெட்ட ஆடவர், காமம் சான்ற வாழ்க்கையைத் தட்டிக் கேட்கும் உரிமை இல்லாதிருந்தது தமிழ்ச் சமுதாயம். சங்க நூல்களிலும் சிலம்பிலும் இந்நிலையே நிலவியிருந்தமை தெளிவு. சமூகமும் ஆடவர் காம வாழ்க்கைக்கு ஆதரவாகவே பேசி நின்றது. தான் ஓர் ஆண்மகனுக்கு உரியவளாக - அவனையே நினைத்து, நெஞ்சார, ஒழுக்க வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒரு மனைவி, தன் கணவனும், தன்னிடம் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை உடையவள். ஆடவனின் பரத்தமை வாழ்க்கைக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்திய முதல்பெண், தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே திருநீலகண்டரின் துணைவியாரே. இந்த உரிமைப் போராட்டக் களம் ஒரு சமய இலக்கியத்தில் நிலைகொண்டிருப்பது சைவம் தந்த சமூகக் கொடை.

திருநீலகண்டர் வரலாறு முதலியனவற்றில் சேக்கிழார் - சமய வாழ்வு, தனிமனித ஒழுக்கத்தோடு தொடர்பு கொண்டது என்பதை நிலைநாட்டுகின்றார்.

## குறிக்கோள் வாழ்வு

தனி மனிதர்கள் சமய வாழ்வை மேற்கொள்ளும்போது தம் நிலைமைகளுக்கு ஏற்றவாறு ஏதேனும் ஒரு கொள்கையை வரித்துக்கொண்டு, அதில் ஊன்றி நிற்றல் வேண்டும் என்பது சேக்கிழாரின் விருப்பம். தான் கொண்ட கொள்கைக்கு ஊறு வாராது பாதுகாத்தலிலும் அதனைக் கொண்டுசெலுத்தும் போது எதிர்ப்படும் இடையூறுகளைத் தகர்த்தலிலும் மனிதன் உறுதி பூணுதல் வேண்டும். இத்தகு உறுதி பூண்டாருக்குச் சிவனருள் என்றென்றும் துணை நிற்கும் என்பது சேக்கிழார் ஊட்டும் நம்பிக்கை. இந்த உறுதிப்பாட்டில் தலைநின்ற நாயன்மார் பலர். அவருள் ஒருவர் சிறுத்தொண்ட நாயனார்.

## சிறுத்தொண்டர்

பல்லவ மன்னனின் படைத்தளபதி பரஞ்சோதியார் சிவனிடம் பற்றுக் கொண்டவர். அவர் சிவனடியார் என்று உணர்ந்து, மன்னன் அவருக்குப் பணி ஓய்வு தந்து விடுவிக்கிறான். தம் சொந்த ஊராகிய, திருச்செங்காட்டங்குடி சேர்ந்து, சிவனடி போற்றி வாழ்ந்து வருகிறார். திருவெண்காட்டு நங்கை என்ற குலமகளை மணக்கிறார். சீராளன் என்ற மகன் ஒருவன் பிறந்து வளர்கிறான். சிவபக்தி மிக்க

www.saivamonline.com

பரஞ்சோதியாரை ஊரவர்கள் அவர் பணிவு கண்டு சிறுத்தொண்டர் என்று அழைக்கின்றனர். செல்வமும் சிறப்பும் மிக்க சிறுத்தொண்டர் வாழ்வில், ஒரு கொள்கையை விரும்பி வரித்துக் கொள்கிறார். சேக்கிழார் இதனை,

" நறை இதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின் உண்ணும் "

நியதியோடு சிறுத்தொண்டர் வாழ்ந்திருந்ததாகக் குறிக்கிறார்.

## அரிய செயல்

ஒவ்வொரு நாளும் ஒரு சிவனடியார்க்கு உணவிட்டு, அவர் உண்டபின், தாம் உண்ணும் நியதி மேற்கொண்டிருந்த சிறுத்தொண்டருக்கு, ஒரு நாள், உண்பதற்கு அடியார் எவரும் வாராத நிலைமை நேர்கிறது. பலவிடத்தும் தேடியும் சிவனடியாரைக் காணோம். உள்ளூர்க் கோயிலில் ஒரு சிவன் அடியார் அமர்ந்திருக்கக் கண்டு, அவரை உணவுண்ண அழைக்கிறார். அடியார் வேடத்தில் இருந்த சிவபெருமானே சிறுத்தொண்டர் மனஉறுதியை அறிவிக்க, அவர் மகனை அறுத்துப் படைக்கும் நிலைமைக்கு அவரை ஆட்படுத்துகிறார். அவரும், மனைவியும் கலந்து பேசி, கடைசியில் தம் குழந்தையையே அறுத்துக் கறி படைக்கின்றனர். இறைவன் அருள் பின்னர்க் கிடைக்கிறது. குழந்தை, பிழைத்து வருகிறான் என்று கதை நடையிடுகிறது.

## சில வினாக்கள்

சைவ சமயத்தின் உயிர் இரக்கக் கோட்பாட்டுக்கு இக்கதை முரணானதுதான். இன்று, யாரும் இவ்வாறு செய்ய முன்வருவார் களா என்றால், வரமாட்டார்கள். அறுத்துக் கறியாக்கிய பிள்ளை, மீண்டும் உயிரோடு வருமா என்பது சந்தேகமே. நாம் இன்று கேட்கும் மேற்குறித்த கேள்விகள் யாவற்றையும் சேக்கிழார் தமக்குத் தாமே கேட்டு, விடைகண்டிருப்பார். அதன் பின்னரே இக்கதையை அவர் நடத்தியிருக்க வேண்டும் என்றால், இதில் ஏதோ ஒரு நுட்பத்தை, இனங் காட்டவே சேக்கிழார் விரும்பியிருக்கிறார் என்பது தெளிவு. அந் நுட்பம்தான் யாது? அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வராத கதைகளில்கூடச் சில நீதிகளைப் பிரித்தறிவது நாம் அறிந்ததே.

## வலிய கூறுகள் !

சிவ நெறி நின்று, சிவனடியாரைப் போற்றி வாழும் நெறியினர் சிறுத்தொண்டர். வாழ்க்கையில் அவரே வரித்துக்கொண்ட அந்த

www.saivamonline.com

நியதிக்கு ஒரு தடை வருகிறது. குறித்த நாளில், சிவனடியார் வரவில்லை என்றால், அடுத்த நாள் இருவருக்குச் சோறளித்து விடலாம் என்று சமாதானப்படுத்திக் கொண்டு உண்டிருக்கலாம். அல்லது, சிவனடியாரின் கோரிக்கைகளை ஏற்காது சைவ உணவு மட்டுமே வழங்க இயலும் என்று மறுத்திருக்கலாம். சிறுத்தொண்டர் அவற்றில் ஒன்றும் செய்திலர். தாம் கொண்ட கொள்கையில் தலை நின்று, தம் மகனை இழக்கவும் துணிகிறார். இந்தக் கொள்கைப்பிடிப்பும் இழப்பும் அதனை ஏற்றுப் போற்றும் பக்குவமும் இறைநெறி போற்றி வாழும் வாழ்க்கை தந்த அருட்கொடை அல்லவா என்பது சேக்கிழார் நம்முன் வைக்கும் வினா. எனவே, சமயமும் சமய நம்பிக்கையும் சமயத்தின்பால் வைக்கும் பற்றுறுதியும் மக்களை வெற்றுச்சடங்குச் சமய வாழ்வில் நிறுத்தாமல் குறிக்கோள் வழியில் செலுத்தும் வலிய கூறுகள் என்பது புலனாகிறது.

## இறைவன் கருணை

இத்தகு கொள்கை வழி நிற்பாருக்கு இறைவன் அருள் உண்டு என்பதோடு அமையாது, மேலும் ஒரு படிமேலே போய்ச் சேக்கிழார் அன்னார் தம் கொள்கையிலிருந்து வழுவாது வாழத் தானும் துணை நிற்பான் என்பதையும் புலப்படுத்துகிறார். பிள்ளைக்கறி படைக்கப்பட்ட இலையின்முன் அமர்ந்த சிவன் அடியார் தலைக்கறி வேண்டுகிறார். அதுவும் படைக்கப்படுகிறது. சிவன் அடியார் ஒருவர் உடன் உண்ண வேண்டும் என்கிறார். சிறுத்தொண்டர் தாமே ஓர் இலையில் அமர்கிறார். அமர்ந்த சிறுத்தொண்டர் மனம் பேதலித்தவராய் சிவனடியார், வேறு ஒன்றும் கேளாமுன், தாமே உண்ணத் தொடங்க நினைத்து, கறிகலந்த சோற்றை வாயருகில் எடுத்துச் செல்ல, சிவனடியார், சிறுத் தொண்டர் கையை இறுகப் பற்றுகிறார். 'ஆறு மாதத்திற்கு, ஒரு முறை உண்ணும் நான் பொறுத்திருக்க, தினம் உண்ணும் உனக்கு என்ன அவசரம்' என்று வினவுகிறார்.

## தோன்றாத் துணை

சேக்கிழார் சொல்லவரும் நுட்பம் அரியது; உணர்ந்து மகிழத் தக்கது. சிறுத்தொண்டர் கொண்டிருக்கும் கொள்கை, சிவனடியாரை முன்னூட்டித் தாம் பின் உண்பது. இன்று, மனப் பேதலிப்பில் தாமே தம் கொள்கை மறந்து முன்னே உண்ணத் தலைப்படுகிறார்.

www.saivamonline.com

இறைவன் கருணையாளன். 'சொந்தக் கொள்கையை நிலை நாட்ட, மகனை இழந்த இவன், இன்று பேதலிப்பில், குறிக்கோள் நெறி பிறழ்கிறான். இவனை, இவன் கொள்கை வழி நிறுத்த வேண்டும்' என்ற கவலை சிவனைப் பற்றிக்கொள்கிறது. சிறுத்தொண்டர் கையைப் பற்றித் தடுக்கிறான் சிவன். உயரிய மானுட எத்தனங்கள் வெற்றி பெறத் தானும் துணையாகும் சிவனருள், சேக்கிழாரால் இனம் காட்டப்படுதல் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

## சில கடமைகள்

ஓர் இறைவனை வரித்துக்கொண்டு, அவனை வணங்கி அருள்பெற விழையும் அன்பன் ஒருவனுக்கு, வழிபாட்டுடன் கூட, வேறு சில கடமைகளும் உண்டு என்பதைச் சேக்கிழாரும் வழிமொழிந்து போற்றுகின்றார். ஆன்மிக நாட்டம் கொண்டவனுக்கு வழிபாடு என்பது முதன்மையானது. அடுத்தடுத்து அவனுக்குச் சமூகம் சார்ந்த சில கடமைகளும் உண்டு. முதல் கடமை உயிர் இரக்கம் என்பது. 'தயை' அல்லது 'கருணை' என்பதை முதன்மை அறம் என்று திருநாவுக்கரசர் போற்றுகின்றார். இறைவனே, கருணை வடிவானவன். அவன், சிற்றுயிர்கள்பால் கழிவிரக்கம் கொண்டு, அவற்றிற்கு அருள் பாலித்த வரலாறுகள் பல திருவிளையாடற் புராணத்துள் பரக்கப் பேசப்பட்டுள்ளன. பெரிய புராணத் துள்ளும் சேக்கிழார் உயிர் இரக்கக் கோட்பாட்டை விருப்போடு பதிவு செய்து, சைவ சமயத்திற்குப் புதிய வலிமை சேர்க்கிறார்.

## அறிவு சிறத்தல் எப்படி?

வாழ்நாளில் ஒரு மனிதன் ஈட்டிக் கொள்ள வேண்டிய முதன்மையான ஒன்று எது என்று வினவினால், திருவள்ளுவர், அது அறிவே என்கிறார். வேறு உடைமைகள் எல்லாம், அறிவுடையானுக்குத் தாமே வந்து இணையும் என்னும் கருத்தின ராய், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று உறுதிபடப் பேசுகிறார். அப்படிப் பேசிய திருவள்ளுவரே, ஓர் இடத்தில், 'அறிவினான் ஆகுவது உண்டோ' என்று வினா எழுப்புகிறார். நாம் வியக்கிறோம். நீ, ஈட்டிக் கொண்டிருக்கும் அறிவு, பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதும் உணர்வைத் தரவில்லை என்றால், அதனால் ஒரு பயனும் இல்லை என்கிறார்.

www.saivamonline.com

" அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன் நோய்போல் போற்றாக் கடை "

என்பது வள்ளுவரின் பதிவு. பிறர் நோய் என, உயர்திணை மேல் வைத்து உரையாது, 'பிறிதின் நோய்' என்று அஃறிணை மேல் வைத்து உரைத்த திருவள்ளுவரை, நன்கு நாம் ஆராய வேண்டும். பிற மனிதன் துயர் கண்டு இரங்குவது மட்டும் அறிவின் அடையாள மாகிவிடாது. பிற சிற்றுயிரின் துயரம் கண்டும் இரங்கும் மன நிலையில்தான் அறிவு அடைய்ாளப்படுத்தப்படும் என்கிறார் திருவள்ளுவர்.

## தொன்னூல்களில் உயிர் இரக்கம்

உயிர் இரக்கத்தை முன்வைத்துத் தம் கொள்கைகளைப் பரப்பிய சமண-பௌத்த சமயங்களுக்கு முன்னாகவே தோற்றம் கொண்ட தமிழ்த் தொன்னூல்களில் உயிர் இரக்கம் குறித்த அரிய பதிவுகள் பல உள்ளன. முல்லைக்குத் தேர் தந்தான் பாரி என்பது வெறும் கொடையாக மட்டும் நின்று விடாது. பாரி கண்களில், தழுவ ஒரு கொழுகொம்பு கிடைக்காமல், காற்றில் அசைந்த முல்லைக்கொடி, ஓர் உயிரின் பரிதவிப்பாகப் பட்டிருக்க வேண்டும். நீந்தத் தெரியாது தண்ணீரில் தத்தளிப்பவன் துயர் தீர்க்க, உடன் உதவ முற்படுவது போல் பாரி ஒரு கணம் கூட முல்லையின் துன்பத்தைப் பொறுக்கமாட்டாதவன் ஆனான். அங்கே, அறிவினும் மேலாக, உணர்வு தலைப்பட்டிருந்தது. மயிலுக்குப் போர்வை அளித்த பேகனும் அதே உணர்வில் நின்றவன். அன்பில், அளப்பரிய பரிவில், அறிவு தலை சாயும்போது, அது மேலும் புத்தழகு பெறுவதாகவே தோன்றுகின்றது. இவை அனுபவத்தில் உணரத் தக்கவை.

## சிற்றுயிர்கள்பால் நேயம்

ஒரு புறாவின் துயர் நீக்கத் தான் துலாத் தட்டில் ஏறி அமர்ந்த, கருணையாளன் சிபி என்பதைத் தொன்னூல்கள் குறித்துக் காட்டுகின்றன. நம்மைச் சுற்றி வாழும் சிற்றுயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் உண்டு. அவை, அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. ஒரு பெண்குரங்கு தன் துணையான ஆண், மலையடிவாரத்தில் வீழ்ந்து உயிர் துறந்ததை அறிகிறது. பிரிவுத் துயர் பொறாது, தன் குட்டியைச் சுற்றத்தார்பால் அடைக்கலப்படுத்திவிட்டு, அப்பெண்குரங்கு, தன் துணை உயிர் நீத்த, மலை முகடு ஏறிக் கீழே குதித்து, உயிர் நீத்தது என்று, சங்க அக இலக்கியத்தில் ஒரு பதிவு வருகிறது.

www.saivamonline.com

வறண்ட நிலத்தில், சிறிதளவு கிடைத்த தண்ணீரைத் தான் உண்ணாது, உண்பது போல் காட்டித் தன் துணையை உண்ணவைத்தது, ஓர் ஆண் யானை என்று அகநூல் ஒன்று பேசிக் காட்டுகின்றது. இவ்வாறான வேறு சில பதிவுகளும், தமிழ்த் தொன்னூல்களில் காணப்படுகின்றன. கொல்லாமை, புலால் மறுத்தல் முதலிய அறநூல் பதிவுகள் சிற்றுயிர்கள்பால் கொண்ட நேயத்தால் கிளைத்தன.

### சைவம் என்பது....?

'சைவம்' என்ற சொல், 'சிவனது நெறி' என்ற பொருளில் வருவது. உலக வழக்கில் இன்று, சைவம் என்பது, புலால் அல்லாத உணவு கொள்வாரைச் சுட்டி நிற்கிறது. இந்தப் பொருள் மாற்றம், சைவ சமயம் நிகழ்த்திய நீண்ட போராட்டங்களால் ஏற்பட்டது. உயிர்க் கொலை செய்வாரையும் புலால் உண்பாரையும் சைவ சமயம் புறந்தள்ளிவிடவில்லை. நல்ல நாள், பெரிய நாள் என்றும், விரதங்கள் என்றும், நோன்புகள் என்றும் கூறி அன்னாரை மெல்ல மனமாற்றம் கொள்ளுமாறு சைவம் தடம் வகுத்து வளர்ந்தது. உயிர் இரக்கத்தை எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றவே செய்தன. சைவத்தின் உயிர் இரக்கக் கோட்பாட்டுக்குப் புதிய அழகுகள் பல, சேக்கிழாரால் புனையப்பட்டன.

### மனு வரலாறு ஏன் ?

மனுநீதிச் சோழன், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன் அல்லன். சங்க நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் அவன் குறிக்கப் பெற்றான். சண்டேசுர நாயனார் வரலாற்றில், உயிர் இரக்கம் பற்றிப் பேச, சிறு களம் அமைந்திருந்தபோதும் அது போதுமானதாகாது என்று சேக்கிழார் கருதியிருக்க வேண்டும். எனவே, காப்பிய மரபுகளைப் புறந்தள்ளிவிட்டுத் திருத்தொண்டத் தொகை பிறந்த, சோழநாட்டுத் தலைநகராகிய, திருவாரூர் நகரச் சிறப்புரைக்கும் போது, சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாற்றை அங்கே பதிவு செய்கிறார். மனுநீதிச் சோழன் வரலாறு நகரப்படலத்துள் சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டமை குறித்துப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. என்றாலும், 'பிறிதின் நோய் தன் நோய் போல்' போற்றும் மனப் பண்பைச் சைவ நெறி நிற்பார் பெறுதல் வேண்டும் என்ற உயர் எண்ணமே இவ்வரலாற்றுப் பதிவுக் குக் காரணமாதல் கூடும் என்று கருதுவது பொருந்தும். சமயநெறி வாழ்வாரை, மனித நேயத்திற்கும் மனிதப் பண்பாட்டில் தலை நிற்பதற்கும் பழக்கும் உயரிய முயற்சியால் இவ்வுயிர் இரக்கம் ஓர் அடிமைத்தனம் போன்றது என்று சேக்கிழார் எண்ணுகிறார்.

www.saivamonline.com

## தீர்வு வேண்டுதல்

சோழ நாட்டைத் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு, பன்னெடும் ஆண்டுகளுக்கு முன், ஒரு மன்னன் ஆண்டுவந்தான். அவன், பழைய மனுநெறி ஒன்றை, மேல்வரிச் சட்ட மாகக் கொண்டு நாடாண்டதால், 'மனு நீதிச் சோழன்' என்று அழைக்கப்பட்டான். சோழ இளவரசன் வீதிவிடங்கன் என்பான், ஒருநாள், தேர் ஓட்டிச் செல்கையில் இளைய பசுமாட்டின் கன்று ஒன்று தேர்க்காலில் பட்டு மடிந்தது. கன்றின் பிரிவை ஆற்றாத தாய்ப்பசு, அரண்மனை முற்றம் சேர்ந்து தன் கொம்புகளால் ஆராய்ச்சி மணியை அடித்து, மன்னனுக்குத் தன் துயரை உணர்த்தி, நீதி கேட்டது. அரசன் அமைச்சரொடு கலந்து, நீதி வழங்கத் தீர்வு தருமாறு கேட்டுக்கொண்டான். அமைச்சர்கள், பழைய நடைமுறைகளை எடுத்துக்காட்டி, கோவதை செய்தார்க்கு அந்தணர்கள் விதித்திருந்த பிராயச்சித்த வகைமைகளை முன் மொழிந்தனர். மனுச்சோழனுக்கு அமைச்சர் உரைத்தன ஏற்பு உடையனவாக இல்லை.

## மன்னன் மனநிலை

அமைச்சர்கள் உரைத்த பிராயச்சித்தங்கள், பாவம் நீக்க வேண்டுமானால் உதவுதல் கூடும்! ஆனால், கன்றை இழந்து அலறும் இத்தாய்ப் பசுவுக்கு அது எப்படி நீதி வழங்கியதாக அமையமுடியும் என்று வினாத் தொடுத்தான்.

" வழக்கென்று நீர் மொழிந்தால்
மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும்
கோவுறு நோய் மருந்தாமோ "

என்பது சேக்கிழாரின் அரிய பதிவுகளில் ஒன்று. அமைச்சர்கள் மனுநெறி நின்று, சட்ட நுணுக்கங்களையும், எழுதப்படாத சட்டங்களாகிய மரபுகளையும் எடுத்துரைத்தனர். ஆயினும், சட்டங்களுக்கும் மேலானது ஒன்று; அது தருமம். அதன் நெறியை அமைச்சர்கள் உணர்ந்திருக்கவில்லை என்று சினம் கொண்டான் மனு வேந்தன். இறுதியில், மனு நெறியில் இல்லாத, மரபுகளுக்கு மேலான ஒரு நீதியை வேந்தன் அவையில் அறிவித்தான்.

## அதீத நிலை

கன்றை இழந்த பசு, மனமழிந்து நிற்கிறது. அதன் மனத் துயரத்திற்கு மந்திரிகள் ஒருவரும் தீர்வு காட்ட முன்வரவில்லை. இப்பசுவின் மனத் துயரத்தை அகற்றும் வழி ஒன்றும் காண

www.saivamonline.com

மாட்டாத நிலையில், அப்பசு உற்ற துயரத்தைத் தானும் உறுவதே முறை என்று மனுச் சோழன் அறிவித்தான்.

" ....மற்று இதனுக்கு இனி இதுவே செயல் இவ்வான்
மனமழியும் துயரகற்ற மாட்டாதேன்: வருந்தும் இது
தனதுறு பேரிடர் யானும் தாங்குவதே தருமம் "

என்பது மன்னன் உரைத்த வாசகம். பசு உற்ற துயரத்தை மன்னன் தானும் பெறுவேன் என்றது தன் மகனைத் தான் இழக்கத் துணிந்த அதீத நிலை. அமைச்சர்கள், உடன்படாது அகன்றனர். அரச குமாரனைத் தேர்க்காலில் கிடத்தித் தேர் ஓட்ட அமைச்சர்கள் உடன்பட்டிலர். இறுதியில், மனுச்சோழன் தன் மகனைத் தேர்க்காலில் தானே கிடத்தித் தேர் ஊர்ந்து பசுவுக்கு நீதி வழங்கினான் என வரலாற்றைச் சேக்கிழார் நிறைவிக்கிறார்.

## அறத்தின் சிறப்பு

'பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றுதல்' என்ற குறள் வரிக்கு, ஓர் இலக்கியம் பிறக்கிறது. மனு நெறிச் சட்டங்களுக்கும் மேலான நீதி முறை தமிழகத்தில் உண்டு என்ற பெருமிதம் சேர்கிறது. மாறுபடும் சட்டங்களுக்கும் மரபுகளுக்கும் மேலானது மாறுபடாத அறம் என்பது நிலை நாட்டப்படுகிறது. சிற்றுயிர்களுக்கே, இத்தகு நீதி என்றால், மானுடத்திற்கு இதனினும் மேலான நீதி வழங்கப்பட வேண்டும் என்ற உள்ளுறை மலர்ச்சி பெறுகிறது. சிவநெறி நிற்பார் உள்ளம், அறநெறியில் தங்கும் என்பது இனங் காட்டப்படுகிறது. நாடாள்வார்க்கு மட்டுமல்லாது, சிவ நெறி நிற்பார் யாவருக்கும், இத்தகு நீதியொடு இயைந்த அருள் நெஞ்சம் வேண்டும் என்பது சேக்கிழாரின் விருப்பமாகிறது. தவறுகளுக்கு உரிய தண்டனைகளைத் தமக்குத் தாமே வழங்கிக் கொள்ளுவதும், அதற்கு உடன்பாடாகத் தம் மன நிலையை ஆயத்தப்படுத்திக் கொள்வதுவும் அருமை உடையன என்பதில் ஐயமில்லை. மனுநீதிச் சோழன் வரலாற்றில் உரைக்கப்பட்ட நீதிமுறை பெரியபுராண நூல் முழுதும் வேறு வேறு தோற்றம் கொண்டு உயிர்த்து நிற்பதை ஊன்றிக் காண்பார் அறிதல் கூடும். புகழ்ச் சோழர் வரலாற்று நிகழ்வுகளும் கழற்சிங்க நாயனார் முதலியோர் நிகழ்த்திய அதீதச் செயல்களும் ஒரு சில எடுத்துக்காட்டுக்கள்.

## தமிழர் உயிர் இரக்கம்

தமிழர்கள், காலங்காலமாகவே சிற்றுயிர்கள்பால் நேயம் பூண்டு வாழ்ந்தவர்கள். மாடுகள் அவர்களின் செல்வத்தின்

www.saivamonline.com

அடையாளங்களாக விளங்கின. ஒருவன் செல்வம் அவனிடம் இருக்கும் மாடுகளை வைத்தே ஒரு காலத்தில் கணக்கிடப்பட்டது. 'மாடல்ல மற்றையவை' என்ற வள்ளுவர் பதிவும் இதனை உறுதி செய்கிறது. பால்பயனுக்காகப் பசுக்கள் போற்றி வளர்க்கப்பட்டன. பசும்பால் சிறப்புக் கருதிப் பசுவை மற்று மொரு தாயாகக் கருதிக் கோமாதா என்று போற்றிவந்தனர். எருதுகள், உழவர்களுக்கு உற்ற தோழர்களாக விளங்கின. தமக்கு உதவிய அவற்றைச் சிறப்பிக்க என்றே தமிழர்கள் 'மாட்டுப் பொங்கல்' கொண்டாடி மகிழ்ந்தனர். ஆடு, கோழிகள் அன்புடன் வளர்க்கப்பட்டன. நாயும், பூனையும் செல்லப் பிராணிகளாக வலம் வந்தன. பயன்பாடற்று முதிர்ந்த நிலை யிலும் விலங்குகளைத் தமிழர்கள் போற்றியே வாழ்ந்தனர்.

## சிற்றுயிர்களும் சைவமும்

சமயத் துறையில் தமிழர்கள் விலங்குகள், மற்றும் பறவை இனங்களுக்கு, உரிய இடம் தந்து போற்றினர். பசுவைக் 'காமதேனு' என்று போற்றினர். காளை, சிவன் ஏறிச் செலுத்தும் வாகனமாகக் கொள்ளப்பட்டது. 'இடபம்' என்றும் 'நந்தி' என்றும், காளைகளைச் சிவன் கொடிகளில் எழுதி நின்றனர். மயில் முருகனுக்கு வாகனமாயிற்று. சேவல் அவன் கொடியில் எழுதப்பட்டது. சிறிய மூஞ்சூறு, விநாயகர் வாகனம் என்று கூறப்பட்டது. புலிமீது ஐயனாரை இருத்தினர். சிங்கம் உமையம்மையின் வாகனமாயிற்று. அன்ன வாகனமும் அவளுக்கு உரிமையானது. எருமைகூட எமனுக்கு வாகனம் என்று போற்றப்பட்டது. குரங்கு மற்றும் கருடனுக்கு வைணவத்தில் உரிய இடம் தரப்பட்டது. காவல் தெய்வங்களோடு குதிரைகள் இணைக்கப்பட்டன. இவைகள் எல்லாம் தமிழ் மக்களின் உயிர்இரக்கப் பண்பின் வெளிப்பாடுகள் என்பதை ஆழ்ந்து நோக்குவோரால் அறிய முடியும். கடவுள்மீது கொண்ட அன்பு அல்லது அச்சம் காரணமாக கடவுளர் வாகனங்களாக அமைந்த சிற்றுயிர்களுக்கும் ஒருவிதப் பாதுகாவல் அமைந்தது.

## சண்டேசுர நாயனார்

சண்டேசுவரர் புராணத்தில் உயிர் இரக்கம் குறித்த இன்னொரு பதிவைச் சேக்கிழார் அமைக்கிறார். சேய்ஞலூரில் மறையோர் குலத்தில் வந்தவர் விசார சருமர். வேத ஆகமங்களைக் கற்றுச் சிறந்தார். உபநயனமும் நடந்தேறியது. சிவனடிகளில் நாட்டம் கொண்டு, வாழ்ந்துவந்தார். ஒரு நாள் கிடைமாடுகள் வீதி வழியே

www.saivamonline.com

நடந்து சென்றுகொண் டிருந்தன. அவற்றுள் ஒரு பசு, மாடுகளை மேய்ப்பவனைக் கொம்பால் கீறியது. வெகுண்ட அவன், விசார சருமர் காண, அப்பசுவைக் கோல் கொண்டு நையப் புடைக்க முயன்றான். அளவற்ற உயிர் இரக்கம் கொண்ட இளைஞர் விசார சருமர் மாடு மேய்ப்பானை இடை விலக்கி ஆவினச் சிறப்பை அவனுக்குப் பலபட எடுத்துரைத்தார்.

## ஆவினச் சிறப்புக்கள்

பசுக்கள், உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் மேலானவை. புனிதத் தீர்த்தங்கள் என்று சொல்லப்படுவன யாவும், பசுவுக்குள் அடைக்கலம் புகுந்துள்ளன. அவற்றின் ஒவ்வோர் அங்கத்திலும் அமரர்களும் முனிவர்களும் நிலைகொண்டு வாழ்ந்துவருகின்றனர். இச்சிறப்புக் கருதியே சிவபெருமானுக்குப் பசுவிடமிருந்து பெறப்பட்ட ஐந்து பொருள்களாலான 'பஞ்சகவ்யம்' சிறந்த திருமஞ்சனமாகக் கருதப்படுகிறது. சிவன் உடலெங்கும் அணிந்து மகிழும் திருநீறு பசுக்களிடமிருந்தே கிடைக்கிறது. சிவனும் உமையும் விரும்பி ஏறிவரும் இடபத்தைப் பயந்தன இப்பசுக்களே ஆகும். நீ, இப்பசுவினைத் துன்புறுத்தல் வேண்டாம். ஆநிரைகளை மேய்ப்பது சிற்றம்பலத்தில் ஆடும் சிவனை வணங்குவதற்கு நிகரானதாகும். எனவே, 'இனி நீ இவற்றை மேய்க்க வேண்டா: நானே மேய்ப்பன்' என்று விசார சருமர் அவனிடம் கூறியதாகச் சேக்கிழார் வரலாறு நடத்துகின்றார்.

> **" கன்று பயில் ஆன் நிரைகாக்கும் இதன் மேல் இல்லை கடன் இதுவே.**
> **மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்தும் நெறியாவதும் "**

என்ற தொடர், சிற்றுயிர்களைக் காப்பது சிவ வழிபாட்டுக்கு நிகரானதாகும் என்ற உண்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. இசையால் ஆநிரைகளை வசமாக்கி நின்ற வரலாற்றை, ஆனாய நாயனார் வரலாறு விரித்துரைக்கிறது.

## மனித நேயம்

வழிபாடு, உயிர் இரக்கம் என்பனவற்றை அடுத்துச் சேக்கிழார், சைவ சமய வாழ்வின் மூன்றாவது கூறாக, மனித நேயத்தை முன்னிறுத்துகின்றார். பெரிய புராணத்தில் பெரிதும் எடுத்துப் பேசப்படுவது மனித நேயமேயாகும். பல வரலாறுகளில் வெவ்வேறு கோணங்களில் மனிதநேயம் பெரிய புராணத்தில் இனங்காட்டப்பட்டுள்ளது. மனித நேயத்தின் மூலக்கூறு,

www.saivamonline.com

பசித்தாருக்குச் சோறிடுவதேயாகும். நாயன்மார் வரலாறுகளை ஏதீடாகக் கொண்டு, சேக்கிழார், மனித நேயத்தின் மாண்பினைப் பல பட எடுத்துரைத்து மகிழ்கிறார். பசித்தார்க்குச் சோறும் நோயுற்றாருக்கு மருந்தும் திக்கற்றவர்களுக்கு அடைக்கலமும் அறியாமை மிக்கார்க்குக் கல்வியும் வழங்குவதைச் சைவம் பெரிதாகப் போற்றிநின்றது. மனித நேயத்தைப் புலப்படுத்தப் பொருள் வசதி வேண்டும் என்பதுகூட இல்லை. நல்ல மனம் இருந்தால் போதும் என்கிறார் சேக்கிழார். 'ஒல்லும் வகையான் அறவினை' செய்தாரையும், அவற்றை இயன்ற இடங்களி ளெல்லாம் இடையறவு படாது செய்தாரையும் சேக்கிழார் தலைமேல் வைத்துப் போற்றுகின்றார்.

## இளையான் குடிமாறர்

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்பது அறநூல் வாசகம். அத்தகு வேளாண்குடியில் வந்த ஒருவர் இளையான் குடிமாறனார். தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளில் அன்பு பூண்டவர். உழவுத் தொழிலில் தலை நின்றவர். பெருஞ்செல்வர். சிவனடியார்களுக்கு உணவு படைத்து மகிழும் பண்பினர். சிவனடியார்களுக்குமட்டு மல்லாது தம் இல்லம் நாடி வந்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கும் உணவளிக்கும் விருப்பினர். இதனைச் சேக்கிழார்,

> " ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதொர் தன்மையால்
> நேர வந்தவர் யாவராயினும் "

என்ற தொடரால் குறிப்பிடுகிறார். நாயன்மார்கள் அருள் வரலாற்றில், அன்னார் அன்னம் பாலிப்பது, நெற்றியில் திருநீறு பூசிய சைவ அடியார்களுக்குமட்டும்தானா? அல்லது, பசித்தோர் அனைவருக்குமா என்ற, வினாவிற்கு விடை கூறுவார் போல், 'நேரவந்தவர் யாவராயினும்' என்ற தொடரை முன் வைக்கிறார்.

## ஈர மென்மொழிகள்

அறஞ்செய்வார் பலருக்கும் அறஞ்செய்தல் தொடர்பான பெருமிதத்தால் ஒரு செருக்கு உள் எழுதல் இயல்பே. இளையான் குடி மாறனாரிடம் செருக்கின் சாயலே சிறிதும் இல்லை. அடியார் இல்லம் வரும்போது நெஞ்சில் அன்பு மீதூரும். அன்னாரைக் கைகள் கூப்பி எதிர்கொள்வார். அவர்கள் உள்ளம் மகிழுமாறு மெல்லிய அன்பு மொழிகளால் அன்னாரை உசாவி அறிவார்.

www.saivamonline.com

இவற்றைச் சேக்கிழார்,

" ... நத்தமாகிய பத்திமுன்
கூரவந்து எதிர்கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென் மதுரப் பதம் பரிவெய்த முன்னுரை செய்தபின் "

என்று அழகுபட எடுத்துரைக்கிறார். சிவனடியாருக்குச் சோறிட்டார் என்பதே கூறவந்தது. ஆனால், சைவ சமயத்தில் அன்னம் பாலிப்பார் மேற்கொள்ள வேண்டிய பண்பாட்டு நெறிமுறைகளைச் சேக்கிழார் இனங்காட்டி மகிழ்கிறார். அறஞ்செய்வான் திறம் கூறும் அழகிய பகுதி இது.

## சைவப் பெருமிதங்கள் !

தம்கீழ்ப் பணியாற்றும் பணியாளர்களை ஏவி, அன்னதானம் செய்விப்பது ஒரு முறை. தாமே முன்னின்று செய்வது பிறிதோர் முறை. பின்னதை 'மாகேசுர பூசை' என்பது சைவ மரபு. சைவத்தின் முப்பெரும் பூசை முறைகளில் அடியார்களுக்குச் சோறு படைப்பதை ஒரு பூசை என்று குறித்த சைவ மரபு, பெருமைக்கு உரியது. அடியார்களை இளையான்குடி மாறனார் உண்பிக்கும் முறை குறித்துச் சேக்கிழார் விரிக்கும் பாடல் பெருஞ்சிறப்பு மிக்கது. பசித்து உண்ண வந்தவன் ஏழை என்று எண்ணாது, தம் அன்னதானத்தின் புண்ணியப்பேறு இவன் வாயிலாக அன்றோ வாய்த்தது என்று கருதும் பண்பாட்டைச் சேக்கிழார் நினைவு கூர்கிறார்,

" கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆசனத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர்
இச்சையில் அமுதுசெய்ய அளித்துளார். "

சொல்லுக்குச் சொல் சைவப் பெருமிதம் பேசும் பாடல் இது.

## மண்ணின் மரபுகள்

காப்பியம் நடத்தும் கவிஞர்கள் கதையின் ஊடாகக் கதை நடக்கும் மண்ணின் மரபுகளை இடையிடையே பொதிந்து வைப்பர். இளையான்குடி மாற நாயனார் அடியார்களுக்கு அளித்த உணவு,

www.saivamonline.com

ஏதோ பசிக்குச் சோறு என்று இல்லாமல், நாளும் பெரு விருந்தாகவே அமைந்தது. உணவு வகைகளில், விருந்தில் அறுசுவை படைக்கப் பட்டது எனக் கேட்டிருக்கிறோம். அறுசுவை நாம் அறிந்ததே. புதிதாகச் சேக்கிழார், உண்டி நாலு விதத்தினில் அமைந்திருந்ததாகக் கூறுகிறார். இது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உணவில் நான்கு வகை உண்டு. அவை உண்டல், தின்றல், பருகுதல், நக்குதல் என்பன. நாலு வகையும், ஆறுசுவையும் கலந்த உணவையும் தாம் விரும்பியவாறு தயாரிக்காது வந்து உண்பார் விருப்பம் அறிந்து தயாரித்துப் படைத்தார் என்பதைத் 'தொண்டர் இச்சையில் அமுது செய்ய' என்ற தொடரால் சேக்கிழார் உணரச் செய்கிறார்.

## பெரியபுராண உண்மை

இளையான்குடி மாற நாயனார் முதலியோரின், அன்னதான முயற்சிகளைச் சேக்கிழார் அவை, இறைவன் திருவுளப் பாங்கில் நிகழ்வனவாகவே கருதுகிறார். செல்வம் ஒருவனிடம் நிறைகிறது என்றால், அது இறைவன் அருளால் வாய்ப்பது. செல்வம் நிறைந்தவர்கள், அதன்மேல் பற்று அற்றவர்களாய்த் தம்மை அச்செல்வத்திற்கு ஓர் அறங்காவலராகவே கருதி வாழ்தல் வேண்டும். செல்வத்தை இறைவன், 'இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்' என்று திருநாவுக்கரசர் குறிக்கிறார். இறைவன் தந்த செல்வத்தை இறை அடியார்கள் பசி தீர்க்கப் பயன்படுத்து கின்றோம் என்ற உணர்வு மீதூரப் பெற்றவர்களாகவே, பெரிய புராண அடியவர்கள் வாழ்ந்திருந்தமை சேக்கிழாரின் பதிவுகளால் புலனாகிறது. செல்வம் மிக்க காலத்தில்மட்டும் அல்லாது வறுமை சூழ்ந்த காலத்தும் இளையான் குடிமாறனாரைப் போன்றோர் வாளா இருந்துவிடுவ தில்லை. ஒல்லும் வகையான் தம் தொண்டினை அவர்கள் தொடரவே செய்தனர் என்பது பெரியபுராணம் காட்டும் உண்மையாகும். மனஉறுதி உடையார் முன் வறுமை வெற்றி கொள்வதில்லை.

## உலகறியச் செய்தல்

இளையான்குடி மாற நாயனார் சிவனடியார்களுக்கு நாளும் உணவளித்தார் என்பதில் அன்னார் வரலாற்று நுட்பம் முடிந்து விடவில்லை. கொடையாலும் மேலான மனஉறுதி உடையராய் அன்னார் வாழ்ந்திருந்தனர் என்பதை நாட்டுவதே சேக்கிழாரின் விருப்பம். இறைவன் அன்னார் மனஉறுதி அறிவான். அறியாத உலகவரை அறிவிக்கத் திருவுளம் கொண்டு இளையான் குடி மாறனாரின் செல்வ வளங்களைச் சுருங்கச் செய்கிறான்.

www.saivamonline.com

"செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதிலும்
வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாள்தொறும் மாறிவந்து
ஒல்லையில் வறுமைப்பதம் புக
உன்னினார் தில்லை மன்னினார்"

நாயன்மார், உளஉறுதி அறிவான் சிவன். அவன், அவர்களைச் சோதித்தான் என்று சேக்கிழார், ஓரிடத்தும் கூறவில்லை. அடியார் மன உறுதியை உலகம் அறிய வேண்டும் என்பதே இறைவன் விருப்பமாக இருந்தது என்பது குறிக்கத்தக்கது.

## வழிதேடுதல்

இளையான்குடி மாறனார் வளங்கள் மெல்ல மெல்லச் சுருங்கின. ஆயினும், அவர் மனம் சுருங்கிவிடவில்லை. உடைமைகளை விற்றும் சோறளிக்கும் தொண்டில் தலைநின்றார். யாதொன்றும் இல்லாத ஒரு நாள். நாயனாரும் துணைவியாரும் பலபொழுது உணவின்றிப் பட்டினியால் வாடிக்கிடக்கும் ஓர் இரவு. சிவன், ஒரு முதிய அடியார் வடிவெடுத்து, கொட்டும் மழையில் நனைந்தவாறு நள்ளிருள் நேரத்தில் நாயனார் இல்லம் சேர்கிறான். நாயனாரும் துணைவியாரும் அவரை வரவேற்று, ஈரம் நீக்கி, அவர் வாட்டம் கண்டு, மிகப் பசித்திருக்கிறார் என்று உணர்ந்து, செய்வதறியாது தவித்தனர். மனைவியிடம் இவரை உண்பிக்கும் வழி யாது என்ற யோசனை கேட்கிறார். அம்மையார் நீளச் சிந்தித்து 'அண்டை அயலாரிடம் இனிப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. பொழுதும் நள்ளிரவாகிவிட்டது. நம் வறுமை நீங்க, மாலை, நம் வயலில் விதைத்த விதை நெல்லை, எடுத்து வர இயலுமானால், இயன்றவாறு உணவு படைக்கலாம்' என்று கூறுகின்றார்.

## பெண்களின் பங்களிப்பு

பெரியபுராண நாயன்மார் பட்டியலில், பெண்களுக்கு மூன்று இடங்கள்மட்டுமே உண்டு. காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெற்றெடுத்த இசைஞானியார். மங்கையர்க்கரசியார் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றோடு இணைந்து நடையிடுகிறது. இசைஞானியாருக்கு என்று தனியான வரலாறு ஒன்றும் இல்லை. காரைக்கால் அம்மையார்

www.saivamonline.com

வரலாறு மட்டுமே, பெரிய புராணத்துள் தனித்துப் பேசப்படும் வரலாறாகும். என்றாலும், பட்டியலிடப் படாத பல பெண்கள் பின்புலமாக நின்று, இயங்கியும் இயக்கியும் ஆடவர்களை நாயன்மார் நிலைக்கு உயரச் செய்துள்ளனர். தம் தொண்டுகளுக்கு உலகத்தாரை ஆயத்தப்படுத்துவது ஒரு நிலை. அதனினும் மேலானது, தம் இல்லத்தாரைத் தம் தொண்டுகளுக்கு இசைந்தவராக உருவாக்குவது. நாயன்மார் பலரும் இத்திறத்தில் பெரு வெற்றி பெற்றனர். திலகவதியார், கமலவதி, திருவெண்காட்டு நங்கை, அப்பூதி அடிகளாரின் துணைவியார், இளையான்குடி மாற நாயனாரின் இல்லத்தரசியார் முதலியோர் எல்லா வகையிலும் நாயன்மார்களுக்கு நிகரானவர்களே.

## இவர்கள் இல்லையென்றால்....?

திலகவதியார் உலகியலுக்குப் பயந்து தீப்புகுந்திருந்தால், திருநாவுக்கரசர் சைவம் சார்ந்திருப்பாரா என்பது ஐயமே. கமலவதி, பிரசவ வேதனைக்கு அஞ்சியிருந்தால் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டிய கோச்செங்கட்சோழன் உருப்பெற்றிருக்க மாட்டான்! 'உங்கள் கொள்கைக்காக, என் மகனை அறுக்க ஒப்ப மாட்டேன்' என்று திருவெண்காட்டு நங்கை மறுத்திருந்தால், சிறுத்தொண்டர் உருப்பெற்றிருக்க இயலாது. மூத்த திருநாவுக்கரசின் மரணத்திற்குக் கலங்கிக் கதறியிருந்தால், நாவரசரை விருந்தேற்கும் வாய்ப்பு அப்பூதி அடிகளுக்கு இல்லாதே போயிருக்கும். இளையான்குடி மாற நாயனாரின் மனைவி, 'நாமே பட்டினியால் வாடுகிறோம்; நள்ளிரவில் செய்ய ஒன்றுமில்லை' என்றிருந்தால், மாற நாயனார் வரலாறு பெரியபுராணத்தில் இடம் பெற்றிருக்காது.

## எது செல்வம்?

தக்க நேரத்தில் ஒருவரால் வழங்கப்படும் நல்ல ஆலோசனைகள் கூட நல்ல ஒரு பெருஞ்செல்வம் கிடைக்கப்பெற்றதற்கு நிகரானது என்பது சேக்கிழாரின் அரிய பதிவுகளுள் ஒன்று. இளையான் குடி மாற நாயனாரின் மனைவி,

> " செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்
> மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
> வல்லவாறு அமுதாக்கலும் ஆகும் "


என்று ஆலோசனை வழங்குகிறார். அதுவரை வேறு வழி காணாது தடுமாறி நின்றிருந்த இளையான்குடி மாற நாயனாருக்கு, அது ஒரு

www.saivamonline.com

சரியான ஆலோசனையாகப் படுகிறது. சேக்கிழார், மாறனாரின் மனமகிழ்ச்சியை,

" மற்றம் மாற்றம் மனைவியார் கூறலும்
பெற்ற செல்வம்எனப் பெரிது உள் மகிழ்ந்து "

எனக் குறிக்கிறார்.



*இளையான்குடி மாறனார்*

## வேளாண் மரபுரைத்தல்

ஓர் உண்மையை இங்கே நாம் இனம் காண வேண்டும். முதல்நாள் மாலைதான் விதைநெல் மாறனார் வயலில் விதைக்கப் பட்டிருந்தது. அன்று காலை முதல் இருவரும் உணவுக்கு வழியின்றிப் பட்டினி கிடந்திருக்கின்றனர். தற்போது, வயலில் விதைத்த நெல்லைக் கொண்டுவந்தால், அடியாருக்கு அமுதாக்கிப் படைக்கலாம் எனத் துணைவியார் வழிகாட்ட, நாயனாரும் அதற்கு இசைகிறார். அவர்கள் இருவரும் விரும்பியிருந்தால், விதைப்பதற்கு முன் ஒரு குறுணி நெல்லை விதைக் கோட்டையிலிருந்து எடுத்து வைத்துக் கொண்டு, எஞ்சியதை விதைத்திருக்கலாம். எடுத்து வைத்த விதை நெல்லைக் குற்றி உலையிலிட்டுச் சோறாக்கி உண்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு அவர்கள் செய்யாமல் பட்டினி கிடந்தது ஏன் என்ற எண்ணம் எழலாம். இது மரபுபற்றிய ஒரு செய்தி. எந்தச் சூழ்நிலையிலும் வேளாளர்கள் விதை நெல்லைக் குற்றி உண்ண மாட்டார்கள். அது ஒன்றுக்குப் பத்தாகும் மூலம்

www.saivamonline.com

என்பதால் அதனை 'வித்து' என்று முன்னோர் குறித்தனர். 'விரகின்மையின் வித்தட்டு உண்டனை' என எமனைச் சினந் துரைக்கும் கவிதை புறநானூற்றில் உண்டு. சேக்கிழாரும் 'செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்' என்று குறிப்பர். வறுமையைத் தொலைக்கும் மூலம், விதை என்பது புலனாகிறது. வேளாண்குடி மரபில் வந்த சேக்கிழார், குடிமரபுரைப்பது நினைந்து மகிழத்தக்கது.

## வேடிக்கை மனிதர்கள்

ஆனால், தாம் விதையைக் குற்றி உண்பதில்லை என்ற வைராக்கியம் இருந்தபோதும், பிறர் பசி நீக்கத் தம் குலமரபைத் துறக்கத் துணியும் மாறர் தம்பதியரின் உளப்பாங்கு நமக்கு வியப்பைத் தருகிறது. 'இலன் என்னும் எவ்வம்' உரையாத மாறனாரின் குலச் சிறப்பை விளக்கும் பகுதி இது. 'ஒல்லும் வகையான் அறவினை' என்ற குறள்நெறியும் இங்கே வாழ்வாக விரிகிறது. 'இது நிகழுமா? இவ்வாறுகூடச் செய்வார்களா' என வினா எழுப்புவாருக்கு ஒன்று சொல்ல வேண்டும். நாம், எது நடக்காது என்றும் எவை இயலாதன என்றும் கருதுகிறோமோ, அவற்றை நடக்கும் என்றும் இயலும் என்றும் நிரூபணம் செய்தவர்கள் மாமனிதர்களாக உயர்ந்து இலக்கிய வாழ்வு பெறுகிறார்கள். ஐயம் எழுப்புவார், வேடிக்கை மனிதர்களாகவே நின்று மறைகிறார்கள். நம் அறிவெல்லை சிறிது! நமது அறிவின் எல்லைக்கு எட்டாத மேலான ஒரு உலகம் உண்டு என்று நம்மில் பலர் நம்ப மறுப்பதே குறை.

## மனிதநேய வரலாறு

பிறகென்ன? சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்கின்றன. நள்ளிரவில் தம் வயல் நாடிச் சென்று, கொட்டும் மழையில் நனைந்தவாறு, விதை நெல்லை அரித்து ஒரு கூடையில் நிரப்பிக் கொண்டு மாறனார் இல்லம் வருகிறார். துணைவியார் வாசலில் எதிர்கொண்டு நெற்கூடையைப் பெற்று நெல்லைத் தூய்மை செய்ய, விறகுக்காக நாயனார் வீட்டைத் தாங்கி நிற்கும் கூரை அலகு ஒன்றை, அறுத்து வீழ்த்துகிறார். விதை நெல்லை வறுத்துக் குற்றிச் சோறாக்குகிறார் துணைவியார். கொல்லையில் குழி நிரம்பாத, கீரைகளைப் பறித்து வந்து ஒன்றுக்கு இரண்டாகத் தொடு கறிகளை ஆக்கி, அன்னம் பாலிக்க முயலும்போது சிவனடியார் மறைகிறார். கதையும் நிறைகிறது. நள்ளிரவில் இல்லம் தேடிவந்தவர், முன்பின் அறிமுகமானவரும் அல்லர். உறவினரும் அல்லர். இறைவன் என்றும் அறிந்திருக்கவில்லை. வந்தவர் 'பசி' என்றோ, 'உணவிடுக' என்றோ இரக்கவும் இல்லை. அவர், சிவனடியார் என்று

www.saivamonline.com

அடையாளப்படுத்தும் திருநீறும் மழையில் கரைந்து விட்டிருக்கும். இவற்றுக்கு அப்பாற்பட்ட மாபெரும் மனித நேயத்தை அடையாளப்படுத்தும் ஓர் அரிய வரலாறு இது.

## படிப்பினைகள்

'தனக்கு மிஞ்சித்தான் தான தருமம்' என்று யாரோ ஒரு பழமொழி படைத்து உலவவிட்டிருக்கின்றார். இயலாத மனிதர்கள், தங்கள் மாட்டாமைக்கு இதனைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். தனக்கு ஒன்றும் இல்லாத நேரத்திலும் தான தருமம் செய்ய முடியும் - மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பனவற்றை நிறுவும் சைவப் பெருமிதம் இந்த வரலாறு. விரத நாட்களில், தான் பட்டினி கிடந்தபோதும் கணவனுக்காகவும் குழந்தைகளுக்காகவும் உணவு சமைத்துப் பரிமாறும்போதும் கணவன் விருப்பங்களுக்கு இசைந்தொழுகும்போதும் சைவ மாதர்கள் வாழ்வில் இளையான்குடி மாற நாயனார் நிழலாடுகின்றார். சைவ சமயத்தின், முப்பெருங் கடமைகளுள் ஒன்றாகிய மனித நேயத்திற்கு இளையான்குடி மாற நாயனார் வரலாறு ஓர் அரிய சான்றாக நிற்கிறது.

## காரைக்கால் அம்மையார்

ஒன்றும் அற்ற நிலையில் பூத்த மனித நேயம் இது என்றால், எல்லாம் இருக்கும் நிலையில், இதனை மேலும் சிறப்பாக வெளிப்படுத்த இயலும் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் காட்டுகிறார். வெறும் சோறு மட்டும் போட்டுப் பசி நீக்குவதோடு அமையாது, வந்த அடியவர்களுக்கு விலைமதிப்புடைய பொருள்களையும் அளித்து அனுப்பும் உயர்பண்பு காரைக்கால் அம்மையாரிடம் குடி கொண்டிருந்தது.

> **" நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திருஅமுதளித்தும்**
> **செம்பொன்னும் நவமணியும் செழும் துகிலும் முதலான**
> **தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவன கொடுத்தும் "**

அவர் அன்பு எய்தியிருந்தார் என்பது, சேக்கிழார் வாக்கு. ஒரு நாள் சிவனடியார் ஒருவர், பசிக்குச் சோறு வேண்டி அம்மையார் இல்லம் நாடி வருகிறார். அவர் மிகப் பசித்திருக்கிறார் என்பது அவர் தோற்றத்தாலேயே அம்மையாருக்குப் புலனாகிவிடுகிறது. சோறு மட்டுமே வடித்துக் கவிழ்க்கப்பட்டிருக்கிறது. கறிவகைகள் ஏதும் தயாராகாத ஒரு முற்பகல் அது. கணவரும் உண்ணுவதற்கு இல்லம் வரவில்லை. அம்மையார்மட்டும் தனித்திருந்தாரா அல்லது பணியாளர்கள் உடன் இருந்தார்களா என்று புலப்படவில்லை.

www.saivamonline.com

## தாய்மைச் சிறப்பு

தாய்க்கு மட்டுமே, குழந்தை மொழி புரியும். அதனால்தான் தன் முன் நின்று, அடியார், மௌனமாக வெளிப்படுத்தும் துன்பங்களை, நீக்கியருளும் இறைவனுக்கு நிகராகத் தாயை ஒப்புமை கூற அருளாளர்கள் துணிந்தனர். ஒரே அழுகையை ஒரு தாய், பசிக்கான அழுகை இது, ஈரப்படுத்தியதால் வந்த அழுகை இது, எறும்பு கடித்ததால் வந்த அழுகை என வேறுபடுத்தி அறிகிறாள். இவை தாய்மையின் மாபெரும் அருளாற்றல். நீங்களும், சிவன் முன்பு நின்று, அழுதால் போதும், ஒன்றும் நீங்கள் உரைக்காமலேயே அவன், உங்கள் குறையறிந்து நீக்கி அருள்வான். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற தொடர் எவ்வளவு பொருள் பொதிந்தது! அதுநாள்வரை தாய்மைப் பேறு எய்தாத அம்மை யாருக்குப் பசித்தவன் முகம் கண்டு, தாய்மை தலை காட்டுகிறது.

## இளிவரவுகள்

எல்லாம் இருந்தும், இருப்பதை எடுத்து வழங்கச் சோம்பல் கொண்டு, இல்லை என்பார் ஒரு வகை. கணவரிடம் பெரு மதிப்புடையார் போன்று, 'ஐயா இன்னும் உண்ணவில்லை' என்று கணவன்மேல் பழி போடுவார் ஒரு வகை. 'ஐயா, அடுத்த வீடு பாருங்கள்' என 'இல்லை' என்பதை நாகரிகமாக வெளிப்படுத்துவது ஒரு வகை. 'கைவேலையாக இருக்கிறேன்' என்று கூறித் தப்புவது ஒரு வகை. இவற்றைத்தான் 'இல்லை என்பார் கூறும் இளிவரவுகள்' என்று ஒரு திருக்குறள் உரைகாரர் குறித்தனர் போலும். இவற்றுள் ஒன்றையும் செய்யாது, பசித்தான் மெலிவு நோக்கி, உள்ளதைக் கொண்டு, உடன் அவன் பசி நீக்குவேன் என்று துணிகிறார்.

## ஏதம் தீர் நல்விருந்து

அடியாரை இல்லத்துள் அழைக்கிறார். கால் கழுவ நீர் வழங்குகிறார். அவரை ஆசனத்தில் அமரச் செய்கிறார். இலை விரிக்கிறார். வடித்த சோற்றை இலையில் பரப்பி, நல்ல தயிர் பெய்கிறார். தொடுகறி தயாராகாததால், கணவன் அனுப்பி வைத்த மாங்கனிகளுள் ஒன்றைப் படைக்கிறார். அடியார் உண்டு மகிழ்கிறார். இதனைச் சேக்கிழார் 'நல்விருந்து' என்று குறித்து, நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். வெறும் தயிர்ச் சோறும், மாம்பழமும் கலந்த உணவு, நல்விருந்தாதல் எப்படி என்று நம் நெஞ்சம் வினா எழுப்புகிறது. பசித்தவனை மேலும் ஒரு மணி நேரம் பசிக்க வைத்து,

www.saivamonline.com

அறுசுவை உணவு படைப்பதைவிட, உடனடியாகப் பசிநீக்க, அம்மையார் இட்டசோறு அறுசுவை விருந்துக்கு நிகரானது என்பது சேக்கிழார் திருவுள்ளம். இது குறித்தே இதனைச் சேக்கிழார் ஒரு சொல் முன் இணைத்து, 'ஏதம் தீர் நல் விருந்து' என்று மொழிகிறார்.

## சிவனுக்குத் தாயாதல்

'தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி' என்பது மணிவாசகம். சிவனுக்குத் தாய் தந்தையர் இலர். அவன் கருவிலிருந்து பிறவாத தான்தோன்றி; சாவா மூவாப் பெரியோன். அப்பெருமானை நாடி அருள் வேண்டிக் காரைக்கால் அம்மையார், தலைகீழாக நடந்து, கயிலாயம் செல்கிறார். அவர் எலும்பு வடிவம் கண்டு, வியந்த உமையம்மை, சிவனாரை நோக்கி

> " .....தலையினால் நடந்திங்கேறும்
> எம்பெருமான் ஓர் என்பின்யாக்கை அன்பெண்ணே"

என்று வினவுகிறார். சிவன் 'இவர் என் அடியாருள் ஒருவர்' என்றோ அல்லது பெயர் சுட்டிக் காரைக்கால் அம்மை என்றோ உரைத்திருக்கலாம். மாறாகச் சிவன்,

> " வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்"

என்று அறிமுகம் செய்கிறார். 'என் அம்மை' என்று பிரிக்காது, 'நம்மைப் பேணும் தாய்' என்றது உமையம்மைக்கும் அவளே தாய் எனக் குறித்த நுட்பம். காரைக்கால் அம்மையார், எப்போது சிவனைப் பேணினார்கள்? சிவனடியார் ஒருவரை ஒரு நாள் பசிக்குச் சோறிட்டு மட்டுமே அம்மை பேணி நின்றார். அதுதான் அவர் செய்தது. ஒன்று புரிகிறது. அடியாரைப் பேணுவது நம் ஆண்டவனைப் பேணுவதற்குச் சமம் என்பது சேக்கிழார் கூற வந்தது. எனவே, வரலாற்றில் முன் 'பரமனார் திருத்தொண்டர்' என்று சேக்கிழார் குறித்திருந்தாலும், அடியார் வடிவில் வந்து, அன்னை பேண நின்றவன் ஆலவாய் அரனே என்று உறுதி செய்ய வைக்கிறார் சேக்கிழார். அதுபற்றியே பெருமான் காரைக்கால் பேயாரை அருகில் வந்ததும், அன்பு மீதூர 'அம்மையே' என்று அழைத்து மகிழ்கிறார்.

## மனிதப் பண்பு

சடங்குச் சமய நிலையிலிருந்து சைவத்தை உயிர்ப்புடைய வாழ்க்கைச் சமயமாக உயர்த்திப் பிடிக்கும் முயற்சியில் சேக்கிழார்

www.saivamonline.com

உயிர் இரக்கம், மனித நேயம் என்ற இரண்டையும் அடுத்து மனிதப் பண்பாட்டை முன்னிறுத்துகிறார். பெரியபுராணப் பதிவுகளை உற்று நோக்குவாருக்கு ஒன்று நன்கு புலனாகும். அறம், பொருள், இன்பம் என்று மூன்று பாலாக வள்ளுவர் நூல் பிரித்துப் பேசப்பட்டாலும், வள்ளுவத்தின் ஊடே இழையோடும் தலைமைப் பண்பு அறம் என்பதை நாம் உணர்ந்ததைப் போல், பெரிய புராணத்தின் ஊடே இழையோடும் தலைமைப் பண்பு 'பண்பாடு' என்பதுதான். பெரியபுராணத்தை ஒரு 'பண்பாட்டு இலக்கியம்' என்று குறிப்பது, பெரிதும் பொருத்தமானதாகும். மனிதப் பண்பாட்டின் அடித்தளம் பிறர்பால் பேசும் 'இன்சொல்' என்ற ஒன்றிலிருந்தே விரிந்தெழ வல்லது. அதுபற்றியே, 'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே' என்றார் மூலரும்.

## இன்சொல்

உலகத்தை யெல்லாம் நட்பாக்கிக்கொள்வதற்குக் கொடையும், இன்சொல்லும் போதுமானவை என்பர் வள்ளுவர். மனிதநேயம் கொடையாலும், மனிதப் பண்பு இன்சொல்லாலும் சிறக்கும். இறைவழிபாடும் சமய நாட்டமும் ஒருவனை இன்சொல் வழங்கப் பழக்க முடியவில்லை என்றால், அவை சமயம் என்று கூறும் அருகதை உடையது அல்ல.

" கற்க மிக முயன்று கற்றதெல்லாம் கற்றவர்பால்
தர்க்கமிட்டு நாய்போலச் சள் எனவோ "

என்று வினாத் தொடுக்கிறார், சைவத் திருமடத்துத் தலைவர் ஒருவர். இன்சொல், இனிய மனத்திலிருந்துதான் பிறக்கும். இனிய மனம், இனிய செயல்களைச் செய்யத் தூண்டும். வரலாறு நடத்தும் போக்கில், இன்சொல்லின் சிறப்பைப் பல இடங்களிலே அழுத்தமாக இனங் காட்டிச் செல்கிறார்.

## இன்சொல் சிறப்பு

இளையான்குடி மாறனார், தம் இல்லம் நாடிவரும் அடியார்கள் மகிழுமாறு 'செவிப்புலத்து ஈரமென் மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை' செய்வார் என்பது முன்னரே எடுத்துக் காட்டப்பட்டது. சேக்கிழார் குலச்சிறை நாயனார் புராணத்துள் அவர் பண்பை விரித்துரைக்குமிடத்து,

www.saivamonline.com

" காரணம் கண்ணுதற்கு அன்பர் என்னவே
வாரமாகி மகிழ்ந்து அவர்தாள் மிசை
ஆரும் அன்பொடு வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்து
ஈர நன்மொழி எய்த இசைத்துளார் "

என்று பாடுகிறார். தென்பாண்டி நாட்டில் மங்கையர்க்கரசியார் வழிநின்று, சைவப்பயிர் வளர்த்த மதி யமைச்சர், குலச்சிறையார். தொகையடியார்களாகக் குறிக்கப்பட்ட ஒரு குழுவினர் 'பத்தராய்ப் பணிவர்'. அன்னாரின் பொது இயல்பு விரிக்க வரும் சேக்கிழார்,

" ஈசருக்கே அன்பானார்; யாவரையும் தாம் கண்டால்
கூசி மிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனம் மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின்பின் கன்று அணைந்தால்போல் அணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார் "

என்று குறிக்கிறார். சமயத்தை முன்னிறுத்தி, சமூகத்தை ஒருங் கிணைக்க முயல்வாருக்கு அடிப்படையாக வேண்டுவது இன் மொழி பேசுதலே என்பதைச் சேக்கிழார் பல இடங்களிலும் இனம் காட்டிச் செல்கிறார்.

## முதற் பாடல்

சேக்கிழாரின் சைவப் பணிகள் குறித்து, நிறைவாகச் சில செய்திகள் குறிக்கப்படல் வேண்டும். திருமுருகாற்றுப்படையை அடுத்து, 'மேன்மை கொள் சைவநீதி' உலகெலாம் விளங்க வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்ட சேக்கிழார், பெரிய புராணத்துள் தொடக்கத்தையும் நிறைவையும் 'உலகெலாம்' என்ற தொடரால் அமைத்து மகிழ்கிறார். அவரது காப்பியத்தின் முதற்பாடல் சிவன் வாழ்த்தாகவே அமைகிறது. விநாயகர் வணக்கம், மூன்றாவது பாடலாகவே இடம் பெறுகிறது. பின்வந்த சைவக் கவிஞர்கள் பலரும் தம் நூல் சிவன், உமை மற்றும் முருகன்மீது பாடப்பட்டிருந்தபோதும், முதல் பாடலாகக் காப்பு என்று அடையாளமிட்டு விநாயகரையே வகுத்தனர். உலகெலாம் என்ற முதற்பாடல் ஒற்று நீக்கி எண்ணினால் அறுபத்து மூன்று எழுத்துக்களாலும், சேர்த்து எண்ணினால் எழுபத்திரண்டு எழுத்துக்களாலும் அமைந்திருப்பது-தனியடியார். தொகை யடியார் எண்ணிக்கைகளுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

www.saivamonline.com

## தில்லைச் சிறப்பு

அம்பலத்து ஆடுவானாகிய தில்லைச் சிற்றம்பலவன் வாழ்த்தாகவே முதற்பாடல் அமைகிறது. திருநாகேச்சரத்துச் சிவன் தாள் மலர்களில் சேக்கிழார் ஈடுபாடு கொண்டவர். ஆயினும், சைவர்களுக்கு முதல் தலம் தில்லை என்பதாலும் தம் நூல் தோற்றம் கொண்ட சிறப்புக் கருதியும் தில்லையைச் சிறப்பிக்கிறார். வேறு வேறு தலங்களில் சிவபக்தி பூண்டு வாழ்ந்திருந்த நாயன்மார்களை அறிமுகப்படுத்தும் போதெல்லாம், அன்னார் தில்லைக் கூத்தன்பால் பத்திமை பூண்டிருந்தனர் என்றே குறிப்பது சேக்கிழாரின் பழக்கம். இளையான்குடி மாறனாரை 'அம்பொன் நீடிய அம்பலத்தினில், ஆடுவார் அடி சூடுவார்' என்று அறிமுகப்படுத்துவார். அப்பூதி அடிகளாரைத் 'தாண்டவம் புரியவல்ல தம்பிரானாருக்கு அன்பர்' எனக் குறிப்பர்.

## உறவுத் தடங்கள்

தொடக்கக் காலங்களில் சைவத்தில் இறைவனுக்கும் அவனை வழிபடுவாருக்கும் இடையிலான உறவு 'ஆண்டான் அடிமை' உறவாகவே நிலவி வந்தது. முதன் முதலாகத் திருமூலர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என இறைவனை அடையும் வழிகளாக நான்கைக் குறித்தார். மூவர் வரலாற்றைப் பாட வந்த சேக்கிழார் சிவன் - திருஞானசம்பந்தருக்கு இடையே நிலவிய உறவைத் தந்தை - மகன் உறவு என்று கண்டு காட்டினார். சிவன் - திருநாவுக்கரசர் இடையிலான உறவை ஆண்டான் - அடிமை நிலை என்று உறுதி செய்தார். சிவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் உறவைத் - நட்பு உறவாக அடையாளப்படுத்தினார். இவை முறையே மகன்மை உறவு என்றும், அடிமை உறவு என்றும், நட்பு உறவு என்றும் குறிக்கப் பட்டன. இவற்றை வடநூலார் சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம் எனக் குறித்தனர். திருமூலர் குறித்த நான்கு நெறிகளில், மூன்றை எளிதாக அறிந்து பின்பற்ற, மூவர்முதலிகள் வரலாற்றை, அவற்றொடு இணைவித்த பெருமை சேக்கிழாரையே சாரும். பின்னர், மாணிக்கவாசகர் இறைவனோடு கொண்டிருந்த உறவைக் காதலன் - காதலி உறவு எனக் காட்டி, அதனைச் சன்மார்க்கம் என்று போற்றினர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கை முறை எவ்வாறு யோகம் என்ற நெறியில் அடங்கும் என்ற ஐயத்தை நீக்கும் முகமாகச் சேக்கிழார்,

www.saivamonline.com

"தென்னாவலூர் மன்னன் தேவர்பிரான் குருவருளால்
மின்னாரும் கொடிமருங்குல் பரவை என்னும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்பாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்"

என்று ஒரு பதிவை முன்வைத்து, நம்மை உய்த்துணர வைக்கிறார். அதன் திறம் விரிப்பின் பெருகும்.

## சைவ சித்தாந்தம்

சிவாகமங்களின் ஞானபாகப் பகுதிகளின் பிழிவாகத் தமிழில் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள், உருக் கொண்டு எழுந்தன. தோத்திரப் பாமாலைகளின் இடையே மூவர் முதலிகள், சில சாத்திர மூலங்களை ஆங்காங்கே பதிவு செய்து சென்றனர். சேக்கிழாரும், சாத்திரம் உருக் கொள்ளுவதற்கு உதவுமாறு சைவ சித்தாந்தச் சாத்திர உண்மைகள் சிலவற்றைத் தம் நூலுள் இடையிடையே பதிவு செய்துள்ளார். சாக்கிய நாயனார் புராணத்துள்,

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்"

என, அரிய குறிப்பொன்றைச் சுட்டிச் செல்கின்றார். சமணர்கள், ஒரு பிறப்பில் ஒருவன் செய்த வினை அடுத்த பிறப்பில், வினை செய்தானைச் சென்று சார்ந்து, உரிய பலனைத் தந்துவிடும் என்று சாதித்தனர். பசுக்கள் நிறைந்த மந்தையில், ஒரு கன்று, தானே நாடிச்சென்று, தன் தாயை அறிந்து, அதன் மடியில் பால் குடிப்பதை உவமையாகக் கூறினர். வினை என்பது உயிர்ப்பொருள் அன்று. அது அறிவற்ற ஜடம். செய்வினையின் பயனைச் செய்வானை நுகர வைக்க இடைநின்று கூட்ட ஒருவர் வேண்டும் என்றும் அவரே 'இறை' என்றும் நான்காவதாக ஒரு பொருளைத் தருக்கரீதியாகச் சைவ சித்தாந்தம் முன்னிறுத்தச் சேக்கிழாரின் இந்தப் பதிவு துணையாக அமைந்தது.

## ஐந்தெழுத்துச் சிறப்பு

பல்லவ வேந்தன் ஏவியவாறு நாவுக்கரசரை ஏவலர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் வீசினர். 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கிக் 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயமே' என்று அவர் பதிகம் பாடினார். கல் மிதந்தது. நாவரசர் கரை சேர்ந்தார் என்பது பெரிய புராண

www.saivamonline.com

வரலாறு. தத்துவப் பார்வையில், இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார், நாவரசர் புராணம் பாடும்போது பதிவு செய்கிறார். ஐந்தெழுத்தின் சிறப்புரைக்கும் இப்பகுதி, சைவ - சித்தாந்த உண்மை விளக்கமாகவும் அமைகிறது.

" இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒரு கல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ "

என்ற பாடலில் அவர் ஒரு வினாத் தொடுத்து விடையை உணர வைக்கிறார். மும்மலம் என்ற கல்லில் உயிர்களை வைத்து, நன்மை தீமை என்ற இருவினைகளாகிய கயிறுகளால் கட்டி, பிறப்பு என்ற கடலில் வீசும்போது அவை நமசிவாய என்ற ஐந்தெழுத்தைப் பற்றி நின்றால், அது, அவர்களைப் பிறவிக் கடலிலிருந்து கரையேற்று கிறது. அத்தகைய வலிமை பெற்ற ஐந்தெழுத்து எம் நாவுக்கரசரை இந்தச் சாதாரண உவர்க் கடலிலிருந்து கரையேற்றுவதில் வியப்பு ஒன்றுமில்லை என்பது, உயரிய சாத்திரப் பதிவுகளுள் ஒன்றாக அமைகிறது.

## சிவலிங்க வழிபாடு

திராவிட நாகரிகத்தின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் அடையாளமாகத் திகழ்வது சிவலிங்க வழிபாடு. சிவலிங்க வழிபாடு, தமிழ்நாட்டில் பெரிதும் சிறந்திருந்தது. கடவுளை ஒரு வடிவத்தில் அமைத்து வழிபடுவது உருவ வழிபாடு. எந்த உருவமும் இல்லாது மனத்தளவில் நிறுத்தி வழிபடுவது உருவமற்ற அருவ வழிபாடு. இவ்விரண்டுக்கும் மேலான, ஓர் அரிய வழிபாட்டு நிலையைத் திராவிடர்கள் உருவாக்கினர். உருவத்தையும், அருவத்தையும் ஒருங்கிணைத்து 'அருவுருவம்' என்ற ஒரு புதிய நிலை. கண்டறியப்பட்டது. உருவமும் அன்று; அருவமும் அன்று; அவற்றின் வேறும் அன்று என்று நாட்டப்பட்ட இந் நிலைபற்றிய முதல் விளக்கம் சேக்கிழாரால் பெரிய புராணத்துள் தரப்பட்டது.

" காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் "

என்ற வரிகள் சைவத்திற்குப் புதுவரவு; வரலாற்றுக் கொடை; சேக்கிழாரின் சமயப்பணிகளுள் குறிக்கத் தக்க ஒன்று.

www.saivamonline.com

## அன்பு வழிபாட்டின் சிறப்பு

சைவம், வேத சாரமாக அமைந்த சமயம் என்பது சேக்கிழாரின் அடிப்படைக் கோட்பாடு. ஆகம நெறியையும் அவர், ஏற்றுப் போற்றுகிறார். ஆகம வழிபாட்டின் சிறப்புகளைப் பல நாயன்மார் புராணங்களுள் சிறந்தெடுத்து ஓதும் சேக்கிழார், கண்ணப்ப நாயனார் புராணத்துள் அன்பு வழிபாட்டுக்கு ஈடு இணை இல்லை என்று பேசுகிறார். காளத்திநாதன் கண்களில் குருதி பெருகிய போது, சிவகோசரரியாரின் அறிவு நெஞ்சம், 'இது இறைவன் நிகழ்த்தும் நாடகம்' என்று அமைதி கொள்கிறது. கண்ணப்பரின் அன்பு நெஞ்சம் பதைக்கிறது. பிற நாயன்மார் வரலாறுகளை, நூலாசிரியராக நின்று எழுதும் சேக்கிழார், கண்ணப்பர் வரலாற்றில் தாமும் கரைந்து போகிறார். கண்ணப்பரை 'என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்' என்று பேசி நெகிழ்கிறார். கண்ணப்பர் செயல்களை

" அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய சொல்லெல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ "

என, ஆகம நெறி நிற்கும் சிவகோசரியாருக்குச் சிவன் எடுத்துரைப்பது, அன்பு வழிபாடே யாவற்றிலும் உயர்ந்தது என்பதை நிலைநாட்டும் பகுதியாகும்.

## தோத்திரப் பகுதி

காப்பியம் ஒன்றைப் பாடப் புகுந்த சேக்கிழாருக்குக் கதை நடத்த வேண்டிய கடமை இருப்பதால், தேவார ஆசிரியர்களைப் போல், சிவ தோத்திரங்களைப் பாடும் வாய்ப்பு இலதாயிற்று. என்றாலும், அளவற்ற சிவ ஈடுபாடு கொண்ட சேக்கிழார், தேவாரப் பனுவல்களுக்கு ஈடான பல அரிய தோத்திரப் பாமாலைகளைத் தம் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் அமைத்து மகிழ்ந்துள்ளார். 'உலகெலாம் உணர்ந்து' என்று தொடங்கும் வாழ்த்துப் பா முன்னரே குறிக்கப்பட்டது. தில்லை வாழ் அந்தணர் புராணத்தின் முதல் இரு பாடல்கள் நடராசர் துதியாகப் போற்றத் தக்க பொருள் பொதிந்த தோத்திரப் பாமாலைகளாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று,

" கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி, "

என அமைகிறது.

www.saivamonline.com

## அழகிய கவிதைகள்

எறிபத்த நாயனார் வரலாற்றில், பட்டத்து யானையால் சிவகாமி ஆண்டார் சிவனுக்குச் சாத்த எடுத்துச் சென்ற பூக் குடலை மண்ணில் சிந்தப்படுகிறது. சிவனை அறைகூவி முறையிட்டு அவர் அரற்றுகிறார். 'செப்பரும் துயரம் நீடிச் செயிர்த்து முன் சிவதா என்பார்' என்று கதை நடத்தும் சேக்கிழார், தோத்திரம் புனைய இடம் ஒதுக்கிக்கொள்கிறார். மூன்று நல்ல தோத்திரப் பாடல்களை இப்பகுதியில் காண முடிகிறது.

" களியானையின் ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா. "

என்றும்,

" தஞ்சே சரணம் புகுதும் தமியோர்
நெஞ்சேய் துயரம் கெடநேர் தொடரும்
மஞ்சே என வீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா "

என்றும் வருவனவும், இவை போல்வனவும் பல உள்ளன.

சேக்கிழாரின் சைவ சமயப் பணிகளுள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அரிய பணி ஒன்று உண்டு. தம் காலத்துக்கு முற்பட்ட சைவ-சமயத் தோத்திர நூல்களுக்கு அவரே ஒரு வரலாற்றுப் பின்புலத்தை உருவாக்கி அளிக்கிறார். மூவர் தேவாரங்களைப் பெரிய புராணத்தைப் படிக்காமல் ஒருமுறை படித்தறிந்தவர்கள் சேக்கிழார் காட்டும் வெளிச்சத்தோடு படிக்கும்போது முற்றிலும் வேறாக உணருவர். பல அரிய பதிகங்கள் பிறந்த ஊர், பதிகம் எழுந்த சூழல், பதிகத்தின் தனிச் சிறப்புக்கள், சந்தம், உரை விளக்கம், பண்கள், பாவகை எனப் பல அரிய செய்திகளைப் பெரிய புராணம் குறித்துச் செல்கிறது. சேக்கிழாருக்கு முற்பட்ட சைவ இலக்கிய வரலாற்றை உருவாக்கச் சேக்கிழாரைப் போல் உதவுவார் எவரும் இலர். ஒன்றிரண்டு செய்திகளைக் கண்டு, மேலே செல்லலாம்.

## சமய இலக்கிய வரலாறு

காரைக்கால் அம்மையார் வரலாற்றில் பல குறிப்புக்களைச் சேக்கிழார் பதிவு செய்கிறார். பேய்வடிவம் வேண்டிப் பெற்றவுடன், முதன் முதலாகக் காரைக்கால் அம்மையார் பாடியது அற்புதத்

www.saivamonline.com

திருவந்தாதி, இரண்டாவதாகத் திருஇரட்டை மணிமாலை என்பது சேக்கிழார் பதிவுகளால் புலனாகின்றன.

" உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின்
உமைகோன் தன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழுது
அருளிச் செய்வார் "

என்றும், 'ஆய்ந்தசீர் இரட்டைமாலை அந்தாதி எடுத்துப் பாடி' என்றும் வரும் குறிப்புக்கள் நோக்கத்தக்கன. இறைவன் அம்மையாரை 'வட திருவாலங்காடு சேர்ந்து எம்மைப் பாடுக' என்று கேட்டுக்கொண்டார் என்றும், அவ்வாறே, அங்குச் சேர்ந்து வழிபட்டு, அம்மையார் மூத்த திருப்பதிகம் அருளினார் என்றும் சேக்கிழார் குறிக்கிறார்.

" நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீ கண்டு ஆனந்தம் சேர்ந்து எப்போதும்
பாடுவாய் நம்மை "

என்றும்,

" ஆலங்காடு அதனில் அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற
கோலங்காண் பொழுது 'கொங்கை திரங்கி' என்றெடுத்து அங்கு
மூலம் காண்பரியார் தம்மை மூத்த நற்பதிகம் பாடி "

என்றும் வரும் தொடர்கள், சைவ - இலக்கிய வரலாற்றை உருவாக்கும் நல்ல முதன்மைத் தரவுகளாக அமைவதை அறிய முடிகிறது.

## வரலாற்று மூலங்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய காரிநாயனார், தமிழ்க் கோவை நூல் ஒன்று பாடினார் என்ற குறிப்பு அவர் வரலாற்றில் காணப்படுகிறது. அக்கோவை நூல் 'காரிக்கோவை', என்று அறியப்பட்டது. இன்று அந்நூல் கிடைத்திலது. அவ்வாறே ஐயடிகள் காடவர் கோன் என்பார், சிவத்தலங்கள் பலவற்றுக்கும் சென்று வழிபட்டு, ஒவ்வோர் வெண்பாப் புனைந்தார் என்ற சேக்கிழாரின் பதிவு, 'சேத்திரக் கோவை வெண்பா' என்ற நூல் வரலாற்றை அறிய உதவுகிறது. கழறிற்றறிவார் என்று குறிக்கப்படும் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருவுலாப்புறம்,

www.saivamonline.com

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டியவாறு, திருக்கயிலையில் சிவன் முன்னர் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்றும், திருக்கயிலையில் அக்காலை இருந்த மாசாத்தனார் என்பார் அந் நூலைக் கேட்டு, நிலவுலகில் அந்தணர்கள் வாழும் திருப்பிடவூரில் வெளிப் படுத்தினார் என்றும் சேக்கிழார் பதிவுகள் அமைகின்றன.

## திருமந்திரத் தோற்றம்

திருமூல நாயனார் வரலாற்றில் திருமந்திர மாலையின் தோற்றப் பின்புலம் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறையில் ஓர் அரச மரத்தின்கீழ் அமர்ந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகளில் தமிழ் மூவாயிரம் பாடினார் என்றும், அந்நூலுக்குப் பெயர் திருமந்திரமாலை என்றும், அது ஞானம் முதலிய நான்கு நெறிகளை விரித்துரைப்பது என்றும் சேக்கிழார் குறித்துள்ளார்

" ......உலகத்தோர் உய்ய
ஞானம் முதல் நான்கும் மலர் நல் திருமந்திரமாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம்
ஏன எயிறு அணிந்தாரை 'ஒன்றவன்தான்' என எடுத்து "

என்றும்,

" முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து "

என்றும் வரும் திருமூலநாயனார் வரலாற்று வரிகள் திருமந்திர நூல் வாலாறு தொகுக்கத் துணையாக அமைகின்றன.

## மூவர் தேவாரச் சிறப்புரைத்தல்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாறுகளில் இத்தகு அரிய குறிப்புக்கள் நூற்றுக் கணக்கில் அமைந்துள்ளன. அவை தனியே ஆராயத்தக்க பெருஞ்சிறப்புடையன. ஒன்றிரண்டைமட்டும் கண்டு மேற் செல்லலாம். நாவரசரின் முதல் பதிகம் 'கூற்றாயினவாறு' என்ற தொடக்கமுடையது: அது திருவதிகைவீரட்டானத்தில் பாடப் பெற்றது; தமிழ் பாடும் உணர்வை அவருக்கு அங்குத்தான் இறைவன் வழங்கினான். அது பாடிய பின்னரே நாவரசரைப் பற்றி நின்ற சூலை நோய் நீங்கியது. அப்பதிகம் எவ்விதக் குறையும் இல்லாத 'கோதில் பதிகம்' என்றெல்லாம் நாவரசர் வரலாற்றில்

www.saivamonline.com

சேக்கிழார் குறித்துள்ளார். பொதுப் பதிகங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு, மறுமாற்றத்திருத்தாண்டகம் என்று குறிக்கப்படும் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பதிகம் பல்லவனின் அரச சுற்றத்தார் அழைத்த பொழுது பாடப்பட்டது என்பதைச் சேக்கிழார் குறித்திடவில்லை யெனில் அறிய இயலாது. 'மாசில் வீணையும்', மற்றும் 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்னும் பதிகங்களின் தோற்றம் குறித்தும் சேக்கிழார் தரும் பதிவுகள் பெரும் பயனாய் அமைந்து, அப்பதிகங்களுக்குப் புதிய ஒளி சேர்த்தன.

## சம்பந்தர் பதிக அமைப்பு விளக்கம்

திருஞானசம்பந்தர் பதிகங்களில் பதினொரு பாடல்கள் இடம் பெற்றிருக்கும். அவற்றுள் கடைசி நான்கு பாடல்களிலும், நிரலே, ஒரே கருத்து மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கும். எட்டாம் பாட்டில் இராவணன் கயிலாயத்தைப் பெயர்த்தமை, ஒன்பதாம் பாட்டில், மாலும் அயனும் அடி முடி தேடி இளைத்தமை, பத்தாம் பாட்டில், சமண-பௌத்தர்கள் இயல்பு, பதினொராம் பாட்டில் பதிகப் பயன் என்பன இடம் பெற்றிருக்கும். இப்பதிக அமைப்பின் நுட்பங்களைச் சேக்கிழார் ஓர் உரையாசிரியரைப் போல் திகழ்ந்து விரித்துரைக்கிறார். இராவணனைப்பற்றிய குறிப்பு அவனை இகழவோ, புகழவோ அமைந்தது அன்று. கயிலாய மலையைப் பெயர்த்து எடுத்துச் சிவன் கால் விரலால் ஊன்ற, அதன் அடியில் சிக்குண்டு, பிழை உணர்ந்து இராவணன் 'சாமகானம்' பாடச் சிவன் அருள் பாலித்தார் என்பதற்குப் பின்னாக, ஓர் அருளிப்பாடு உண்டு என்பதைச் சேக்கிழார் பதிவு செய்கிறார்.

**" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்**
**கண்ணுதலான் பெருங்கருணைக் கைக்கொள்ளும் எனக் காட்ட "**

என்ற அரிய தொடர், குற்றம் பொறுக்கும் குணத்தினன் இவன் என்பதை, இனங்காட்டி நிற்கிறது. இது சமயத் துறையில் நம்பிக்கையூட்டும் அரிய முயற்சி. அன்பில்லாது, ஆணவம் கொண்டார்க்குச் சிவனருள் கிட்டாது என்பதை மால் அயன் வரலாறு பேசிச் சம்பந்தர் குறிப்பிக்கிறார் என்பதும், ஒன்பதாம் பாட்டின் விளக்கமாகிறது. சமண-பௌத்த நெறிகள் சிவநெறி போல் உய்தி தாரா என்பதும் பத்தாம் பாடல்களின் உள்ளீடு என்பது சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளது. பதினொராம் பாடல்களுக்கு ஆசிரியர் சேக்கிழார் 'திருக்கடைக்காப்பு' என்று பெயர் சூட்டுகிறார். மதுரையில் சைவ சமயத்தை நிலை நாட்டத் திருஞானசம்பந்தர்

www.saivamonline.com

அருளிய அரிய பதிகம் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும். ஏடு எதிர் ஏற இறுதி வெற்றி தந்த பதிகம் இது. இப்பதிகத்தின் அருமைப்பாடு கருதி அப்பதிகப் பொருட் சிறப்புக்களையெல்லாம் அப்பதிகத்துக்கு உரை காண்பார் போலச் சேக்கிழார் விரித்துரைப்பது சைவத்திற்குக் கிடைத்த அரிய நிதியமாக அமைகிறது.

## அகச்சான்று காட்டுதல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் 'தில்லை வாழ் அந்தணர்' - என்ற தொடக்கம் கொண்ட பதிகம் திருவாரூரில் பாடப்பெற்றது என்பதுவும், சுந்தரர் வேண்டியவாறு சிவனே இப்பதிகத்திற்கு முதல் அடி எடுத்துக் கொடுத்தான் என்பதுவும் இப்பதிகத்திற்குத் திருத்தொண்டத் தொகை என்பது பெயர் என்பதுவும் சேக்கிழார் தரும் வரலாற்றுக் குறிப்புக்களாக அமைகின்றன. திருக்கோலக்காவில் திருஞானசம்பந்தருக்குச் சிவன் பொற்றாளம் வழங்கிய செய்தி திருஞானசம்பந்தர் வரலாற்றில் கூறப்பட்டது. சுந்தரர் பின்னாளில் திருக்கோலக்கா சென்று பதிகம் பாடியபோது, தம் பதிகத்தில் சிவன் ஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் வழங்கிய கருணையை வியந்து போற்றிப் பாடினார். தாம் ஞானசம்பந்தர் வரலாற்றில் திருக்கோலக்கா நிகழ்வு தொடர்பாகச் செய்த பதிவை உறுதி செய்ய விரும்பும் சேக்கிழார், சுந்தரர் தேவாரத்தைத் துணைக் கொண்டு,

> " திருஞானசம்பந்தர் திருக்கைகளால் ஒற்றிப்
> பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி
> அருளாலே திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்துப்
> பொருள்மாலை திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார் "

எனக் கூடுதல் சான்று காட்டி மகிழ்கிறார்.

## மரபுக்கேற்ற தொண்டு

வேதமும் ஆகமமும் கற்றுத் தேர்ந்து, பூவும் நீரும் கொண்டு சென்று, திருக்கோயில் வழிபாடு நிகழ்த்துவோருக்கே சிவன் அருள் கிட்டும் என்ற நம்பிக்கை நேரிதன்று என்று சேக்கிழார் கருதுகிறார். அன்பு நிறைந்த நெஞ்சினராய் ஐந்தெழுத்து ஓதி, மரபுக்கு ஏற்ற தொண்டு செய்வார் யாவருக்கும் சிவனருள் கிட்டும் என்பதைச் சேக்கிழார் உறுதி செய்கிறார். திருநீலகண்டத்துக் குயவனார் ஓடளித்து அருள் பெற்றமை - திருநாளைப் போவாராகிய நந்தனார் யாழுக்கும், வீணைக்கும் நரம்புகள் அளித்தும், அருச்சனைக்குக் கோரோசனை அளித்தும் வாழ்வு பெற்றமை-முதல் மீனைச்

www.saivamonline.com

சிவனுக்கு என்று கடலில் விட்டுச் சிவன் தாள் சேர்ந்த அதிபத்தரின் தொழிலுக்கு ஏற்ற தொண்டின் மேன்மை-தயிலவினைத் தொழில் செய்த கலிய நாயனார் விளக்கீட்டுக்கு எண்ணெய் வழங்கி ஞானம் பெற்றமை-துணி நெய்யும் தொழில் மேற்கொண்டிருந்த நேசநாயனார், அன்பர்களுக்குக் கீளும் கௌபீனமும் அளித்துத் திருவருள் கூடியமை போல்வனவாகிய பல பதிவுகளில் இவ்வுண்மையைச் சேக்கிழார் நிறுவிக் காட்டுகின்றார்.

## கல்வியின் பயன்

கல்வியின் நிறைந்த பயன், அறிவைக் கூர் தீட்டிக் கொள்ளுதலே ஆகும். அறிவின் கூர்மையைக் கொண்டு, உலகியல் இன்பங்களை நாடாது மேலான பரம்பொருளைத் தேடிக் காணுதல் வேண்டும். வள்ளுவரும்,

" கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் "

என வினாத் தொடுத்துச் சிந்திக்க வைக்கிறார். சேக்கிழார்,பெரிய புராணத்துள், கல்வியின் நிறைந்த பயன், சிவன்கழல்களைச் சார்தலே என்பதை உறுதிபட எடுத்துரைக்கிறார். சிறுத்தொண்ட நாயனார், கலைகள் பல கற்றுத் தேர்ந்தார். கற்றலும் அறிதலும் கடந்து உணர்தல் நிலை வந்த போது கல்வியின் பயன் சிவன் கழல் சேர்தலே என்பதை நன்கு உணர்ந்தார். இதனைச் சேக்கிழார்,

" உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலில் செறிவன்றே "

எனப் பதிவுசெய்து காட்டுகிறார்.

" அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே "

என்றும்,

" செய்யுள் நிகழ் சொல் தெளிவும் செவ்விய நூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து விளங்கி ஒளிர்
மைஅணியும் கண்டத்தார் மலர் அடிக்கே ஆளானார் "

என்றும்,

" தென் தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றின் இடை நடம் புரியும் வள்ளலையே பொருளாக'க் "

கொண்டன என்றும் வரும் பெரிய புராணப் பகுதிகள் பெரிதும் சிந்தனைக்கு விருந்தாக அமைவன.

www.saivamonline.com

தாம் படைக்க முனைந்த ஒரு பெருங்காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு, இயன்றவாறெல்லாம், காப்பியத்தோடு இயைபுடைய தாகிய தம் தாய்ச் சமயமாகிய சைவத்தை உயர்த்திப் பிடிக்கும் பணியைச் சேக்கிழார் பெரிய புராணத்துள் நிறைவாகவே செய்துள்ளார். சடங்குகள் நிறைந்த ஒரு சமய வாழ்வை விடுத்து, உயிர்ப்புடைய மனித நேயம் மிக்க சமய வாழ்வைச் சைவ சமயிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற தம் உள்ளக் கிடக்கையைச் சேக்கிழார் நிறைவாகவே தம் நூலுள் பதித்துள்ளார். சைவ சமயப் பணிகளாகக் குறிக்கத் தக்க வேறு பலவும் பெரிய புராணத்துள் ஆங்காங்கே உள்ளன. இன்றியமையாத சில முதன்மைக் கூறுகள் மட்டும் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. விரிவான நூல் செய்யும் காலை அவையெல்லாம் விளக்கம் பெறும்.

www.saivamonline.com

# 4. சமூகப் பணிகள்

## சமயமும் - சமூகமும்

சேக்கிழாரின் வாழ்வையும் பணியையும், இவற்றின் இடையே இழையோடும் அவரின் உயிர்ப்புடைய வாசகங்களையும் கண்டு தெளியும் முயற்சியில் இரண்டாவதாகிய அன்னாரின் பணிகளுள் ஒன்றாகிய சமயப்பணிகளை ஆராய்ந்த நாம், இனி அவர்தம் சமூகப் பெரும்பணிகளை இனங்கண்டு மகிழலாம். கோயிலுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த சமய வாழ்வைச் சமூக வீதிக்குக் கொண்டு வர முயன்ற சேக்கிழாரின் முதல் முயற்சிகள் முன்னரே அடையாளப்படுத்தப்பட்டன. சமயமும், சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளாமல் தனித்தனியே இயங்குமாயின், அதனால் இரண்டுக்கும் வரு பயன் ஒன்றுமில்லை. சமூகத்தின் ஓர் அங்கமாகவே, சமயத்தைக் கருதவேண்டும். சமூகம், சமயத்திற்கு உரிய காவலும் அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் தரவேண்டிய கடப்பாடு உடையது. சமயம், சமூகத்தில் நல்லறங்களும் ஒழுக்கங்களும் சிறக்க அரண் அமைத்தல் வேண்டும்.

## சேக்கிழார் சிந்தனைகள்

சமயங்கள் மனிதவாழ்வுக்கு வேண்டத்தக்கன என்று கண்டு தெளிந்த நல்லறங்களில் பல காலப்போக்கில் சமூகச் சட்டங்களாக மாறுகின்றன. சமூகத்தைச் சட்டத்தின் பெயரால், அமைச்சர் முதலியோர் துணையுடன் அரசன் அல்லது ஆட்சித் தலைவன் நெறிப்படுத்துகிறான். இன்னொரு பக்கத்தில் சமயம் நல்லறங்களின் பெயரால் நல்ல குருமார்களின் வாயிலாகச் சமூகம் நெறி நிற்கத் துணை செய்கிறது. ஆட்சித் தலைவன் ஒட்டுமொத்தச் சமூக நிலத்தை முதன்மையாகக் கருதுகின்றான். சமயம், ஒவ்வொரு தனி மனிதனையும் நல்வழிப்படுத்துவதன்வழி சமூக நலத்தைப்

www.saivamonline.com

பேணி வளர்க்கின்றது. சமய - சமூக நல் இணக்கம் வேண்டும் என்று கருதினாலும் அவை ஒன்றை ஒன்று ஆட்சி செய்ய முயல்வதைச் சேக்கிழார் விரும்பவில்லை. அரசில், சமயம் ஆதிக்கம் செலுத்துவதை முற்றாகச் சேக்கிழார் வெறுத்து ஒதுக்குகிறார். அது போல், தனிமனிதன்மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆட்சியாளர்களுக்குக் கூடாது என்பதிலும் அவர் திடமான கருத்துக் கொண்டுள்ளார்.

## அறநெறிப் பாடம்

சமய நூலாசிரியராக இருந்துகொண்டு, தாம் ஆட்சித் தலைமை பூண்டிருந்த அமைச்சர் என்பதையும் கருத்தில் கொண்டு, சமூகத்தில் நல்லாட்சி நிகழ நல்ல அறிவுரைகளைச் சேக்கிழார் வழங்குகிறார். ஆட்சிக் கட்டில் என்பது, இனிமை பயக்கும் ஒன்றன்று என்பதை அவர் உணர்ந்தேயிருக்கிறார். அது தெரிந்தும், அதன்மேல் அமரத் துணிவாருக்குச் சேக்கிழார், அறநெறிப் பாடம் நடத்துகிறார். அவர், வள்ளுவர், பழைய மனுப் போல்வாரைப் போல், அறநூல் ஆசிரியரும் அல்லர். பொருள் நூல் உரைத்த கௌடில்யர் போல்வாரும் அல்லர். சேக்கிழார், ஒரு சமயநூல் ஆசிரியர். தம் எல்லை இன்னது என்பதை வரையறுத்துக்கொண்டு, அதனுள் நின்று, அவர் வெளிப்படுத்தும் சமூக அறவுரைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. சமண, பௌத்த மதங்கள்மீது காட்டுகின்ற சேக்கிழாரின் கோபம், தத்துவத் தொடர்பானது அன்று. அம்மதங்களின் உயரிய கொள்கைகளைப் போர்வை யாக்கிக்கொண்டு, மறைந்து அவற்றுக்கு எதிராகச் செயற்படும் போலிச் சமயவாதிகளையே அவர் சாடுகிறார். அவை இரண்டும் தமிழர் கலை-கலாசாரம் மற்றும் மொழி இவற்றின்மீது ஆதிக்கம் செலுத்துவதைச் சேக்கிழார் ஏற்க மறுக்கிறார்.

## சமூகக் கொடைகள்

தம் காப்பியத்தின் தொடக்கத்திலேயே ஒரு நாடாளும் மன்னன் அருள் நெஞ்சம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதைச் சேக்கிழார் வற்புறுத்தத் தொடங்கிவிடுகிறார். தாம் அமைச்சியற்றும் சோழர் குலத்தைச் சிறப்பிக்கும் கருத்திருக்குமானால், சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாறு அல்லாத ஒரு வரலாற்றைத் தேர்ந்து கொண்டிருக்க முடியும். ஆட்சியாளன், அறநெஞ்சம் இல்லாத கொடியவனாக இருந்தால், சமய வாழ்க்கை உரிய சிறப்பினைப் பெறுதல் இயலாது.

www.saivamonline.com

அவன் நெஞ்சில் ஈரம் தங்கியிருந்தால்தான் சமயம் தன் பெருமிதங்களை நிலை நாட்டிக் கொள்ள இயலும். மனுநீதிச் சோழன் வரலாறு வாயிலாக ஆட்சியாளர்களுக்கு அவர் வழங்கும் அறவுரைகள் சைவத்தின் பெயரால் முன்வைக்கப்பட்ட சமூகக் கொடைகளாகும்.

## புதுவரவு

மனுவேந்தன், சூரிய மரபில் வந்தவன். அக்காலை ஆட்சி செய்திருந்த அநபாயனின் குல முதல்வன். அவன், உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்று உரையாமல், சேக்கிழார் மனு வேந்தனை,

> **" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்**
> **கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன் "**

எனக் கூறி, ஆட்சியாளன் உயிர்க்குலத்திற்கெல்லாம் உறுப்புகளி லெல்லாம் சிறந்த கண்களாகவும், அவற்றின் உள்ளே இயங்கும் ஆவியாகவும் சுட்டுவது வியப்பாக்குகிறது. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று அவனை உயிராகக் கூறும் மரபொடு அவன் கண்கள் வழியாகவே சமூகம் யாவற்றையும் காணும் என்ற உண்மை உணர்ந்தவராய், அவனைக் கண் போன்றவன் என்று குறிப்பது ஒரு புதுவரவாகவே நிற்கிறது.

## தமிழர் பெருமிதம்

மனுவேந்தன் நாடாண்ட திறம் கூறவந்த சேக்கிழார், அவன் ஆட்சித்திறத்தைப் போற்றி உரைக்கிறார்:

> **" அறம் பொருள் இன்பமான அறநெறி வழாமல் புல்லி**
> **மறம் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும் "**

என்பன சேக்கிழாரின் பதிவுகள். அறம் முதலிய மூன்றன்வழி, மன்னன் தானும் நின்று, தன் சமூகத்தையும் நிற்கவைக்க வேண்டிய கடப்பாடு உடையவன். நாட்டில் அறனல்லாத மறச் செயல்கள் நிகழாமல் காக்கும் கடப்பாடும் அவனுக்கு உண்டு. பிறநாட்டு அரசர்கள் போற்றுமாறு அன்னான் ஆட்சி அமைதல் வேண்டும் என்பன சேக்கிழாரின் விருப்பங்கள். மனு வேந்தனின் அளப்பரிய உயிர் இரக்கம் குறித்த செய்திகள் முன்னரே விரிவாக விளக்கப்பட்டன. தொன்மரபுகளை உடைத்தும், பழைய மனுநீதிக்கு மேலான புது நீதிநெறி ஒன்றை நிலைநாட்டியும்,

www.saivamonline.com

அவன் ஆற்றிய செங்கோல் ஆட்சி தமிழர்களின் பெருமிதங்களில் ஒன்றாக நிற்கிறது. 'நீ யார்' என்று கேட்ட பாண்டியன்முன், நான் மனு ஆண்ட நாட்டுக்குச் 'சொந்தக்காரி' என்று கண்ணகியைப் பேசவைத்த சமணம் சார்ந்த இளங்கோவடிகளை நாம் நினைவு கூரவேண்டும்.

## ஐந்து வகை அச்சங்கள்

பெரிய புராணத்துள் வரும் ஆட்சியாளர்க்கான அறிவுரைகள் பலவற்றிலும் சிறந்தது, மனுச்சோழன் வரலாற்றில் வரும் 'மாநிலங் காவலன் ஆவான்' என்று தொடங்கும் பாடல். இப் பாடலைத் தம் கூற்றாகவோ அமைச்சர் பெறும் அறிவுரையாகவோ அமைக்காமல் நீதி உணர்ந்த அரசன் ஒருவன் சமூகத்திற்கு உரைப்பதாக அமைத்த சேக்கிழாரின் சமூக நலப்பண்பு வியப்பூட்டுகிறது. நாடாளும் அரசன் ஒருவன் நாடு காக்கும் காலைத் தன்கீழ் வாழும் உயிர்க் குலங்களுக்கு ஐந்துவகைக் காவலை உறுதி செய்யவேண்டு மென்கிறது அந்தப் பாடல். 'ஆன பயம் ஐந்து', என்று அவர் குறிக்கும் அழகிய பாடல்,

" மாநிலங் காவலன் ஆவான் மன்உயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தரல்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ "

என இவ்வாறு அமைகிறது. உலக வரலாறுகளை உற்று நோக்கி அறிவார்களுக்கு மேற்குறித்த ஐந்து காவலில் ஒன்று குறைந்த காலை, உயிர்க்குலங்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகள் புரியவே செய்யும்!

## சமூக நீதி

ஒரு குலம், ஓர் இனம் என இவற்றிற்கு ஒரு நீதி உரைக்கும் நீதி நூல்களை அறநெஞ்சம் கொண்ட அறிஞர் உலகம் போற்றல் செய்யாது. மனிதகுலம் முழுமைக்கும் ஒரே நீதி என்பதுதான் நாகரிக உலகின் அடையாளமாகக் கருதப்படும். ஒரே குற்றம் புரிந்த ஒருவனுக்கு ஒரு தண்டனை; அதே குற்றத்தைச் செய்த மற்றொருவனுக்கு அவன் பிறந்த குல உயர்ச்சி காரணமாக இல்லை என்றால், அது அறநெறியும் ஆகாது; அதனை ஏற்பாரும் இலர். தன் மகனே கன்றின் சாவுக்குக் காரணம் என்பது அறிந்து 'உரிய தண்டனை இவனுக்கு யாது' என்று மனுச்சோழன் அமைச்சர்களைக் கேட்கிறான். அவர்கள், அரச நீதி இது என்னாது, அந்தணர்கள் விதித்த முறை காட்டிப் பிராயச்சித்தம் கூறுகின்றனர். மன்னன் சினக்கிறான்.

www.saivamonline.com

'என் மகன் செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டு, இதே குற்றம் புரியும் என் குடிமகன் ஒருவனுக்கு நான் தண்டனை தந்தால், என் நீதி முறை இகழப்படும் என்பதை நீங்கள் ஏன் அறியவில்லை' என்று வினவுகிறான். சேக்கிழார் பதிக்கும் அரிய சமூக நீதிப் பகுதி இது:

" என் மகன் செய் பாதகத்துக்கு
இருந்தவங்கள் செய இசைந்தே
அன்னியன் ஓர் உயிர் கொன்றால்
அவனைக் கொல்வே னானால்
தொன்மனு நூல் தொடைமனுவால்
துடைப்புண்டது எனும் வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்
மந்திரிகள் வழக்கு என்றான் "

சோழநாட்டில், ஒருவனை ஒருவன் கொன்றால், கொன்றவனுக்கு மரண தண்டனை. 'அதுவும் ஓர் உயிர் இதுவும் ஓர் உயிர்' என்பது உணரப்பட்டால் நீங்கள் தெரிவிக்கும் பிராயச் சித்தம் உங்களுக்கே நகைப்பைத் தரும் என்பது வேந்தன் உள்ளம் என்று அறியமுடிகிறது.

## அரசியல் அனுபவம்

ஆட்சித் தலைவன் நீதி வழங்கும்போது உறவு, நட்பு எனப் பார்த்தல் அறமன்று. அறம், தன் பாதையில் பயணிப்பதற்குத் தடைபயக்கும் அதிகாரம் ஆட்சியாளனுக்கு இல்லை. அதனை நாடாளுவோன் உணர்தல் வேண்டும். மனுநீதிச் சோழன், அதனை நன்கு உணர்ந்திருந்தான். இவ் வுணர்வு, மனு நீதி அறிந்த அரசியல் அறிவால்மட்டும் வாராது, சிவன் தாள் மலர்களில் கொண்டிருந்த பத்திமையின் ஊற்றத்தால் சிறந்தது என்று கோடலே நியாயமானது. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய அரிய சிறப்பமைந்த பாடல் ஒன்று மனுச் சோழன் வரலாற்று நிறைவில் அமைகிறது.

" ஒருமைந்தன் தன் குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன் வழிச் செல்கை
கடனென்று தன் மைந்தன்
மருமம்தன் தேராழி.
உறஊர்ந்தான் மனு வேந்தன். "

என்று வியந்து நின்றதோடு அமையாமல், சேக்கிழார்,

www.saivamonline.com

" அருமந்த அரசாட்சி அரிதோ
மற்று எளிதோ தான் "

என்று வினாத் தொடுக்கிறார். அறநெறி நின்று ஆளவேண்டும் என்று வற்புறுத்திய சேக்கிழார், அது எளிய செயல் அன்று என்றும் குறிப்பித்தல் அவரது அரசியல் அனுபவத்திற்குச் சான்றாக அமைகிறது.

## ஆட்சியாளர் பண்பு

சமுதாய உணர்வின்றிக் கதை நடத்த நினைத்திருந்தால், மேற்குறித்த பதிவுகள் ஒன்றுமின்றி, அவரால் கதை நடத்த முடிந்திருக்கும். முடிமன்னர் ஆட்சிக்காலத்திலேயே ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூற ஒரு தகுதியும் துணிவும் வேண்டும். அவை, சேக்கிழாருக்கு அமைந்தே இருந்தன என்பதை அவருடைய பதிவுகள் நிலைநாட்டி நிற்கின்றன.

திருநாவலூர்த் திருவீதியில், சிறு தேர் உருட்டி விளையாடும் நம்பியாரூரரின் அழகில் மயங்கிய நாடாளும் மன்னன் நரசிங்க முனையரையன் அக்குழந்தையை மகன்மை கொள்ள விழைகிறான். விரும்பியிருந்தால் கட்டளையிட்டு அக்குழந்தையை அடைந்திருக்க முடியும்! மன்னன் அணுகுமுறையில் காணப்பட்ட ஆட்சியாளர் பண்பாட்டைச் சேக்கிழார் இனம் காட்டுகின்றார்

" நரசிங்க முனையர் என்னும்
நாடுவாழ் அரசர் கண்டு
பரவரும் காதல் கூரப்
பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பினாலே
வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரர்க் கேற்ப
அன்பினால் மகன்மை கொண்டார் "

என்ற அழகிய பாடலில் வரும் 'பயந்தவர் தம்பால் சென்று' என்றும், 'விரவிய நண்பினாலே வேண்டினர் பெற்று' என்றும் வரும் தொடர்கள் ஆட்சியாளர் பண்பாட்டிற்குச் சான்று கூறி நிற்பன.

## எறிபத்தர் வரலாறு

எறிபத்த நாயனார் அருள் வரலாற்றில் சேக்கிழாரின் பதிவுகள் நம்மை விண்ணில் எழச் செய்கின்றன. பெருமிதம் நம்மைத்

www.saivamonline.com

தொற்றிக்கொள்கிறது. சிவப்பணி செய்துவந்த அந்தணர் ஒருவரின் பூக்குடலையைப் பறித்துப் பட்டத்து யானை மண் மீது சிந்திவிடுகிறது. கருவூரில் சிவனடியார்களுக்குப் பாதுகாவலராக வாழ்ந்திருந்த எறிபத்தர் என்பார் அரச யானை என்றும் பாராது, அதனையும் பாகர் இருவரையும் காவலர் மூவரையும் வெட்டி வீழ்த்துகின்றார். புகழ்ச் சோழன் அறிந்து, நாற்பெரும் படையுடன் வருகிறான். பகைப் படையைக் காணாமல், யானை அருகே நின்றிருந்த சிவனடியாராகிய எறிபத்தரைக் கண்டு, அவர்தான் யானையை வெட்டியவர் என்று உணராமல் சினத்துடன் அமைச்சர்களை நோக்கி, 'யார் வெட்டியவர்' என்று வினவுகிறான். அமைச்சர்கள் நடந்தன கூறி நிற்கின்றனர். பட்டத்து யானையை வெட்டிய செயல் அரசனின் தன்மானத்தோடு இணைந்தது. அவன், முறையாக வெட்டியவர் ஒரு சிவனடியார் என்று அறிந்த பிறகும் சினந்து எறிபத்தருக்குத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். மன்னன் நீதியும் சைவம் சார்ந்த அறநெறியும் கற்றவன். அவன் நெஞ்சில் சினம் மறைகிறது.

## வியப்பூட்டும் மன்னன்

சமயவாதிகள்பால் ஆட்சியாளர்கள் காட்ட வேண்டிய மரியாதை பெரிது. சமய வெறி கொள்ளாது, சமயம் சார்ந்த நல்லறிவு கொண்ட ஆட்சியாளர் சிந்தனையும் செயல்களும் எவ்வாறிருக்கும் என்பதைச் சேக்கிழார் இனங்காட்டுகின்றார். யானையை வெட்டிய எறிபத்தர்மீது கொண்ட சினம் நீங்கப் புகழ்ச் சோழன் தன்னுள் ஒரு நினைவை முன்னிறுத்துகிறான். ஒரு சிவ பக்தர் ஒரு யானையை வெட்டியுள்ளார் என்றால், அதில் ஒரு நியாயம் இருக்கவே செய்யும். ஏன் எனில், சிவனடியார்கள் நெஞ்சில் உண்மையும் நியாயமும் குடிகொண்டிருக்கும். யானை, ஏதோ ஒரு பிழை செய்திருக்க வேண்டும். இல்லையென்றால், இச்செயலை நாயனார் செய்திருக்க மாட்டார் என்று திடமாக நம்புகின்றான்.

" குழையணி காதினானுக்கு
அன்பராம் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார்
பிழைத்தது உண்டு "

என்று தெளியும் அறிவில், ஆட்சியாளர்கள் சிவனடியார்கள்பால் கொண்டிருந்த உயர் மதிப்பின் அளவை அறிய முடிகிறது. மேலும், அவன் உள்ளே ஒரு மகிழ்ச்சி பிறக்கிறது. சேக்கிழார் பதிவு நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. 'நல்ல வேளை: சிவனடியாருக்கும், யானைக்கும் நடைபெற்ற போராட்டத்தில் யானை வீழ்ந்தது.

www.saivamonline.com

யானையால் சிவனடியாருக்கு ஒரு தீங்கும் வாராது போயிற்றே! அது நான் செய்த தவம் போலும்' என்று எண்ணி, நிறைகிறான். வியப்பூட்டும் மன்னர் பண்புகளுள் இதுவும் ஒன்று.

## அன்பின் முடி

படைகளை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுச் சோழ மன்னன், உடைவாளோடு எறிபத்தர் இருக்கும் இடத்திற்குத் தனியே நடந்து சேர்கிறான். படை வரவும், மன்னன் வரவும் நாயனார் கண்டு, மேலும் சினத்தின் உச்சிக்குச் சென்றிருக்க வேண்டும். அருகில் வந்து, 'என்ன நடந்தது' என்று மன்னன் வினவுகிறான். எறிபத்தர் நடந்தன விரித்துரைக்கிறார். மன்னன், பண்பின் உச்சிக்கே சென்றுவிடுகிறான். எறிபத்தரை நோக்கி, 'யானை, பாகர், காவலர் செய்த பிழைக்கு, அன்னாரைக் கொன்றது போதாது. அந்த யானைக்கு, உரிமையுடையவன் நான். ஆதலால், என்னையும் நீங்கள் கொல்ல வேண்டும்' என்று பேசி, நாயனாரைக் கரையவைக்கிறான். 'நீங்கள் கையில் வைத்திருக்கும் கருவியோ, சிவனுக்கு உகந்த மழு ஆயுதம் ஆகும், அதனால் என்னைக் கொல்லாமல் இதோ, இந்த உடை வாளால் என்னைக் கொல்லுங்கள்' என்று வாளை நீட்டுகிறான்.

**" அங்கணர் அடியார் தம்மைச்**
**செய்த இவ்வபராதத்துக்கு**
**இங்கிது தன்னால் போதாது**
**என்னையும் கொல்ல வேண்டும் "**

என்ற நீதி நிறைந்த உரைப்பகுதியும்,

**" மங்கல மழுவால் கொல்கை**
**வழக்கும் அன்று இதுவாம் என்று**
**செங்கையில் உடைவாள் வாங்கிக்**
**கொடுத்தனர் தீர்வு நேர்வார் "**

என்ற சமயமரபு போற்றும் பண்பாடும் நம்மை நீளச் சிந்திக்க வைக்கின்றன.

## அன்பின் வெற்றி

அன்பு ஒன்றுமட்டுமே ஆத்திரத்தை அழிக்கவல்லது என்பதைச் சேக்கிழார் நிறுவுகிறார். மன்னன் பண்பில் கரைந்த எறிபத்தர், விரைந்து மன்னன் நீட்டிய வாளை வாங்குகிறார். 'அதனை வாங்க, நாம் சிறிது நேரம் தாமதித்தால் எங்கே மன்னன், அவ்வாளால், தன்னைத் தானே மாய்த்துக்கொண்டுவிடுவானோ'

www.saivamonline.com

என்ற பரிவை எறிபத்தர் எய்துகிறார். கொல்ல நினைத்தவனைக் காக்க நினைக்கும் மனமாற்றத்தைத் தந்தது எது? அன்பு - அன்பு ஒன்றால்மட்டுமே, அறநெறிகளைத் தழைக்கச் செய்ய முடியும் என்பதை மீண்டும் ஒரு முறை சேக்கிழார் நிறுவிக் காட்டுகிறார்.

" ...கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்கு அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்கமாட்டார்: தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார். "

சேக்கிழாரின் வளர்ச்சி மயமான சித்திரிப்புகளுள் ஒன்று இது.

## குறளுக்கு விளக்கம்

எதிர்பாராத திருப்பம் ஒன்று, அன்பில் மேலும் ஒரு பிரிக்க முடியாத முடிச்சைப் போடுகிறது. தன்னைக் கொல்ல வேண்டி உடைவாளை வழங்கிவிட்டு, மன்னன் குனிந்து நிற்கிறான். ஒரு நொடிக்குள் எறிபத்தர் உள்ளத்தில் ஒரு விபரீத முடிவு பிறக்கிறது. 'இத்தகு பண்பாளன் சாக வேண்டியவன் அல்லன்; அவசரப்பட்டு, இவனுக்குத் தீங்கு நினைத்த நானே சாக வேண்டியவன்' என்று கருதி, மன்னன் தந்த உடைவாளால் எறிபத்தர் தம் கழுத்தைத் தாமே அரியத் துணிகிறார். அது கண்டு பொறுக்காத மன்னன், அவர் கைகளை இறுகப் பற்றித் தடுக்கிறான். இறைவன் திருக்காட்சி யாவரும் காண விண்ணில் எழுகிறது. கற்போர் கண்கள் குளமாகின்றன. 'அளவிலாப் பரிவில் வந்த இடுக்கண்' என்று சேக்கிழார் இருவர் அன்பையும் வியக்கிறார்.

" அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை "

என்ற புரியாத குறளுக்கு ஓர் இலக்கியம் கிடைக்கிறது. நாடாள்வார் உயர் பண்பில்தான், தூய வாழ்வில் பெருமிதம் மலரும் என்பதைச் சேக்கிழார் அதி அற்புதமாகப் பதிவு செய்திருக்கும் பகுதி இது.

## கற்க வேண்டுவன

'இப்படியெல்லாம் நடக்குமா? இப்படியெல்லாம் நடந்து கொள்வார்களா? இது எப்படிச் சாத்தியமாகும்' என்று இதன்மேல் வினா எழுதல் இயல்பே! புகழ்ச் சோழனின் தனிமனிதப் பண்புகளின் உச்சியில் பூத்த கருணைமலர் இது. சராசரி மனிதர் களுக்கு அரிதாகத் தோன்றும் நிகழ்வுகள், உயர்ந்த நிலை நிற்பார்க்கு உரியவாறு புலனாகவே செய்யும். நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும்

www.saivamonline.com

எட்டாதன யாவும் உண்மை அல்ல என்பதோ நம்ப மறுப்பதோ சரியான மதிப்பீடாக முடியாது. ஆயிரம் ஆண்டுக் காலத்தில், இப்படி வாழ்ந்த ஒருவரைத்தானே சேக்கிழார் இனம் காட்டுகின்றார். அத்தகையோர் மாமனிதர்கள்; 'செயற்கரும் செயல் செய்த தீரர்கள்'! அதனால்தான், அன்னார் பெரியராக நம் முன்னே உயர்ந்து நிற்கின்றனர். அத்தகு உயர்நிலைக்கு நாம் சென்று சேர்தல் அரிதாயினும் அன்பு செய்தலும் மன்னித்தலும் விட்டுக் கொடுத்தலும் மேற்கொள்ளத்தக்க மானுடச் செயல்களே என்று உணர வேண்டும். இப்பண்புகளில் நீங்கள் பயணிக்கும்போது, புகழ்ச்சோழன் அருகில் நீங்கள் சென்றடைதல் உறுதி.

## விடை தரும் பாங்கு

அரிதான செயல் செய்த நாயன்மார் வரலாறுகளை நிறை விக்கும் இடத்திலெல்லாம் சேக்கிழார், நம்மை ஒத்தவர் எழுப்பும் வினாக்களை நம் சார்பாகத் தாமே எழுப்பிக்கொண்டு, விடையும் பகர்கிறார். எறிபத்தர் போன்றோர்க்குப் பட்டத்து யானையை வெட்டுதல் போன்ற செயல்கள் இயன்றிருக்குமா? அவர், தம் கழுத்தில் தாமே வாள்பூட்டி அரிய முனைவாரா? மன்னன் செயல் நம்புமாறு இல்லையே என்றெல்லாம் வினாத் தொடுப்பாருக்குச் சேக்கிழார், வரலாற்றின் நிறைவில் ஒரு விடை தருகிறார். மேற்குறித்த இருவர் உளப்பாங்கை இறைவனையன்றி, நிலவுலகில் உள்ளவாறு மதிப்பிடவல்லார் எவரும் இலர் என்கிறார்.

" ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளும் மற்று அவர்க்கு நல்கும் நம்பர்தாம் அளக்கில் அன்றி
நீளும்இத் தொண்டின்நீர்மை நினைக்கில் யார் அளக்கவல்லார் "

என்ற அரிய பாடல் சேக்கிழாரின் அருளியல் மற்றும் உளவியல் கண்ணோட்டத்திற்குச் சான்றாக அமைகிறது.

## நேரிய ஆட்சி முறை

நாடாளும் ஆட்சித் தலைவன் யாதானும் ஒரு சமயத்தைப் பற்றி நின்று வாழ்தலைச் சேக்கிழார் ஏற்கிறார். என்றாலும், பிற சமயங்களைத் தழுவி வாழ்வார்க்கு உரிய மரியாதை தருவது மன்னவன் கடமை. தான் சார்ந்து நிற்கும் சமயத்தை அவன் அரசியலொடு கலப்பதைச் சேக்கிழார் உடன்படவில்லை. ஆட்சி குறித்த செயற்பாடுகளில், மன்னன், அமைச்சர் அறிவுரை கேட்டலே அறம். அதனை அவன் சமயவாதிகளிடம் கேட்க முனையும்போது,

www.saivamonline.com

பிற சமயங்களை ஏற்றுப் போற்றுவார்க்குத் தீமை சேர்கிறது. எனவே, சமயச் சார்பற்ற, நேரிய ஆட்சி முறை ஒன்றைக் காணவே அவர் விரும்புகிறார். மன்னன் ஏதேனும் ஒரு சமயத்தை வரித்துக் கொண்டு, பிற சமயங்களுக்கு எதிராக நடந்தால், எத்தகு சமூகத் தீமைகள் விளையும் என்பதைச் சேக்கிழார் இரண்டு வரலாறுகளில் விரித்துரைக்கிறார். ஒன்று, நாவரசர் வரலாறு. மற்றொன்று, ஞானசம்பந்தர் வரலாறு.

## திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர், இளமையில் சைவத்தை விட்டுச் சமணம் சார்கிறார். சமண நூல்களைக் கற்று, ஆராய்ந்து, தலைமைக் குருவாக உயர்கிறார். பௌத்தர்களோடு வாதம் நிகழ்த்தி வெற்றி பெறுகிறார். சமணர்கள் அவருக்குத் 'தருமசேனர்' என்று பெயர் சூட்டுகின்றனர். பல்லாண்டுகளுக்குப் பிறகு, தருமசேனரைச் சூலை நோய் வாட்டுகிறது. சமணர்கள் தந்த மருந்துகள், செய்த மந்திரங்களால் நோய் கட்டுப்படவில்லை. மரணம் நெருங்குவதாக உணர்ந்த அவர், தம் தமக்கை திலகவதியாரைக் கடைசியாக ஒருமுறை பார்க்க விரும்பி அழைத்துவரத் திருவதிகைக்கு ஆள் போக்குகிறார். திலகவதியார், சமணர் வாழிடம் வர மறுத்துவிடுகிறார். கட்டுப்பாடுகள் காரணமாகத் தருமசேனர் உதவியாளர் ஒருவர் துணையுடன் இரவில் புறப்பட்டுத் திருவதிகை சேர்கிறார். தமக்கையை வணங்குகிறார். அவர் திருநீறு தர, வாங்கி அணிய, சூலை நோய்க் கொடுமை தணிவதாக உணர்கிறார். திருவதிகை வீரட்டம் ஆலயத்துட் சென்று சிவனைப் பணிகிறார். பாடும் உணர்வு தலைப்படுகிறது. தம் அல்லல் குறித்துக் 'கூற்றாயின வாறு' என்று தொடங்கிப் பதிகம் பாடுகிறார். சூலை அகல்கிறது. இறைவன், 'நாவுக்கரசு' என்று நாமம் சூட்டுகின்றான். மனமாற்றம் அடைந்த தருமசேனர் சமணத்தைத் துறந்து மீண்டும் சைவம் சார்கிறார்.

## வரலாற்று நிகழ்வுகள்

திருப்பாதிரிப்புலியூர், சமணர் பள்ளிகளில் வாழ்ந்திருந்த ஏனைய சமணக் குருமார்கள் கலக்கம் அடைகின்றனர். சமண சமயத்தில் கற்றறிந்த மந்திரங்களால் நோய்நீக்கம் பெற்ற தருமசேனர், சைவத்தில் சென்று சேர விரும்பி, ஒரு நாடகத்தை நிகழ்த்தியிருப்பதாக அவர்கள் நாடாளும் பல்லவனிடம் கூறுகின்றனர். மன்னனும் ஆராயாது அதனை உண்மை என்று நம்பி, தருமசேனரை அழைத்துவரப் பணியாளர்களை அனுப்புகிறான். நாவரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று

www.saivamonline.com

எடுத்துரைத்து, செல்ல மறுக்கிறார். மறுபடியும் அமைச்சர்கள் வந்து வற்புறுத்த, அவர்கள் நலம் கருதித் திருப்பாதிரிப்புலியூர் சேர்கிறார். எந்த விசாரணைகளும் இன்றிச் சமணக் குருமார்கள் சொற்கேட்டு, மன்னன் அடுத்தடுத்து அவர் இறக்குமாறு நான்குவகைக் கொடிய தண்டனைகளைத் தருகிறான். சிவனருள் துணையால் அவற்றிலிருந்து நாவரசர் விடுபடுகிறார். மன்னன், உண்மை உணர்ந்து சமணத்தைத் துறந்து சைவம் சார்கிறான். பாடலிபுத்திரத்தில் இருந்த சமணப் பள்ளிகள் இடிக்கப்படுகின்றன. இடித்த கற்களைக் கொண்டு, திருவதிகைக் கோயிலைப் பல்லவன் புதுப்பித்தான் என்பன வரலாற்றின் போக்காகச் சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அடியவர் செய்கை

தந்தை இறக்க, உடன் தாயும் இறக்க, வருந்தியிருந்த சிறுபிள்ளையாகிய மருள்நீக்கியாருக்குத் தமக்கை திலகவதியாரின் மண வாழ்க்கையும் தடைப்பட்டமை ஆறாத் துயரத்தைத் தந்திருக்க வேண்டும். அதுபற்றி, அவர் தம் தாய்ச் சமயமாகிய சைவத்தின் மேல் நம்பிக்கை இழந்திருக்கலாம். நிலைபேறில்லாத உலகியல் கண்டு, மனத்தளவில் அவர் துறவை வரித்து, சமணம் சார்ந்திருக்கலாம். வேறு பெரிதான காரணங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. சேக்கிழார், அவர் மதமாற்றத்துக்கான காரணம் எதையும் குறிக்கவில்லை. நல்ல வழி காட்ட வேண்டிய சிவனார் உரிய அருள் காட்டத் தவறியதனால், மருள் நீக்கியார் சமணம் சார்ந்தார் என்று பழியைச் சிவன்பால் சுமத்துகிறார்

" நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார் "

என்பது சேக்கிழாரின் பதிவு. இறைவன்மேல் பழி சுமத்தினாலும் தவறில்லை. அடியார் செயல்களில் குறைகாணல் கூடாது என்பது சேக்கிழார் கொள்கை. சமணர்கள், கொல்லாமை என்ற கவசத்துக்குள் இருந்துகொண்டு, மறைவாகக் கொலைத் தொழிலே செய்பவர்கள் என்று சேக்கிழார் குற்றம் சாட்டுகிறார்.

## ஆட்சியாளர்களுக்கு அறவுரை

சைவத்தின்மீது நம்பிக்கை இழந்த நிலையில், சமணம் சார்ந்த மருள் நீக்கியார், சமணத்தைக் கற்றுத் தேர்ந்து முதன்மை பெற்றார். எதைச் சைவத்திலிருந்து பெற முடியவில்லையோ அதனைச் சமணத்திலிருந்து பெற அவர் விரும்பினார். சூலை நோய்

www.saivamonline.com

உரைகல்லாக அமைந்தது. சமண சமய மந்திரங்கள் சாதிக்க இயலாத ஒன்றைத் திருவதிகையில் திலகவதியார் ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்த திருநீறு சாதித்தது. எவ்வித வற்புறுத்தலும், யாருடைய தூண்டுகோலும் இல்லாது, தரும சேனர் மனமாற்றம் சீர்தூக்கிப் பார்க்கும் அவரது மனத் தெளிவால் உண்டாயிற்று. தற்போது, சைவம், அதுவும் தன் தாய்ச் சமயம் நம்பிக்கையூட்ட, அவர், சமணம் விடுத்துச் சைவம் சார்ந்தார். இதில் குற்றம் காண ஒன்றுமில்லை. ஆயினும் சமணர்கள் தருமசேனருக்கு மரண தண்டனை விதிக்க அறிவுரை கூறப் பல்லவனும் அதை ஏற்கிறான். சேக்கிழார், சினத்துடன், மன்னன் செயலை இகழ்ந்துரைக்கிறார்.

நாடாளும் மன்னனுக்கு, அருள் உணர்வு வேண்டும். அவன் முறை திறம்பல் கூடாது. அறியாமையையே அறிவாகக் கருதும் பிழை அவன்பால் இருத்தல் அழகன்று. இவை ஒன்றும் அறியாதவனாகப் பல்லவன் வாழ்ந்திருந்தான் என்று அவனைக் குற்றம் சாட்டுவார்போன்று ஆட்சியாளர்களுக்கு அறிவுரை பகர்கிறார் சேக்கிழார்.

> " அருள்கொண்ட உணர்வின்றி, நெறிகோடி அறிவென்று
> மருள் கொண்ட மன்னன் "

என்பன சேக்கிழாரின் அரிய வரிகள்.

## சேக்கிழாரின் கோட்பாடுகள்

மக்களுக்காக மதமே தவிர, மதங்களுக்காக மக்கள் என்ற எண்ணம் சமயவாதிகள் உள்ளத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். ஆட்சியாளர்கள் சமயச் சார்பற்ற ஆட்சியை உறுதி செய்தல் வேண்டும். சமயச் சார்பற்ற ஆட்சி என்பதற்கும் சமய நம்பிக்கையற்ற ஆட்சி என்பதற்கும் இடையிலான வேறுபாடு, நன்கு உணரப்படவேண்டும். பொய்யான நம்பிக்கை யூட்டலும் போலியான வாதங்களை முன்வைப்பதும் சமயத்திற்கு உண்மையான அரண்கள் ஆகா என்பது, சமயவாதிகளுக்குப் புரிந்தாக வேண்டும். தத்தமக்கு விருப்பமான - நம்பிக்கை தரும் சமயம் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும் தனி மனித உரிமைக்குத் தடைபோட எவர்க்கும் உரிமை இல்லை என்பதையும் சமூகம் உணர வேண்டும்.

சேக்கிழாரின் சித்திரிப்புகளிலிருந்து பிரித்தெடுத்துக்கொண்ட அவரது சமயம் சார்ந்த சமூகக் கோட்பாடு மேலே தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

www.saivamonline.com

## அரசன் கடமை

அரசன் ஆளுகைக்கு உட்பட்டதே சமயம். சமயவாதிகளும் அவன் ஆட்சியின்கீழ் வருவர். எனினும், அவர்களுக்கு உரிய மரியாதை தர வேண்டுவது ஆட்சியாளர்களின் தலையாய கடமை. பரஞ்சோதி என்ற பெயரில், பல்லவன் படையில் தளபதியாகத் திகழ்ந்தவர் சிறுத்தொண்ட நாயனார். வாதாபி மீது படைநடத்தி, அவர் பெருவெற்றி பெற்றுத் திரும்புகிறார். எல்லாப் போர்களிலும் பரஞ்சோதியார் பெற்றுவரும் வெற்றிக்கான மூல காரணம் யாது எனப் பல்லவன் அமைச்சர்களை வினவுகிறான். போர் ஆற்றலுடன் சிவன்பால் கொண்ட பத்திமையால் வந்த ஊக்கமும் இணைய, இவர் வெற்றி சிறக்கிறது என்று அமைச்சர்கள் விடை தருகின்றனர்.

" மதியணிந்தார் திருத்தொண்டு
வாய்த்த தவ வலிமையினால்
எதிர் இவருக்கு இவ்வுலகில்
இல்லை என எடுத்துரைத்தார் "

என்பது மேற்குறித்த, விடைக்கான இலக்கிய வரிகள். கேட்ட மன்னன், நுணுக்குற்றுச் சிவன் அடியார் என்று அறியாது, அவரைப் போர்முனையில் விடுத்துத் தான் குற்றமிழைத்துவிட்டதாக வருந்தி, அவரிடம் பொறுத்தருளுமாறு வேண்டி, அவரைப் போர்த் தொழிலிலிருந்து விடுவித்து, பெரும் பொருள் வழங்கி, திருச்செங்காட்டங்குடி சென்று விரும்பியவாறு சமயப் பணியாற்ற வழி திறக்கிறான். சமூகத்தைச் சமயத்தின் பெயரால் அறநெறியில் நிறுத்தும் சமயவாதிகளுக்கு அவர்களை இனங் கண்டு உரியவாறு மதிப்பும் மரியாதையும் காட்டி, அவர்களைத் தத்தம் சமயப்பணியாற்றி மகிழ மன்னன் துணை நிற்க வேண்டும் என்பதைச் சேக்கிழார் இப்பகுதியில் விளக்கம் பெற வைக்கிறார்.

## அமைச்சர் திறம்

நாடாளும் அரசனுக்குக் கண்களாகத் திகழ்பவர்கள் அமைச்சர்கள். பெரியபுராணம் ஒரு சமய இலக்கியமாயினும், அதன்வழித் தமது சமூகப்பொறுப்புணர்ச்சிகளைச் சேக்கிழார், வாய்ப்பு அமையும் போதெல்லாம் எடுத்துரைக்கத் தவறுவது இல்லை. மனு நீதிச் சோழனின் அமைச்சர்கள், அமைச்சிலக் கணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர்கள். சோழன் மகன் வீதிவிடங்கன் தேர்க்காலில் மோதிப் பசுங் கன்று இறக்கிறது. தாய்ப்பசு கலக்கமுற்று நீதி வேண்டி அரண்மனை வாயிலில்

www.saivamonline.com

கட்டப் பெற்றிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் அசைத்து ஒலி எழுப்பி மன்னன் கவனத்தை ஈர்க்கிறது. அரசன் அச்சமுற்றுப் பதைத்து வாயில் சேர்கிறான். பக்கத்தில் நின்ற அமைச்சரை மன்னன் இகழ்ந்து நோக்க, அமைச்சன் உடன் நடந்தன எடுத்துரைக்கிறான். அமைச்சன் இயல்பைச் சேக்கிழார்,

" முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான் "

என்று குறிக்கிறார். நிகழ்ந்தனவற்றை விரைந்து அறிந்து உணர்த்தும் திறம், முதிர்ந்த சட்டம் குறித்த கேள்வி ஞானம், நல்ல மரபில் வருதல் முதலியன அமைச்சன் இலக்கணங்களாகச் சுட்டப்பட்டுள்ளன.

## மனுச்சோழன் அமைச்சர்கள்

அமைச்சனின் பதில் உரை திட்பநுட்பம் நிறைந்த, சட்டத்தின் வரம்புக்கு உட்பட்ட நயஉரையாக அமைகிறது.

" வளவ நன் புதல்வன் ஆங்கோர்
மணிநெடும் தேர்மேல் ஏறி
அளவில் தேர்த்தானை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்தது இத்தன்மை என்றான் "

நின்புதல்வன் என்றதனால் கருணையோடு அணுக வேண்டும் என்பது குறிக்கப்பட்டது. மணி நெடும் தேர் என்பதால், ஒலி எழுப்பிக் கொண்டே தேர் சென்றது என்பது உரைக்கப்பட்டது. அளவில் தேர்த் தானை சூழ என்பதால், முன்னும் பின்னும் பல வாகனங்கள் வந்துகொண்டிருந்தன என்பது உணர்த்தப்பட்டது. அரசுலாம் தெரு என்பதால் கன்றுக்கு அங்கு வேலை இல்லை என்பது தெரிவிக்கப்பட்டது. இளைய ஆன்கன்று என்றதனால் பின்விளைவு அறிய இயலாத அதன் பிள்ளைமை குறிக்கப்பட்டது. தேர்க்கால் இடைப்புகுந்து என்றதனால் இளவரசன் பார்வையில் படாமல், இது நடந்துவிட்டமையால் அது கன்றின் குற்றமே என்பது உணர்த்தப்பட்டது. அமைச்சர் திறம் குறித்த இப் பதிவு ஒரு நாட்டின் முதலமைச்சராகிய சேக்கிழாரால் பதிவு செய்யப் பட்டிருப்பது நம் நம்பிக்கைக்கு உரியதாக உயர்கிறது.

www.saivamonline.com

## குடிமக்கள் திறம்

சேக்கிழாரின் சமுதாயப்பணிகளில் அவர் ஆட்சியாளர் அமைச்சர் திறமுறைத்தாற்போல், சமூகத்தின் அங்கங்களுள் ஒன்றாகிய குடிமக்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கி, அவர்களை உயர்த்தும் திறம் ஆராயப்படவேண்டுவது. ஒரு சிறந்த நாட்டில் வாழும் குடிமக்கள் நல்லறங்களைப் போற்றி நின்று அமைதியான வாழ்க்கை வாழ்வதில் விருப்பம் காட்ட முன்வரவில்லை யென்றால், ஆட்சியாளர்களின் பணிகள் வெற்றி பெறா. தாம் மேற்கொண்ட தொழில் யாதாயினும், அதில் தலை நின்று தம் கடமைகளை முறையாக நிறைவேற்றி, ஒல்லும் வகை சமூகத்திற்கும் தொண்டாற்றக் குடிமக்கள் முன் வர வேண்டும் என்பது அவரது விருப்பமாகக் காணப்படுகிறது.

சைவ சமயம் என்ற அடிப்படைமேல் நின்று, அவர் நிகழ்த்த முனைந்த சமுதாயப்பணிகள் மிகப் பலவாக விரிந்தன. சிலவற்றை மட்டும் காணலாம்.

## இல்லறச் சிறப்பு

இல்லறம், துறவறம் என்ற இரு நெறிகளையுமே சைவம் ஏற்றுப் போற்றியது. சேக்கிழார், இவ்விரண்டினுள் இல்லறத்திற்கே முதன்மை தருகிறார். சைவம், சமண - பௌத்தங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது பெண்மை உயர்ச்சி மற்றும் இல்லறச் சிறப்புக்களையே முன்னிறுத்தின. அம்மை அப்பராகவே உலகத்தைக் கண்டு காட்டினர் தேவார மூவர்.

**" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே "**

என்று, இல்லறவாழ்வு இம்மை மறுமைப் பேறுகள் இரண்டற்கும், தடையாக இராது என்று நம்பிக்கையூட்டினர். 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தான்' என்று அம்மையப்பர் இணைந்திருந்த கோலத்தை, அதற்கு மேற்கோள் காட்டுகிறார். 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்' என்று அண்ணாமலை அண்ணலைச் சுட்டுகிறார். 'நங்கடம்பனைப் பெற்றவள் பாங்கினன்' என்று நாவுக்கரசரும் முருகனை ஈன்ற உமையொடு கூடியவனாகக் கடம்பூரில் சிவன் காட்சி தருவதாகச் சுட்டுகிறார். 'மாதர் பிறைக் கண்ணியானை - மலையான் மகளொடும்' தாம் திருவையாற்றில் கண்டதாக நாவரசர் பதிவு செய்கிறார். சுந்தரர் தேவாரத்திலும் இத்தகைய பதிவுகள் உள்ளன.

www.saivamonline.com

## சில பதிவுகள்

திருநீலகண்டத்துக் குயவனாரை அறிமுகம் செய்யும்போது அவர்,

" வையகம் போற்றும் செங்கை மனையறம் புரிந்து வாழ்வார் "

என்று போற்றி உரைக்கிறார். ஆணும் பெண்ணும் கூடிவாழும் இல்லற வாழ்வே தலையாயது என்பதை வள்ளுவரும் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று சிறப்பிப்பார். துறவறம் பிறர் பழிக்காது நிகழ்த்தப்படுமானால், அதுவும் சிறந்ததே என அதற்கு அடுத்த இடமே அவர் வழங்குவார். சைவத்தில் சிவன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் உரிமை சைவ ஆசாரியர்களுக்குக்கூட மணம் முடித்தாலேயே அமையும் என்று கூறப்படுகிறது. இயற்பகை நாயனார் புராணத்துள் இல்லறத்தை

" மாறிலாத நன்னெறியினில் விளங்கும் மனையறம் "

என்று சிறப்பிக்கின்றார்.

## மரபு போற்றிய மணம்

திருஞானசம்பந்தர் அருள் வரலாற்றில் ஆணும் பெண்ணும் கூடிவாழும் இல்லறச் சிறப்புப் பெரிதாக எடுத்துக் கூறப்பட்டு உள்ளது. புண்ணியப் பதினாறு ஆண்டுகள் நிரம்பப் பெற்றார் சம்பந்தர். தல யாத்திரைகள் யாவும் நிறைவுற்றுச் சீர்காழி சேர்கிறார். பெற்றோரும் மறையவரும் கூடிக்கலந்து, ஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்துகொள்வதற்குரிய பருவம் வந்துவிட்டது என்பதை அவரிடம் தெரிவிக்க வேண்டி அவரிடம் சென்றனர். சேக்கிழார் ஓர் அரிய தொடர் அமைக்கிறார். வேத நெறியாகிய, 'நாட்டுமறை முறை ஒழுக்கம்' எனப்படும் திருமணம் கூட்ட வேண்டும் என்ற கருத்தினராய்,

" .....கோதில் மறை நெறிச் சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டும் "

என்று ஞானசம்பந்தரிடம் விண்ணப்பித்தனர். மனைவி அருகில் இருக்கவே, வேள்வி இயற்ற வேண்டும் என்பது வேதக்கொள்கை. முன்னரே சிவனருள் பெற்று, அவர் ஏவலின் நிலவுலகில் வந்து அவதரித்தவர் ஞானசம்பந்தர் என்பதனால், வயது கூடிற்று ஆயினும், திருமணம் வேண்டேன் என்று விடை தந்தார். மறையவர் மீண்டும் ஞானசம்பந்தருக்குத் திருமணத்தின் சிறப்பை

www.saivamonline.com

" இருநிலத்து மறைவழக்கம் எடுத்தீர் நீர் ஆதலினால்
வருமுறையால் அறுதொழிலின் வைதிகமா நெறியொழுகும்
திருமணம் செய்தருளுதற்குத் திருவுளம் செய்யும் "

என்று எடுத்துரைத்து வற்புறுத்தினர். 'மறைவழக்கம் திருமணம் என்பதைத் தாங்கள்தாமே, உலகுக்கு எடுத்துரைத்தீர்கள். அம்முறையில், வேத நெறியாகிய இல்லறம் ஏற்கத் தாங்கள் இசைந்தருள வேண்டு' மென்றனர்.

## சிவனார் துணை

திருஞானசம்பந்தர் ஒருவாறு திருமணத்திற்கு இசைகிறார். வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் அவதரித்தவர் அவர். எனவே, வேதங்கள் வாழ்வு பெறவும் அந்தணர்தம் வாய்மை, ஒழுக்கம், பெருகும்துறை பலவும் வாழவும் வேண்டி ஞானசம்பந்தர் திருமணத்திற்கு இசைந்தார் என்று சேக்கிழார் சுட்டுவன நினைவுகூரத்தக்கன. சுந்தர மூர்த்திகள் கயிலாயத்தில் அநிந்திதை, கமலினி என்ற அம்மையின் தோழிகள்மேல் கொண்ட காதலால் மாதவம் செய்த தென்திசை வாழ்வு பெற்றதாகவும், அதன் விளைவாகவே தீதற்ற திருத்தொண்டத் தொகை தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது என்றும் மகிழ்பவர் சேக்கிழார். திருவாரூரில் சுந்தரர் பரவையார் திருமணத்தை முன்னின்று நடத்திய புற்றிடங்கொண்ட புனிதனின் திருவுள்ளத்தையும் திருவொற்றியூரில் சுந்தரர் - சங்கிலியார் திருமணத்தை நட்புக்குரிய தோழனாக நின்று கெழுதகைமையோடு நடத்தி வைத்த ஒற்றியூர் உடைய கோவின் கருணையையும் பெரிய புராணத்துள் படித்து வியவாதார் யார்? ஆணும் பெண்ணும் கூடிவாழும் வாழ்க்கை அளவுக்கு அதிகமான ஊடலால் முறிந்துவிடக் கூடாது என்ற பேருள்ளத்தோடு வேதங்களும் தேவர்களும் அறியாத தம் திருவடிகள் திருவாரூர்த் தேர்வீதியில் தோய, ஒன்றுக்கு இரண்டு முறை பரவையார் இல்லத்துக்குத் தூது நடந்து தம் நண்பர் சுந்தரரோடு அவரை இணைத்துவைத்த பெருங்கருணைத்திற மெல்லாம் கற்பார் நெஞ்சில் கசிவு தோன்றுமாறு பெரிய புராணத்துள் சேக்கிழாரால் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

## இல்லற உறுப்பினர்கள்

சமூக அறங்கள் நிலைநாட்டப்படுவதற்கு இல்லறம் சிறந்த துணை செய்ய வல்லது என்று நிறுவிய சேக்கிழார், இல்லற உறுப்பினர்களாகிய கணவன், மனைவி, மகள், மகன்,

www.saivamonline.com

பணியாளர்கள் என்று பலரும் எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்பதையும் சமூக நாட்டத்தோடு எடுத்துரைக்கிறார். கணவன், இல்லறத்தில் அரசன் என்றால், மனைவி அமைச்சருக்கு நிகரானவள் என்பது சேக்கிழாரின் கணிப்பு. இளையான்குடி மாற நாயனாருக்கு, நள்ளிரவில் வந்த அதிதிக்கு உணவு படைப்பதற்கு உரிய வழிமுறைகளை எடுத்துரைத்த அவர் துணைவியாரின் கூர்த்த அறிவுடைமை முன்னரே எடுத்துக் காட்டப்பட்டது. அப்பூதி அடிகள் வரலாற்றில் திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள் வேண்டிக் கொண்டவாறு, அவர் இல்லத்தில் நண்பகல் உணவருந்த இசைகிறார். இந்த மகிழ்ச்சியை அப்பூதி அடிகளார் முதற்கண் மனைவியோடு பகிர்ந்துகொண்டமையைச் சேக்கிழார் குறிக்கிறார்.



*கபாலி வடிவில் சிவபெருமான்*

"செய்தவர் இசைந்தபோது திருமனையாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே"


எனப் பேசி மகிழ்கிறார். மகிழ்ச்சியான தருணங்களில் முதலில் அதனைத் துணைவியோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது சேக்கிழாரின் எண்ணம். அதேபோல் துன்பத்தின் உச்சியிலும் இருவரும் இணைந்தே தக்க முடிபு காணவேண்டும் என்பதை அப்பூதி அடிகளாரின் மூத்தமகன் பாம்பு கடித்து இறந்த தருணத்தில் இனங்காட்டுகிறார். வாயிலில் வாராது வந்த விருந்தினர் நாவுக்கரசர். கொல்லையில் மூத்த மகன் பிணம். இயற்கையாக மெல்லிய உள்ளம் கொண்ட தாய் கலங்குவாள். இத்தகு தருணங்களில் விருந்தோம்பல்

www.saivamonline.com

மேற்கொள்ளுதல் அரிது. ஆனால், இங்கே இருவரும் இணைந்தே ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

" தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தையாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீழ்ந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்வதற்குச் சூழ்வார் "

நல்ல குடும்பங்களில் கணவன் தான் செய்யும் நல்லறங்களுக்கு இசைந்தவளாக மனைவியையும் பயிற்ற வேண்டும் என்பதை இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது.



*'நம்மைக் காக்க வரும் மணி'*

## திருவெண்காட்டு நங்கை

சிறுத்தொண்டர் வரலாற்றில், அவர் செய்த செயற்கரிய செயலில் சரி பாதிப் பெருமை அவர்தம் துணைவியார் திருவெண்காட்டு நங்கைக்கும் உண்டு. 'தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை' என்றும், 'மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை' என்றும், சேக்கிழார் அவர் பெருமை பேசுவார். 'அடியேனுக்கு இதுவும் அரிதன்று' என்று வடபுலத்துக் காபாலி வடிவில், கணபதீச்சரம் ஆலயத்துள் ஆத்தியின்கீழ் இருந்த இறைவனுக்கு, அவன் இறைவன் என்று உணராதே, பிள்ளைக்கறி படைக்க இசைவளித்துவிட்டுச்

www.saivamonline.com

சிறுத்தொண்டர் இல்லம் சார்கிறார். வாசலில் நின்று அவரை வரவேற்கிறார் துணைவியார். மனைவியாரிடம், சிவனடியார் வேண்டியன யாவும் உரைத்துத் தாம் அதற்கு இசைந்தவாறும் உரைக்கிறார். அம்மையாருக்குச் சிவனடியார் வைத்த குறி நம் ஒரே மகன் மேல்தான் என்று ஒரு நொடியில் புரிகிறது. உணவு படைக்க இசைந்தவராய் அம்மையார் ஒரு குடிக்கு ஒரு மகனை நாம் பெறுவது எவ்வாறு என்று வினாத் தொடுக்கிறார் .

## வெற்றிக்குத் துணை

ஒரு குடிக்கு ஒரு மகனை, விருப்பம் நிறை பொருள் கொடுத்துப் பெற்றுவிடவும் முடியும். ஆனால், அவனை அரியும் துணிவுடைய தந்தை - தாயர் உலகில் இல்லை. எனவே, நான் உய்யுமாறு நீ பெற்றெடுத்த மகனை அழைப்போம் என்று வழி திறக்கிறார் சிறுத்தொண்டர். சிறிதும் சலனமின்றி அம்மையார் பேசுகிறார்.

" நம்மைக் காக்க வரும் மணியைச்
சென்று பள்ளியினில் கொண்டு வாரும் என்றார் திருவனையார் "

என்பது திருவெண்காட்டு நங்கை உரைத்தது. சிறுத்தொண்டர், 'நான் உய்ய நீ பயந்த மகன்' என்றார். அம்மையார் ஒருபடி மேலே போய் 'நம்மைக் காக்கவரும் மணி' என இருவரையும் இணைக்கிறார். 'திருவனையார்' என்றது மேற்குறித்த நிகழ்வுகளால் கலங்காது நின்ற பெண்மைப் பொலிவை எடுத்துரைப்பதாக அமைகிறது. ஒருவர்பால் ஒருவர் கொண்ட ஈடுபாடும் ஒத்த உள்ளமும் ஒருவரை ஒருவர் கலந்துகொண்டு செயலாற்றலும் இல்லறத்தின் வெற்றிக்குத் துணையாவன என்பது சேக்கிழாரின் கணிப்பு.

## மங்கையர்க்கரசியார்

கணவன் மனைவிக்கு இடையே கருத்தொற்றுமை இல்லை என்றால், வாழ்க்கை சிறவாது என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் சேக்கிழார் இனம் காட்டுகிறார். தேவையற்ற விபரீத ஐயங்கள் இல்லற அமைதியைக் கெடுத்துவிடும் என்பதும் அம்மையார் வரலாற்றால் புலப்படுத்தப்படுகிறது. கணவன் நெறி திரும்பிய காலை, நெறிப்படுத்தும் கடமை மனைவிக்கு உண்டு என்பதை, முன்னரே திருநீலகண்டத்துக் குயவனார் வரலாற்றில் கண்டோம். புறச்சமயம் சார்ந்து, சமணக் குருமார்கள் சொற் கேட்டு, ஞானசம்பந்தர் திருமடத்தில் தீவைக்க இசைந்த கூன் பாண்டியனின் அழிவு மங்கையர்க்கரசியாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. தாம் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைக்கப்பட்டதற்கு மூல காரணம் கூன் பாண்டியனே என உணர்ந்த திருஞான சம்பந்தர், அத்தீயைப்

www.saivamonline.com

பாண்டியன் மீதே திரும்ப ஏவினார். 'செய்யனே திரு ஆலவாய் மேவிய ஐயனே' என்று தொடங்கித் தீயை, 'பையவே சென்று பாண்டியற்கு ஆகவே' என்று பணித்தார். பையவே என்றதனால், பாண்டியன் உடலில் அத்தீ வெப்பு நோயாகச் சென்று பற்றியது. 'பையவே' என்று ஆணையிடாதிருந்தால் பாண்டியன் எரிந்து சாம்பலாகியிருப்பான். சேக்கிழார் 'பையவே' என்று ஞானசம்பந்தர் உரைத்தமைக்கான காரணத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறார்.

**" பாண்டி மாதேவியார் தமது பொற்பில் பயிலும்**
**நெடுமங்கல நாண் பாதுகாத்து "**

திருஞானசம்பந்தர் 'பையவே' என்று பணித்தார் என்கிறார் சேக்கிழார். துணைவியார் வாயிலாகக் கணவன் வாழ்வு பெற்ற வரலாறாக இது அமைகிறது.

## அன்னையர் தியாகம்

கணவருக்கு ஈடாகவும், சில சமயங்களில் சற்று மேலாகவும் குல மகளிர்கள் செயற்கரும் செயல் செய்து நின்ற குடும்ப வரலாறுகளையும் சேக்கிழார் பெரியபுராணத்துள் இனம் காட்டு கின்றார். சோழர் குடியில் ஒரு மன்னன் ஆண்டிருந்தான். அவன் பெயர் சுபதேவன். அவன் துணைவி கமலவதி. அவள் கரு வாய்த்தாள். கருவுயிர்க்கும் நேரமும் வந்தது. அக்காலைக் காலத்தைக் கணித்து உணர்த்தும் அரண்மனைச் சோதிடன் 'இக்குழந்தை இப்பொழுதே பிறக்காமல் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமானால் மூன்றுலகங்களையும் ஆளும்' என்று உரைத்தான். கமலவதி காதுகளுக்குச் செய்தி சென்றடைந்தது. உயிர்க்கு இறுதி பயக்கும் என்று அஞ்சாது, சேடியரை அழைத்து 'என் இரு கால்களையும் பிணைத்துத் தலைகீழாக என்னை ஒரு நாழிகை தூக்கிப் பிடியுங்கள்' என உத்தரவிட்டாள். ஒரு நாழிகை கழித்துப் பெரியபுராண அடியவருள் ஒருவனாகிய கோச்செங்கட் சோழன் பிறந்தான். கமலவதி உயிர் நீத்தாள். அச்சோழனே காவிரிக் கரையில் யானைகள் புக இயலாத வாயிலொடு கூடிய எழுபது சிவாலயங்களை எடுப்பித்தான். ஓர் அன்னையின் தியாகத்தால் பிள்ளை நாயனாராக உயர இயன்ற திறமும் சேக்கிழாராலே விளக்கப் பெற்றுள்ளது.

## பகைமறந்த பண்பு

தம் கணவர் ஏயர்கோன் கலிக்காமர், சுந்தரர் தம் இல்லம் நாடி வருகிறார் என்பதை உணர்ந்து, உடைவாளால் வயிற்றிடைக் குத்திக்

www.saivamonline.com

கொண்டு உயிர் நீத்தார் என்பதை அறிந்து, துயரடைகிறார் அன்னார் மனைவி. அதற்குள் ஏவலர்கள் ஓடி வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் இல்லத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதை எடுத்துரைக்கின்றனர். கணவர் உடலை ஒரு வெள்ளைத் துணியால் போர்த்து இல்லத்துள் உட்புறத்தில் ஒருபால் கிடத்தச் செய்கிறார். மேலும், சுந்தரர் வரும்போது இல்லத்தை மணமனை போல் நன்கு அலங்கரித்து அவரை எதிர்கொண்டு அழைத்து வருமாறு அரச சுற்றத்தாரைப் பணிக்கிறார். இல்லத்து வாயிலில் தீபம் ஏற்றி, பூரண கும்பம் எடுத்து, மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, அலங்கரித்து அவரைத் தாமே எதிர்கொள்ள முன் செல்கிறார். கணவர் இறந்துகிடந்த நேரத்திலும் அதனை வெளிப்படுத்திக்கொள்ளாது தம் இல்லம் நாடி வந்தவரை வரவேற்பது தமிழ்ப்பண்பு என்று நிறுவிக் காட்டிய இல்லறப் பெண்மையையும் சேக்கிழார் நம்முன் நிறுத்துகின்றார்.

## இயற்பகை நாயனார்

இயற்பகை நாயனார் அருள் வரலாற்றில் பெண்மை உணர்வுகள் மதித்துப் போற்றப்படவில்லை என்று குறை கூறுவாரும் உண்டு. அவ்வரலாறு அதீதமானது. நம்மனோரால் புரிந்துகொள்ள இயலாத நுட்பம் மிக்கது. தமிழ்ச் சமுதாயப் பண்பாடு மற்றுள்ள மரபுகளோடு ஒத்துச் செல்லாதது என்பதால்தான் அவரை 'இயற்பகை' எனக் குறித்தனர். பூம்புகாரில் தூர்த்த வேடம் கொண்டு இயற்பகையார் இல்லத்திற்குச் சிவன் வருகிறான். சிவனை, நாயனார் இன்னார் என்று அறியாதே வரவேற்று யாது வேண்டும் என்று வினவுகிறார். உன்னிடம் ஒன்றைப் பெற வந்தேன். தருவதற்குச் சம்மதித்தால் கேட்பேன் என்கிறார். என்னிடம் எந்த ஒரு பொருள் இருந்தாலும் அது சிவனடியார்களுக்கு உரியது என்கிறார் இயற்பகை. "என்றால், உன் காதல் மனைவியைத் தா" எனக் கேட்கிறார். சிறிதும் யோசிக்காது, இயற்பகையார் உள் புகுந்து, மனைவியை அழைத்துவந்து, சிவனடியார் முன் நிறுத்தி, மனைவியைக் கலந்து ஆலோசிக்காமல், "உன்னை இம் மெய்த்தவருக்குக் கொடுத்தேன்" என்கிறார். துணைவியார் திகைக்கிறார்.

## மனைவி நினைவு

மனைவியார் என்ன கருதுகிறார் என்பதுதான் நாம் கவனிக்க வேண்டுவது. அம்மையார் கலங்கி மனம் தெளிந்தார் எனச்

www.saivamonline.com

சேக்கிழார் குறிக்கிறார். கலக்கம் கதுமென நிகழ்ந்த நிகழ்வு குறித்து வந்தது. தெளிவு, தம் கணவர்மீது கொண்ட நம்பிக்கைபற்றி எழுந்தது. மேலும், அம்மையார் கணவரை நோக்கி, ''என் உயிருக்குத் தலைவரே! இன்று நீங்கள் எனக்கு இட்ட கட்டளை இதுவானால், நீர் உரைத்த ஒரு செயலை ஏற்றுப் போற்றி இயற்றுதலைச் செய்வேன். அதைத்தவிர வேறு உரிமை எனக்கிருப்பதாக நான் கருதவில்லை'' என்று கணவரை வணங்கி விடைபெற்று, வந்திருந்த சிவனடியார் அருகில் சென்று நின்றார். சேக்கிழாரின் மேற்குறித்த சித்திரிப்பு உன்னதமானது. கணவன் மனைவி இடையே நிலவும் உறவு முறைமை குறித்து அந்நியரால் முற்றிலுமாக ஒன்றும் உணர இயலாது. இத்தகு உயரிய பெண்களின் ஒத்துழைப்புமட்டும் கிடைக்காதுபோனால் இயற்பகை போன்றோர் செயற்கரும் செயல் செய்தல் இல்லை.

## மானக்கஞ்சாறர்

இல்லறத்தின் வெற்றிக்குக் கணவன் மனைவி இடையே நிலவும் புரிந்துகோடலும் நேயமும் தேவைப்படுதல்போலக் குழந்தைகளின் நற்பண்புகளும் துணையாகும் என்பது சேக்கிழாரின் கருத்து. ஆண்பிள்ளைகள்மட்டு மல்லாது பெண்மக்களும் தியாகம் செய்த வரலாறும் பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளது. கஞ்சாறூர் என்ற ஊரில் வாழ்ந்த சிவனடியார் மானக்கஞ்சாறர். வேளாளர். சேனாபதியாகக் கடமை ஆற்றுபவர். தம்மை நாடிவந்த சிவனடியார்களுக்கு அவர் வேண்டுவன குறிப்பறிந்து கொடுத்து வந்தார். அவர் துணைவியார் பெருங் கற்பினர். அவர் கற்புத் திறத்தை 'மழைக்குஉதவு பெருங்கற்பு' என்கிறார் சேக்கிழார். அவர்கள் ஈன்றெடுத்த ஒரே மகளுக்கு விடிந்தால் திருமணம். பெருமான் ஒரு சிவனடியாராக நாயனார் இல்லம் வருகிறார். மணக்கோலம் பூண்டிருந்த மகளை அழைத்து வந்து, சிவனடியாரைப் பணிந்து, ஆசிபெறுமாறு தந்தை பணிக்க, அவரும் சிவனடியார் தாள்களில் வீழ்ந்து வணங்குகிறார். நீண்டு வளர்ந்திருந்த மணப்பெண்ணின் கூந்தலைப் பார்த்து, அதனை வழங்குமாறு சிவனடியார் நாயனாரை வேண்டுகிறார். நாயனாரும் மறாது, மணப்பெண் என்றும் பாராமல் மகள் கூந்தலை அறுத்துக் கொண்டுவந்து அடியார் கைகளில் வழங்குகின்றார்.

## பலரது ஒத்துழைப்பு

இத்தகு வரலாறுகளில் அடியார்கள் பெற்ற வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அன்னாரது குடும்ப உறுப்பினர்களும் ஒத்துழைத்த

www.saivamonline.com

திறம் உற்று நோக்கத்தக்கது. அப்பூதி அடிகளார் வரலாற்றில் மூத்த திருநாவுக்கரசு செய்த தியாகம் அப்பூதி அடிகளாரை நாவுக்கரசர் தேவாரத்துள் வைத்துப் பாடும் உயர்ச்சியைத் தந்தது. சிறுத்தொண்டர் வரலாற்றில் சந்தனத் தாதி என்ற பணிமகள் தக்கநேரத்தில் வழங்கிய தலைக்கறி சிறுத்தொண்டரின் வெற்றிக்குத் துணையாயிற்று. சமூக மேன்மைக்கு நல்ல குடும்பங்கள் உருவாதலின் இன்றியமையாமையைச் சேக்கிழார் பல வரலாறுகளில் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கிறார். சேக்கிழாரின் சமுதாயப்பணிகளில் காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு, அவர் முன்னிறுத்தும் நல்ல குடும்பங்கள் நமக்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன.

## பண்பாட்டுத் தடம்

ஒரு சமுதாயத்தின் உயர்ச்சிக்குக் காரணங்களாக அமையும் பலவற்றுள் அச்சமூகம் பற்றி நிற்கும் பண்பாட்டுக்கு உயரிய இடம் உண்டு. தமிழ்ச் சமுதாயம் ஒரு பண்பாட்டுச் சமுதாயம். தமிழர் பண்பாடு, உலகில் வாழும் பல இன மக்களையும் ஈர்த்துவருதல் கண்கூடானது. சேக்கிழார், தம் பெரியபுராணம் வாயிலாக உணர்த்தும் பண்பாட்டுப் பதிவுகளுள் சில முன்னைய பகுதிகளில், தேவைக்கு வேண்டுமாறு இனங் காட்டப்பட்டன. எஞ்சி நிற்கும் அரிய பண்பாட்டுப் பதிவுகளை இப்பகுதியில் காணலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றி வளரும் காதல் குறித்த பல பண்பாட்டுப் பதிவுகளைச் சங்க நூல்களிலும் திருக்குறள் காமத்துப் பாலிலும் ஏனைய தமிழ்ச் சாயல் கொண்ட இலக்கியங்களிலும் காண முடியும். சேக்கிழாரும் சமய நூலாயினும் காதலை விரிக்கும் காலங்களில் தமிழர் பண்பாட்டை மரபுகளின் மேல் நின்றும் மரபுடைத்தும் எடுத்துக் காட்டுகிறார்.

## உலாமரபு உடைத்தல்

சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கும் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் திருமகளாருக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. முதல்நாள் மாப்பிள்ளை அழைப்பு. குதிரைமீது பேரழகரான சுந்தரர் மேலும் அலங்கரிக்கப்பட்டவராய் மணப்பந்தல் நோக்கி வீதி வழி வருகிறார். வீதிகளின் இருபக்கமும் உயர்ந்து நின்ற மாடங்களின் நிலாமுற்றங்களில் நின்றவாறு இளம் பெண்கள் மாப்பிள்ளை ஊர்வலத்தைக் கண்டு மகிழ்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் எழில்கண்டு அவர்கள் உரைத்த வாசகங்கள் உயரிய தமிழர் பண்பாட்டை விளக்குவனவாக அமைகின்றன. பண்ணொடு

www.saivamonline.com

கீதம்பாடி ஆடியவர்களாய் அவ்வூர்ப் பெண்கள் சுந்தரரின் எழில் கண்டு,

> " கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்
> பெண்களில் உயர நோற்றாள் சடங்கவிபேதை என்பார்
> மலர்களிடை வந்த மணம் கண்டு வாழ்ந்தோம் என்பார் "

என்று மகிழ்ந்து உரைத்தனர். 'இவன் அழகைக் காண எம் தோழி சடங்கவிப் பேதைக்குக் கண்கள் பல வேண்டும். இவள் நோற்ற நோன்பின் பயனாகவே இத்தகு அழகன் மணாளனாக அமைந்துள்ளான். இம்மண்ணுலகம் மகிழுமாறு நடைபெறும் திருமணத்தைக் கண்டு நாங்கள் வாழ்வு பெற்றோம்' என்றனர்.

## குலமகளிர் இயல்பு

மேலும், அவர்கள் எண்ணங்களின் வெளிப்பாட்டைச் சேக்கிழார் பதிவுசெய்து காட்டுகிறார். இம் மணமகன் கண்களிலிருந்து புறப்படும் அருள் நிறைந்த பார்வையாகிய வெள்ளத்துள் நாங்கள் அலைக்கழிந்தோம் என்கின்றனர். ஆபரணம் அணிந்த இவனே புண்ணிய மூர்த்தியாவான் என்கின்றனர். இப்பதிவுகளில் என்ன புதுமை உண்டு என்று வினவத் தோன்றலாம். தமிழில் தோற்றம் கொண்ட உலா இலக்கியங்கள் யாவும் ஏறத்தாழ ஒரே அமைப்புடையன. பாட்டுடைத்தலைவன் உலாப் போகும்போது மாளிகைகளின்மேல் நின்று அவனைக் காணும் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக ஏழு பருவத்தினரும் அவன் அழகு கொண்டு பித்தேறிப் பலவாறு பிதற்றி மயங்குவதாகவே அவை புனைந்து நின்றன. இவ்வாறு ஒருவனைக் கண்டு பல பருவப் பெண்களும் மயங்குவதாகச் சித்திரிப்பது குலமகளிர்களுக்கு இழுக்கல்லவா என்ற வினா எழுந்தபோது விடை கூற இயலாதவர்கள், அவர்கள் குலமகளிர்கள் அல்லர் கணிகையர்கள் என்று மேன்மேலும் பழி சூழ்ந்தனர்.

## புது மரபு படைத்தல்

சேக்கிழார் இந்த உலா இலக்கிய மரபை உடைத்துத் தகர்க்கிறார். வீதியின் இரு மருங்கும் நின்று மணவாளர் வலம் கண்டவர்கள் குல மகளிர்களே என்று நாட்டுகிறார். ஒருத்திக்குப் பேசி முடிக்கப்பட்ட ஆடவன் ஒருவன் அழகைக் கண்டு மகிழலாமே அன்றி அவனை விரும்புதல் பண்பாடன்று என்ற வளர்ச்சி மேலிட்ட பெண்கள், பண்பாட்டு எல்லைக்குள் நின்று உரைக்கும் வார்த்தைகள் சேக்கிழாரால் நனி நாகரிகமாகப் பதிவு

www.saivamonline.com

செய்யப்பட்டுள்ளன. இவனை மணக்கப்போகும் பெண் செய்த தவம் என்னை என்பதும், மணமகன் கண்களிலிருந்து புறப்படும் அருள் வெள்ளத்துள் நனைந்தோம் என்பதும், இவன் புண்ணியத்தின் வடிவாக வந்தவன் என்பதும் தமிழ் உலா இலக்கிய மரபு காணாத புதிய பண்பாட்டு வரவுகள்.

## களவிலக்கியங்கள்

தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ் இலக்கண நூல்கள் பலவும் களவிலக்கணம் உரைக்க வந்தபோது ஒற்றைச் சார்பு நிலையை மேற்கொண்டன. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் முதன்முதலாகக் காணும்போது சுற்றுச்சூழல் எழில் காரணமாக ஐயம் கொள்ளுதல் இயல்பே. தமிழ் அக இலக்கணங்கள் யாவும் தலைமகன் தலைமகளைக் கண்டு 'இவள் விண்ணுலக மகளோ, வித்தியாதரர் மரபினளோ, அல்லது மண்ணுலக மகள்தானோ' என்று வியந்து, பின் அறிவால் 'இவள் மானுட மகளே' என்று தீர்மானிப்பான் என்றாலும், ஆண்மகனை அவ்வாறு ஐயுறுதலும் தெளிதலும் பெண்ணுக்கு இல்லை என்று அவர்கள் கூறினர். மன்மதனோ, முருகனோ என்று பெண் ஐயுற்றால், அவள் அறிவுக் குறைபாடு காரணமாக அவள் உள்ளத்தில் அச்சம் பிறக்குமே அன்றிக் காதல் பிறவாது என்று அன்னோர் வாதிட்டனர்.

## மரபு காத்தல்

நெடுநாள் போற்றப்பட்டு வந்த இந்தக் காதல் இலக்கண மரபைச் சேக்கிழார் தகர்த்து எறிந்து புதுமரபு படைக்கிறார். திருவெண்ணெய் நல்லூரில் சிவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலயாத்திரை மேற்கொண்டு திருவாரூர் சார்கிறார். ஆரூர்ப் பெருமானைத் தரிசித்துவரும் நாளில், பேரெழில் மிக்கவராகிய நங்கை பரவையார் தோழியரொடு ஆரூர்ப் பெருமான் ஆலய வழிபாட்டுக்கு ஒருநாள் வருகிறார். அவர் எழில்கண்ட சுந்தரர் 'இவள் யாராக இருக்கும்' என்று பலவாறு சிந்திக்கத் தொடங்குகின்றார்.

" கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவன் அருளோ அறியேன் என்று அதிசயித்தார் "

என்பது சேக்கிழாரின் அழகிய கவிதை. இவ்வாறு ஆடவன் ஐயுறுவதாகமட்டுமே பாடப்பட்டுவந்த அக இலக்கியக் காதல்

www.saivamonline.com

மரபின் கட்டுக்களை உடைத்துப் புதிய பண்பாட்டுத் தடம் காண்கிறார் சேக்கிழார்.

## பரவையார் திறம்

கோயில் முற்றத்தில் வழிபாடு முடித்துத் திரும்பும் சுந்தரரைப் பரவையார் காண்கிறார். இதுவரை அவர் உணராத ஒரு வேட்கை அவருள் எழுகிறது. அச்சம் முதலிய நாற்குணங்களையும் அவ்வேட்கை தலைசாய வைக்கிறது. எதிரில் வரக் கண்டார்மீது காதல் பிறக்கிறது. 'யார் இவர்' என்று உள்ளத்துள் வினா எழுகிறது. இவன் யாராக இருப்பான் என்ற ஐயம் பரவையார் உள்ளத் துள்ளும் ஆடவனைப்போல், பிறக்கிறது.

" முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என் மனம் திரித்த இவன் யாரோ என நினைந்தார் "

'இவ் வழகன் முருகனோ? அன்றி மன்மதனாக இருப்பானோ? வித்யாதரருள் ஒருவனோ? சிவனருள் பெற்ற ஒருவன்தானோ' என்று அடுத்தடுத்துப் பெண் மனத்தில் ஐயம் எழலும், நிறைவில் மானுட மகனே என்று ஐயம் தெளிதலும் பெண்மைக்கும் பெண்மைப் பண்புக்கும் பெருமை சேர்த்த சேக்கிழாரின் அரிய பதிவுகளுள் ஒன்றாகும்.

## திருமணத்துக்கு முற்பட்ட உறவு

சங்க அக இலக்கியங்களும் அவற்றை விளக்க எழுந்த தொல் இலக்கணங்களும் திருமணத்துக்கு முற்பட்ட உடல் உறவை அறம் போலச் சித்திரித்துக் காட்டின. நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்த தமிழ் அக இலக்கிய மரபில் தலைவனும் தலைவியும் களவுக் காலத்தில் தனியிடத்தில் சந்தித்து இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என உடலுறவு கொண்டிருந்ததாகச் சுட்டின. களவு, இரண்டு திங்களுக்குள் முடிவுக்கு வரவேண்டும் என்று எல்லையும் வகுத்தன. பலர் இந்தக் கற்பனை இலக்கியப் புனைவை நடைமுறை என்றே கருதித் தமிழர் நாகரிகம்பற்றித் தமக்குத் தோன்றியவாறு விளக்கம் தந்தனர். திருமணத்துக்கு முற்பட்ட உடல்உறவு தமிழர் நாகரிகத்துக்கு ஏற்புடையது அன்று என்று சிலர் சுட்டிக் காட்டியபோது, ஆய்வாளர் சிலர் இயற்கைப் புணர்ச்சி முதலியன வெறும் தழுவலே எனப் புதிய விளக்கம் தந்து ஒருவாறு

www.saivamonline.com

சமாளித்தனர். கலைகளில், மக்கள் வாழ்க்கையில் நடைமுறையில் உள்ளனவற்றிற்கு மேலான சித்திரிப்பை எதிர்பார்த்தனர். வாழ்க்கையில் இல்லையாயினும் கலைகளிலாவது அது இருத்தல் வேண்டும் என்று விரும்பினர். கலைகள் சமூக நடைமுறை வாழ்வை அப்படியே சித்திரிக்காமல் கூடுதல் விருப்பங்களையும் கூட்டிக் கொண்டன. கலைகள் மக்களால் விரும்பப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

## திருமருகல் நிகழ்வு

சேக்கிழார் இதுபற்றிச் சிந்தித்திருக்கிறார். நடைமுறைச் சமூக இலக்கியத்தில் இச்சிக்கல் குறித்து விடை தர முனைகிறார். அதனைத் தமது சமூகக் கடமை என்று அவர் கருதுகிறார். திருஞானசம்பந்தர் வரலாற்றில் அவர் தல யாத்திரை மேற்கொண்டு சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்றாகிய திருமருகலுக்கு ஒரு புலர்காலையில் வருகிறார். திருக்கோயில் வளாகத்தில், ஒரு பெண் இறைவன் திருநாமம் கூறித் தனித்து அழுது அரற்றும் குரல் ஞானசம்பந்தர் செவிகளில் விழுகிறது. அழுகுரல் வந்த இடம் நோக்கி அடியாரொடு செல்கிறார். பெற்றோருக்குத் தெரியாமல் மணம் செய்து கொள்ளும் விருப்போடு உடன்போக்கில் காதலனொடு வந்த ஓர் இளம் பெண் ஊர்ப் பொதுச் சத்திரத்தில் காதலன் பாம்பு கடித்து இறக்க, அவன் பிரிவுத் துயர் தாளாது அரற்றி அழுவதைச் சம்பந்தர் அறிகிறார். இரக்கமுற்று, அக் காதலன் உடலைச் சிவாலய முன்றிலுக்குக் கொண்டு வரச் செய்து, ‘சடையாய்’, என்று தொடங்கும் பதிகம் பாடி அருள் வேண்டுகிறார். இறந்த காதலன் உயிர் பெற்று எழுகிறான்.

## ஐய வினாக்கள்

சமய நம்பிக்கை உடைய சிலர்கூட இன்று ஒரு வினா எழுப்புகின்றனர். ஞானசம்பந்தர் முதலியோர் பாடிய பாடல்களை ஓதினால், உரிய பலன் கிடைக்குமா என்று ஐயுறுகின்றனர். கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அருட்பனுவல்களை ஓதும் முறைமை இன்றும் சமயவாதிகளிடம் உள்ளது. இறந்தார் பிழைத்தார் என்பது பொய்ம்மை அன்று. சமய வாழ்வில் இது ஏற்கத் தக்கதே. என்றாலும், அறிவியல் போல நிரூபணம் செய்வது கடினம். ஆனாலும், சேக்கிழார் நம்மை நம்பிக்கையூட்டப் புதிய தடம் ஒன்றை அமைக்கிறார். காதலன் அருகே நின்று அழும் காதலியின் அழுகையின் ஊடே ஒரு சமூகப் பண்பைப் பதிய வைக்கிறார். தாய்மாமன் முறை கொண்ட அவன் பிணக்கோலம் கண்டு அரற்றும்

www.saivamonline.com

அவள் அழுகையின் இடையே ஒன்றைக் குறிக்கிறாள். சேக்கிழாரின் விளக்கம் இவ்வாறு வருகிறது:

" வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள் "

என்பது அத்தொடர். 'மாமனே நீ இறந்து கிடக்கிறாய். எங்கிருந்தோ வந்த பாம்புக்கு உன்னைத் தீண்டும் உரிமை இருந்தது. தீண்டிற்று; மாய்ந்தாய். உன்னை நம்பி உடன் வந்த நான், உன் அருகில் இருந்தும் உன் மேனியைத் தீண்டி அழும் உரிமை எனக்கு இல்லையே' என்று அவள் அழுதிருக்க வேண்டும். அவள் அழுகையின் உட்பொருள் சமூக மரபுகளுக்கு இசைவாகத் திருமண வினை நிகழாத காரணத்தால் அவனைத் தீண்டி அழும் உரிமை அவளுக்கு இல்லை என்பது. இதன்வழி சேக்கிழார், திருமணத்திற்கு முற்பட்ட உடல் உறவு தமிழர் நாகரிகச் சமுதாயத்தில் வழக்கமன்று என்பதை உறுதிப்பட நிறுவுகிறார்.

## ஒழுக்க நெறியே, இறைநெறி

மேலும் ஓர் அழகு இந்நிலைக்களத்தில் உண்டு. மணம் புரிந்து கொள்ளும் விருப்போடு பெற்றோரைத் துறந்து இரவு நேரத்தில் தனி வழியே உடன்போந்த காதலன் - காதலி இருவரும், ஒருவரை ஒருவர் மனத்தால் தீண்டியிருந்தனரே அன்றி விரல் நகத்தாலும் தீண்டியிருக்கவில்லை என்பது சேக்கிழார் பதிவால் புலனாகிறது. திருஞானசம்பந்தர் காலத்தில் பலர் இறந்திருக்கக் கூடும். அவர்களை யெல்லாம் அவர் உயிர் பிழைக்கச் செய்தார் என்ற பதிவுகள் இல்லை. திருமருகலில் வணிகன் உயிர் ஞானசம்பந்தர் பதிகம் பாட மீண்டது என்றால், சமூகம் போற்றும் தலையாய ஒழுக்கத்தில் தலை நிற்பவர்களுக்கு எம்பெருமானின் அருள் என்றும் உண்டு என்பதை நிறுவும் சேக்கிழாரின் முயற்சியாகவே இதனைக் கருதி மகிழ வேண்டியுள்ளது. சமூகத்தில் மேலோர் விதித்த நல்லொழுக்க நெறி முறைகளுக்கும் இறையருளுக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது என்பதை நம்மால் உணர முடிகிறது.

## ஆடவர் ஒழுக்கம்

திருஞானசம்பந்தர் வரலாற்றில் மேலும் ஒரு பண்பாட்டுப் பதிவைச் சேக்கிழார் செய்திருக்கிறார். சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் சிவநேசர் என்ற ஒரு வணிகர் வாழ்கிறார். பெருஞ் செல்வர்; ஒரே மகள்; பெயர் பூம்பாவை. இளமைக்காலம் தொட்டே சிவநேயச் செல்வியாக வளர்ந்துவரும் தம் மகளைத்

www.saivamonline.com

திருஞானசம்பந்தருக்கே மணம் முடிப்பதாக என்ற உறுதி பூணுகிறார் சிவநேசர்.

" சுற்றம் நீடிய கிளையெலாம் சூழ்ந்து உடன் கேட்பக்
கற்ற மாந்தர் வாழ்காழி நாடுடையவர்க்கு அடியேன்
பெற்றெடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் "

என்று மொழிந்தார்.

ஏழு வயதுப் பூம்பாவை பாம்பு கடித்து இறக்கிறாள். அவள் உடலை எரித்து, எந்த வடிவத்திலாயினும் இவளை ஞான சம்பந்தரிடம் சேர்ப்பேன் என்ற உறுதியுடன் சிவநேசர் எலும்பையும் சாம்பலையும் பாதுகாத்துவைத்து, அவர் வருகைக்காகக் காத்திருக்கிறார்.

## மயிலாப்பூர் நிகழ்வுகள்

திருஞானசம்பந்தர் தொண்டைநாட்டு யாத்திரை மேற் கொண்டு திருவொற்றியூர் வந்து வழிபடுகிறார். சிவநேசர் ஒற்றியூருக்கும் மயிலாப்பூருக்கும் பந்தலிட்டு, துணிகளால் அலங்கரித்து ஞானசம்பந்தரை மயிலைக்கு அழைத்துவருகிறார். சிவநேசர் மகளுக்கு உற்றன கேட்டறிந்த சம்பந்தர் வழிபாடு முடித்து, எலும்பும் சாம்பலும் நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் புறமதில் வாயிலுக்குக் கொண்டு வருமாறு சிவநேசரைப் பணிக்கிறார். சிவனை நினைந்து போற்றிச் சம்பந்தர் 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்று தொடங்கிப் பதிகப் பாமாலை பாடுகிறார். சிவன் அருளால் குடம் உடைய , திருமகள்போல் பன்னீராண்டுப் பருவ மகளாகப் பூம்பாவை எழுகிறாள். உலகவர் வியந்து போற்றுகின்றனர். சிவநேசர், தாம் முன்பு விரும்பியிருந்தவாறு பூம்பாவையை மணந்துகொள்ளுமாறு ஞானசம்பந்தரை வேண்டுகிறார். திருஞானசம்பந்தர் அதற்கு இசைந்திலர். 'சிவநேசரே! நீர் பெற்ற பெண் விடத்தால் மடிந்தாள். சிவன் அருளால் நான் தற்போது இவளை உயிர்பெறச் செய்திருக்கிறேன். பெண்ணுக்கு உயிர் தந்தவன் தந்தை அல்லவா? இவளை நான் மணக்குமாறு வேண்டும் உரை பொருந்தாது' என்று மறுக்கிறார்.

## பண்பாட்டுப் பதிவு

சமயத்துறையில் தலைநின்றவர்கள் போற்றிய, சமூக ஒழுக்கத்தை இதன்மூலம் சேக்கிழார் உலகுக்கு அறிவிக்கிறார்.

www.saivamonline.com

பெண்மையின் கற்பெலாம் ஆடவனின் ஒழுக்கச் சார்பால்தான் காவல் பெறும் என்பது சேக்கிழார் கருத்து. பிரமன்கூடத் தான் எண்ணி எண்ணித் திட்டமிட்டுப் படைத்த திலோத்தமை என்பவளின் அழகில் மயங்கி, தன் வயதையும் கருதாது அவள் பின்னே சென்று இரந்தான். தான், உயிர் பெறச் செய்த பெண் அழகு கண்டும், திருமண வயது அடைந்த ஞானசம்பந்தருக்கு எவ்விதச் சலனமும் ஏற்பட்டிலது. சிவனின் கருணை வெள்ளப் பெருக்காகவே பூம்பாவை ஞானசம்பந்தருக்குத் தோற்றம் தந்தாள் என்கிறார் சேக்கிழார்.

> "எண்ணில் ஆண்டு எய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
> நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
> புண்ணியப் பதினாறு ஆண்டு பேர் பெறும் புகலி வேந்தர்
> கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார்"

சேக்கிழாரின் பண்பாட்டுப் பதிவுகளுள் இது குறிக்கத்தக்க ஒன்றாகும்.

## சுந்தரர் பண்பாடு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றிலும் ஓர் அரிய பண்பாட்டுச் செய்கை காணப்படுகிறது. திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் இரண்டு பெண்களை மணந்து இல்லறம் நிகழ்த்தியவர் சுந்தரர். பரவையார் ஊடிய காலை, பெரிதும் தளர்ந்து ஏக்கமுற்றுச் சிவனைப் பரவைபால் தூது போக்குகிறார். பெண் விழைவார்போல் புறத்தோற்றத்தில் காணப்படும் சுந்தரர் நெஞ்சில் தழைத்த பண்பாடு திருநாட்டியத்தான்குடியில் வாழ்ந்திருந்த பெரிய புராண நாயன்மார்களுள் ஒருவராகிய கோட்புலி நாயனார் இல்லத்தில் வெளிப்படுகிறது. தம் இல்லம் நாடிவந்த சுந்தர மூர்த்திகளை வரவேற்றுப் பணிந்து தம் இரு மகளிர்களாகிய சிங்கடியார், வனப்பகையார் இருவரையும் அழைத்துவந்து, சுந்தரர் தாள் மலர்களில் பணிய வைக்கிறார். பணிந்து எழுந்த இருவரையும், சுந்தரர் முன்னிருத்தி, 'என் மகளிர் இருவரையும் ஏற்றருள வேண்டும்' என்று விண்ணப்பிக்கிறார். சுந்தரர், அவர் வேண்டு கோளை ஏற்க மறுக்கிறார். பதினெட்டு ஆண்டுகளே நிரம்பிய சுந்தரர் அம்மகளிர் இருவரையும் தம் மகள்களாக ஏற்றுப் போற்றி மடிமீது இருத்தி உச்சி மோந்து கண்ணீர் சொரிந்தார். இதனை,

www.saivamonline.com

" தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத்
தூய மக்கள் எனக்கொண்டு அப்
படியே மகண்மையாக் கொண்டார்
பரவையார்தம் கொழுநனார் "

என வரும் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. சைவத்தை ஏதீடாகக் கொண்டு, சமயம் கடந்த சமூக வாழ்வில் ஒழுக்கநெறி நிலை நாட்ட இவ்வாறு சேக்கிழார் பல பண்பாட்டு நிகழ்வுகளை ஒளியூட்டி நிறைகிறார்.

## மொழிப் பெருமை

சமுதாயத்தின் ஓர் அங்கமாகச் சமயம் திகழ்வதுபோல் மொழியும் சமூக வாழ்வில் ஓர் இன்றியமையாத ஊடகமாக நின்று சிறப்புப் பெறுகிறது. சைவத்தின்மேல் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு இணையான ஈடுபாட்டைச் சேக்கிழார் தமிழ் மொழிமீதும் கொண்டிருந்தமையை நூல் முழுதும் பரக்கக் காண முடிகிறது. திருஞானசம்பந்தர் திரு அவதாரத்தால் விளைந்த பயன் கூறுமிடத்துச் சேக்கிழார், அவர் வருகையால்

" திசை அனைத்தின் பெருமை எல்லாம்
தென்திசையே வென்றேற
மிசை உலகும் பிற உலகும் மேதினியே
தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறைவெல்ல... "

தமிழ்ச் சமுதாயம் மேன்மையுற்றதாகக் குறித்துக் காட்டுகிறார்.

## தமிழ் ஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தரைத் தமிழோடு தொடர்புபடுத்தி அவர் பல அரிய தொடர்களைப் பதிவு செய்துள்ளார். சம்பந்தர் வருகையால் சைவத்திற்கு இணையாகத் தமிழும் கிளர்ந்தெழுந்ததாகவே சேக்கிழார் கருதுகிறார். சம்பந்தரை,

" மாமறைமுதல் கலை அகிலமும் ஓதாது உணர்ந்த முத்தமிழ் விரகன் "

" வண்தமிழால் எழுதா மறை மொழிந்த பிரான் "

" புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார் "

" மதுர முத்தமிழ் வாசகர் "

" சந்த முத்தமிழ் விரகர் "

www.saivamonline.com

" இயலிசைத் தலைவனார் "

" ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே வாழவரும் அவர்"

"அருங்கலைக் கோன்"

என்றெல்லாம், முத்தமிழோடும் இணைத்துரைத்தல் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஞானசம்பந்தரே என்பதை நிலை நிறுத்துவதாக அமைகிறது. நாவுக்கரசரையும் சுந்தரமூர்த்திகளையும் சேக்கிழார் தமிழோடு தொடர்புபடுத்திக் கதை நடத்துகின்றார்.

## தமிழ்ப்பாடலே அருச்சனை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் தமிழின் சிறப்பு எடுத்துரைக்கத் தக்க வாய்ப்பு ஒன்று சேக்கிழாருக்கு அமைகிறது. திருமண நாளில் சிவன் கிழ வேதியராய் வந்து சுந்தரரோடு வல் வழக்காடுகிறார். வழக்கு வெண்ணெய் நல்லூர்ச் சான்றோர்முன் ஆராயப்பட்டு, வந்த வேதியருக்குச் சுந்தரர் அடிமை என்று உறுதி செய்யப்படுகிறது. மறையவர்கள் வேதியரை நோக்கி 'இவ்வூரில் தங்கள் இல்லம் எங்கே இருக்கிறது' என்று கேட்கின்றனர். 'என் பின்னே வாரீர்' என்று அவர் முன் செல்லச் சுந்தரரும், வேதியரும் அவரைப் பின் தொடர்ந்து செல்கின்றனர். திருவருட்டுறை எனப் பெயர் பெற்ற சிவாலயத்துள் சென்று, இறைவன் மறைகிறார். அனைவரும் திகைத்து நின்றனர். இறைவன் அசரீரி எழுகிறது. சுந்தரர் இறைவன் வலிய வந்து ஆட்கொண்ட திறத்தை வியக்கிறார். 'திருமன்றுள் நடமாடும் ஐயனே ! 'நீ வலிய வந்து ஆட்கொண்ட கருணைக்கு நான் என் செய்வேன்' என்று சுந்தரர் நெகிழ்கிறார். சிவனார் ஓர் அசரீரி தந்து, சுந்தரருக்கு 'வன்தொண்டன்' என்ற பெயர் சூட்டுகிறார். மேலும்,

" ...நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக "

என்று பணித்தருளுகின்றார். சுந்தரர், 'நான் என் சொல்லி நின்னைப் பாடுவேன்' என்று கலங்கி உரைக்கிறார்.

மீண்டும் சிவன் 'முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந் தனை: ஆதலாலே, என் பெயர் பித்தன் என்றே கொண்டு பாடுவாய்' என்று உரைத்தார். சுந்தரரும் 'பித்தா பிறைசூடி' என்று தொடங்கித் தமிழ்ப் பாமாலை பாடிச் சிவன் தாள் மலர்களில் சூட்டினார். இவ்வாறு கதை நடத்துகிறார் சேக்கிழார். அர்ச்சித்தல் என்ற சொல்லுக்குப் போற்றுதல், வாழ்த்துதல் என்பன பொருள்களாகும். அதுநாள்வரை சிவாலயங்களுள் வழிபாட்டின்போது வேத

www.saivamonline.com

மந்திரங்களே ஓதப்பட்டு வந்திருக்க வேண்டும். 'இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்றும், 'பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி' என்றும் வரும் தொடர்களின் உண்மைப் பொருள் தெரிய வரவில்லை. அப்பர் பெருமான் திருத் தாண்டகத்துள், 'போற்றி! போற்றி' என நிறையும் பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. வேதங்களே வழிபாட்டில் முதன்மை இடம் பெற்றிருக்க வேண்டும். அருச்சனை என்பது இன்னது என்பதைச் சேக்கிழாரே வகைப்படுத்தி விளக்குகிறார். பாடல்களே அருச்சனை என்பது அவர் கருத்து. ஆதலால், 'சொற்றமிழ் பாடுக' என்ற தொடரால், அப்பாடல் தமிழ்ப்பாடல் ஆதல் வேண்டும் என்பது அவர் கருத்தாதலை உணர முடிகிறது.

## திட்டமிட்ட பதிவுகள்

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சுந்தரர் வரலாறு தமிழ் மண்ணில் விரிந்தது. அடுத்து நான்கு நூற்றாண்டுகளுக்குப்பின் சேக்கிழார் புராணம் பாடுகிறார். முன்னூல்களிலும் இறைவன் உரைத்த அசரீரி பற்றிய குறிப்புக்கள் இல்லை. அப்படி இருந்தும், ஒரு களம் அமைத்துக் கொண்டு, சேக்கிழார் இறைவன் கூற்றாகவே தமிழின் சிறப்புரைத்திருப்பது சிந்திக்கத் தக்கது. நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் அவதரித்துச் செந்தமிழ்ப் பண்ணிசைப் பதிகங்கள் பல அருளிய பிறகும் அவை இறைவன் சந்நிதியில் ஓதப்படாமல் வேதங்களே தொடர்ந்திருக்க வேண்டும். அந்நிலை மாறி, தமிழ் நாட்டுச் சிவாலயங்களில் தமிழிலேயே தேவாரப் பனுவல்களை ஓதி அருச்சனை நடைபெற வேண்டும் என்று சேக்கிழார் விரும்பியிருந்தமை தெளிவாகிறது. சொற்றமிழ் பாடுகென்றான் 'சிவன்' என்றோ, 'இறைவன்' என்றோ முடிக்காது 'தூமறை பாடும் வாயார்' என்று சொல்வது சிந்தனைக்கு உரியதாகிறது.

## திருமறைக்காட்டு அற்புதம்


திருமறைக்காடு என்ற பழைமையான சிவத்தலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து வழிபடச் சென்றனர். இறைவன் சந்நிதிக்கு எதிரே இருந்த வாயிற் கதவு மூடப்பட்டு அருகில் ஒரு தனிப்பாதை அமைத்தே அனைவரும் ஆலயத்துள் சென்று வழிபட்டுத் திரும்புதலை இருவரும் கண்டனர். வேதங்களால் அவ்வாயில் கதவு அடைக்கப்பட்டது என்றும், வேதம் வல்ல பெருகிய அன்புடையார் வந்து வேண்டினால் கதவம்

www.saivamonline.com

திறக்கும் என்றும், அவ்வாறானவர் யாரும் இதுகாறும் இங்கே வந்திலர் என்றும், அதனால் ஒரு புடை சிறிய வாயில் திறக்கப்பட்டது என்றும் உள்ளூர் மக்கள் எடுத்துரைத்தனர். சேக்கிழார் தரும் பாடல் வரிகள் கவனிக்கப்பட வேண்டுவன.

" அருமறைகள் திருக்காப்புச் செய்துவைத்த
அக்கதவந்திறந்திட அம்மறைகள் ஓதும்
பெருகிய அன்புடை அடியார் அணைந்து
நீக்கப் பெறாமையினால்... "

என்பது சேக்கிழார் குறிப்பன. இதைக் கேட்ட ஞானசம்பந்தர் உள்ளத்தில் உறுதி பிறக்கிறது. இவ்வாயிலைத் திறந்து, அதன் வழியே ஆலயத்தின் உட்புகுந்து வழிபட விரும்புகிறார்.



*மறைக்கதவும்*

## நாவரசர் தமிழ்

திருஞானசம்பந்தர் அருமறைத்தலைவர். வேதநெறி வாழ வந்தவர். வேதங்களால் திருக்காப்பிடப்பட்ட கதவுகள், வேதம் வல்ல அன்பர் ஒருவர் வாக்கால்தான் திறக்கும் என்று உள்ளூரார் உரைத்துள்ளனர். திருஞானசம்பந்தர், தம் பெருமை நிலைநாட்ட, தக்க தருணம் இது என்று கருதி, அவரே பாடியிருக்க வேண்டும். அவர் அங்ஙனம் செய்யாமல் தமிழ் மொழித் தலைவராகிய திருநாவுக்கரசரை 'மறைக்கதவம் திறக்கத் தாங்கள் பாடியருள வேண்டு' மென்று விண்ணப்பிக்கிறார். அப்பரை நோக்கி,

www.saivamonline.com

"....நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு
மெய்ப்பொருள் வண்தமிழ் பாடி அருளும்"

என்று கேட்டுக்கொண்டதாகச் சேக்கிழார் குறிக்கிறார். நாவரசரும் அவ்வாறே தமிழ் பாட, மறைக்கதவம் திறக்கிறது. நாவரசர் தமிழ்ப் பண்ணிசைப் பாமாலையின் இன்பத்தைத் துய்த்திருந்த இறைவன், சற்றே காலந் தாழ்த்துத் திறந்தான். இருவரும் உள்ளே சென்று வழிபட்டு, மறைவாயிலை நண்ணினர்.

## தமிழுக்கு முதன்மை

திருநாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி, 'இனி வருங்காலங்களில் இக்கதவம் திறக்கவும் அடைக்கவும் ஏதுவாக, இக்கதவம் மீண்டும் அடைக்குமாறு நீங்கள் பாடவேண்டும்' என்று கேட்டுக் கொள்ளுகிறார். சம்பந்தரும் அவ்வாறே பாடக் கதவம் மீண்டும் அடைத்துக் கொள்கிறது. திருஞானசம்பந்தரின் செயலாகச் சேக்கிழார் விரிக்கும் பகுதிகள், தமிழ் மொழியின் மேன்மை உரைப்பதற் கென்றே பாடப்பட்டமை புலனாகிறது. மறைகளால் அடைக்கப் பட்ட கதவை, மறைவல்ல ஞானசம்பந்தரே பாடித் திறக்கச் செய்தார் என்று பாடாமல், நாவரசர் பாடித் திறந்ததாகப் பதிவு செய்தது, வேதத் தடைகளை வென்று தமிழ் முன்னேற வல்லது என்பதை நிறுவும் முயற்சியாகவே தோன்றுகிறது. வாய்மூரில், நாவரசருக்கு இறைவன் காட்சி தரத் தாமதித்தமைக்கான காரணம் விளங்க்வில்லை. தமிழால் திறந்த கதவத்தை மீண்டும் அடைக்கப் பாடுமாறு பணித்த நாவரசர் செயல், தமிழறியும் பெருமாளாகிய சிவனுக்கு மனவருத்தத்தைத் தந்திருக்கலாம். நாம்அறியோம். எங்ஙனமாயினும் வேதத்துக்கும் மேலான இடம் தமிழ் மொழிக்கு உண்டு என்பதை நிலை நாட்டுவதில் சேக்கிழார் கொண்டிருந்த விருப்பம் உறுதியாகிறது.

## தமிழ் ஆகமம்


திருமூலர் அருள் வரலாற்றில் தமிழ் மொழிச் சிறப்புரைக்க மேலும் ஒரு வாய்ப்புச் சேக்கிழாருக்கு அமைகிறது. இமய மலையிலிருந்து தமிழ்நாடு போந்த முனிவர் ஒருவர் பசுக்களின் துயர் நீக்க, மூலன் உடலில் தன் உயிரைச் செலுத்தி எழச் செய்து அவற்றின் துன்பம் துடைக்கிறார். பின் மீண்டும் வந்து, தம் உடலை அவர் தேடும்போது அது விட்ட இடத்தில் காணப்படவில்லை. உடல் மறைக்கப்பட்டதற்கான காரணத்தை ஞானத்தால் உணர்கிறார்.

www.saivamonline.com

" தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறந்த உணர்வுடையார் ஈசன் அருள் என உணர்ந்தார். "

சிவபெருமான் அருளிச் செய்தன சிவாகமங்கள். அவற்றைத் தமிழில் இடம் பெறச் செய்யச் சிவனே உளங்கொண்டு திருமூலரை அப்பணிக்கு நியமித்தான் என்கிறார் சேக்கிழார். திருமந்திரம், தமிழ் ஆசுமம் என்பது உணர்த்தப்படுகிறது.

## ஆனாய நாயனார்



ஆனாயர்

சேக்கிழாரின் பெரிய புராணத்துள் நுண்கலைகள் பற்றிய சில அரிய குறிப்புக் களும் காணப்படுகின்றன. அறுபத்து மூவரில் ஒருவரான ஆனாய நாயனார் துளைக் கருவிகளுள் ஒன்றாகிய வேய்ங்குழல் வாசித்த திறம் எடுத்துரைக்குமிடத்து, இசை நுணுக்கங்கள் சிலவற்றைச் சேக்கிழார் சுட்டிச் செல்கிறார். மாடு மேய்க்கச்சென்ற இடத்தில், பூத்துக் குலுங்கி நின்ற கொன்றை மரம் ஒன்றை அவர் சிவனாகவே கண்டு பூரிக்கிறார். சிவபெருமானுக்கு உரிய திருவைந்து எழுத்துக்களை உள்ளுறையாக அமைத்து ஆனாயர் குழலிசையை எழுப்பினார். முதலில் குறிஞ்சிப் பண்ணைப் பாடிய பிறகு, முல்லைப் பண்ணினை அமைத்துப் பாடினார். பாலை யாழுக்கு அமைந்த, தாரம், உழை என்னும் இரண்டு தாளங்களிலும், ஐந்தெழுத்தை வைத்து இசைத்தார். ஆயத்தம், எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும், ஏற்ற முறையினை விளைவித்துப் பாடினார். மெலிவு, சமன், வலிவு என்ற மூவகைச் சுருதிகளின் முறைப்படி அளவு குறையாமல் இசை மாரி பொழிந்தார். இசை நூல்களில் கூறிய இலக்கணம் தவறாது அளவுபடுத்திய பெருவண்ணம்,

www.saivamonline.com

இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்கின்ற இசை வேறுபாடு களுக்கு எல்லாம் ஏற்பப் பாணி, தாளம், இசை, தூக்கு, நடை முதலியவற்றுடன் இன்னிசை பரப்பினர்.

## இசை நுணுக்கங்கள்

ஆனாய நாயனார் வரலாற்றில் குழல் இசை நுணுக்கங்களைப் பதிவு செய்த சேக்கிழார், திருஞானசம்பந்தர் வரலாற்றில் திருநீல கண்ட யாழ்ப்பாணரின் யாழ் மீட்டும் திறத்தையும் விளக்கம் பெறச் செய்தார். திருஞானசம்பந்தர், காரைக்காலை அடுத்த திருத் தருமபுரம் செல்கிறார். அவ்வூர் பாணனாரின் தாயார் பிறந்த ஊர். அவ்வூர் மக்கள் திருஞானசம்பந்தரின் பெருமை உணராது பாணர் மேல் கொண்ட அன்பு காரணமாக ஞானசம்பந்தரைக் குறைத்து மதிப்பிட்டு உரைத்தனர். சம்பந்தர் பதிகம் சிறப்புப் பெறுவதற்கும் பாணனாரின் யாழிசையே காரணம் என்பதுபோல் அன்னார் உரை அமைந்தது. பாணர் இதனை ஏற்காது, ஞானசம்பந்தரை அணுகி யாழில் அடங்காத இன்னிசைப்பா ஒன்றை வழங்கி எம் உறவினரை உண்மை உணரச் செய்ய வேண்டுமென்று வேண்டினார். சம்பந்தர் சிவபெருமான் முன்பு சென்று வணங்கி, திருப்பதிகத்தின் உண்மை இசை உலகினர் கண்டத்திலும் யாழிலும் இசை நூலில் கூறப்பட்ட பிற இசைக் கருவிகளிலும் அடங்காமையைக் காட்டும் பொருட்டு, 'மாதர் மடப்பிடி' என்று தொடங்கும் யாழ்மூரித் திருப்பதிகத்தை எடுத்துப்பாடி நிறைவித்தார்.

## திருநீலகண்ட யாழ்ப்பாணர்

அடியவர்களும் தம் உற்றார் உறவினர்களும் காணப் பாணனார் ஞானசம்பந்தர் அருளிய பதிகத்தை யாழினுள் வைத்து வாசிக்கத் தொடங்கினார். அப்பதிக இசை, யாழ் நரம்புகளுக்குள் கட்டுப்படவில்லை. யாழ்ப்பாணர் வருந்தி, தம் கையில் இருந்த யாழைத் தரையில் மோதி உடைக்க முனைந்த போது சம்பந்தர் அவரைத் தடுத்து நிறுத்தி, அவரை நோக்கி 'ஐயரே! உமாதேவி யுடன் கூடிய சிவபெருமான் அருளிச்செய்த திருவருளின் பெருமை யெல்லாம் அறிவதற்கு நம்மிடமுள்ள இந்தக் கருவி போதுமானது அன்று. நம் இயல்புக்குத் தக்கவாறு இவ்வுலகத்தவர் அறியும் படியாக இந்தக் கருவியின் அளவைக்குள் அமையும் வகையில் அமைத்துப் பாடுதலே முறையாகும். மனத்தாலும் அளவுபடாத இசைப் பெருமை, செய்கையினால் அளவு படுமோ? நீர், இந்த யாழைக் கொண்டே முன்போல் திருப்பதிக இசையை

www.saivamonline.com

இயன்ற மட்டும் வாசிப்பீர்' என்று அறிவுரை கூறி, யாழை அவரிடம் ஒப்படைத்தார்.

" செய்ய சடையார் அளித்த திருவருளின்
பெருமையெலாம் தெரிய நம்பால்
எய்திய அக்கருவியினில் அளவுபடுமோ"

என்றும்

" சிந்தையில் அளவு படா இசைப்பெருமை
செயலளவில் எய்துமோ நீர்
இந்த யாழினைக் கொண்டே இறைவர்
திருப்பதிக இசை இதனில் எய்த
வந்தவாறே பாடி வாசிப்பீர் "

என்றும் வரும் பகுதிகள் இசை குறித்த சேக்கிழாரின் பதிவுகளாக அமைகின்றன.

சேக்கிழார், தாம் படைக்க எடுத்துக் கொண்ட பெரிய புராணம் என்ற பெருங்காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு தம் தாய்ச் சமயத்தின் வளர்ச்சிக்கும் தாம் வாழ்ந்திருந்த தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ச்சிக்கும் ஆற்றிய உன்னதமான பணிகளை மேலே வகைப்படுத்திக் கண்டோம். சமூகத்தின் அங்கமான மொழி, கலைகள் குறித்த அவருடைய உயரிய பணிகளும் இனங் காட்டப்பட்டன. இவையல்லாது, சேக்கிழாரின் வேறு சில அரிய பகுதிகளையும் கண்டு மகிழ்ந்து நாம் நிறைவை அடையலாம்.

❀

www.saivamonline.com

# 5. அரிய தொடர்கள்

## நுட்ப வெளிப்பாடுகள்

காப்பியப் போக்கில் பொருள் பொதிந்த பல அரிய தொடர்புகளைச் சேக்கிழார், இனங்காட்டி மகிழ்விக்கும் இயல்பு படைத்தவர். திருநீலகண்டத்துக் குயவனார், மனைவியிருக்க பரத்தையரை நாடிச் சென்ற திறத்தை,

" இளமை மீதூர இன்பத்துறையில் எளியர் ஆனார் "

என்று ஒரே வரியில் பதிவு செய்து காட்டுவது, திட்டமும் நுட்பமும் செறிந்ததாக அமைகிறது. சிவன் இயல்புரைக்கும் இடத்து, எல்லாச் செல்வங்களையும் வழங்குபவனும் அவனே. அவற்றை இல்லையாகச் செய்பவனும் அவனே என்பதை,

" எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான் "

என்ற தொடரால் குறித்து, இறைமை இயல்பு பேசி மகிழ்வார். கணவன் பெயரை மனைவி கூறல் அக்காலத்து வழக்கில் இல்லை. இயற்பகை நாயனார் புராணத்தில், தூர்த்த வடிவில் வந்த இறைவன், ஊரவர் தம்மேல் வர, அஞ்சினார்போல் இயற்பகையார் மனைவியைப் பார்க்கிறார். அம்மையார், அவரைத் தேற்றுமுகத்தான்,

" இறைவனே அஞ்ச வேண்டா! இயற்பகை வெல்லும் "

என்று கணவர் பெயர் கூறுகிறார். கணவன் இறந்தால், மனைவி, அவன் பெயர் கூறலாம் என்பதைச் சிலப்பதிகாரம் காட்டியது. கணவன், தம்மைத் துறந்த போதும் கணவன் பெயர் கூறலாம் என்பதைச் சேக்கிழார் நாட்டுகிறார்.

www.saivamonline.com

மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில், அடியார் போலப் பொய் வேடம் கொண்டு வந்த முத்த நாதன், மெய்ப்பொருளார் குனிந்தபோது, புத்தகத்துக்குள் வைத்திருந்த வாளை எடுத்து, அவர் கழுத்தில் பாய்ச்சினான். 'கொலை' என்பதைத் தம் நூலுள் யாண்டும் பதிவு செய்யாத சேக்கிழார்,

" பத்திரம் வாங்கித்தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய "

எனக் காட்டுகிறார். தான், என்ன நினைத்து வந்தானோ, அதனையே செய்தான் என்கிறார். அப்பூதி அடிகளார் வரலாற்றில் அவரைக்



மெய்ப்பொருள் நாயனார்

" களவு பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார் "

என்று, அவர், பஞ்சமா பாதகங்களுள், ஒன்றும் செய்யாத பண்பினர் எனக் குறிக்கவரும் சேக்கிழார், பாதகங்களுள் நான்கை வெளிப்பட எடுத்துரைத்து, 'கொலை', என்பதை முதலிய என்ற சொல்லாலே தழுவி நிற்கிறார். ஏனாதி நாதரை அதிசூரன் வாளால் குத்த வந்தவிடத்து, அதனையும் வெளிப்படக் கூறாது

" முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான் "

என்று கூறிச் செல்கிறார்.

## நளினமான தொடர்கள்

பெண் பூப்பு எய்தினாள் என்பதனை அக்காலச் சமூக மரபுகளை உணருமாறு காரைக்கால் அம்மையார் வரலாற்றில்

www.saivamonline.com

சேக்கிழார் ஒரு பதிவை அமைக்கிறார். அம்மையார் பூப்புஎய்திய செய்தியை 'இல் இகவாப்பருவம்' அடைந்ததாகக் குறிக்கிறார். பெண்கள் பருவம் எய்திய பிறகு, அவர்கள் இல்லத்தின் எல்லை கடந்து வெளியில் வருதல் இல்லை என்பது பழந்தமிழ்ச் சமூக வழக்கு. காரைக்கால் அம்மையாருக்கும் பரமதத்தனுக்கும் நடந்த திருமணம் மன ஒருமையொடு அமையாதது என்பதை,

> " தளிரடி மென் நகை மயிலைத் தாது அவிழ்தார்க் காளைக்குக்
> கடிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள்"

எனப் பதிவு செய்கிறார். மயில் - காளை எனக் குறித்தமை, பொருந்தாத இணை என்பதை அறிவிக்க வந்தது.

இறந்தான் என்பதைக் கூற விழையாத சேக்கிழார் அப்பூதி அடிகள் வரலாற்றில் அவர் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்ததை உரையாது, அவன் எங்கே என்று நாவரசர் கேட்ட போது, இறந்தான் என உரையாது 'இப்போது இங்கு அவன் உதவான்' என உரைக்கச் செய்தது சேக்கிழாரின் பண்பாடு.

## பெண்மையை உயர்த்துதல்

தமிழில் எழுந்த பிற காப்பியங்கள் பலவும் தம் கதை மாந்தர்களை 'அவன்' என்றும், 'அவள்' என்றும் ஒருமையில், 'ன'கர விகுதியும் 'ள'கர விகுதியும் போட்டுக் குறித்தன. மரியாதைக்குரிய நாயன்மார்களைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் உயரிய இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கில், அவர்களை ஒருமையில் சுட்டாது ஆண், பெண் பாத்திரங்களைப் பலர்பால் 'ர'கர விகுதி கொடுத்து, அவர் என்றே சேக்கிழார் குறித்திருப்பது பெருஞ்சிறப்பு. இறைவன் கூற்றாக வரும் இடங்களில்மட்டுமே அவன், அவள் என்ற ஒருமை பெரிய புராணத்துள் குறிக்கப்பட்டன. சேக்கிழார் தம் கூற்றாகக் கதை நடத்தும் இடங்களில் எல்லாம், இப் பாதுகாவலை மேற்கொள்கிறார். திருத்தொண்டத் தொகையிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் பெரும்பாலான இடங்களில் நாயன்மார்கள் ஒருமையிலேயே குறிக்கப்பட்டனர். தம் கதைமாந்தர்களை ஒருமையில் கூறாது, மரியாதைப் பன்மை பெய்து கதை நடத்தியதாலோ என்னவோ தமிழ்ப்புலவர் வரிசையில் சேக்கிழாரை எவரும் ஒருமையில் அழைக்காது மரியாதைப் பன்மை பெய்தே அழைக்கின்றனர். பிறரை நாம் மரியாதைப்படுத்தினால், உலகம் நம்மை மரியாதைப் படுத்தும் என்பதை உணர முடிகிறது.

www.saivamonline.com

## நுண்ணிய பதிவுகள்

சேக்கிழார், பெரிய புராணத்துள் வியக்க வைக்கும் அருமைப்பாடு அமைந்த நுண்ணிய பதிவுகள் சிலவற்றையும் அமைத்துள்ளார். திருநாளைப் போவாராகிய நந்தனார் வாழ்ந்திருந்த காலத்தில், சில குறிப்பிட்ட மரபில் வந்தாரைத் திருக்கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்துள்ளனர். அவருக்குத் தில்லை அம்பலவனைத் தரிசிக்க விருப்பம். தான் பிறந்த குடிமரபு பற்றிய தாழ்வுணர்ச்சியால், கோயிலுக்குள் செல்ல அவர் முயலவில்லை. ஆனால், ஒரு வாய்ப்பு அவருக்கு இருந்தது. ஆண்டுக்கு இரு முறை நடராசப் பெருமான் கோயிலைவிட்டு எழுந்தருளித் தேர் வீதியில் காட்சி தருவான். பெருமானைக் காண்பதே விருப்பம் என்றால், நந்தனார் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஆனி மகத்திலோ பெருமானைத் தரிசித்து மகிழ்ந்திருக்க முடியும். ஏன் அதை நந்தனார் முயலவில்லை என்ற வினா நம்முன் எழுகிறது. சேக்கிழார் நுட்பமாக ஒரு தொடர் அமைத்து, அவர் அடிமன விருப்பத்தை இனங் காட்டுகிறார்.

> " .....மிக்கெழுந்த
> சித்தமொடும் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
> உய்த்த பெருங்காதல் உணர்வு அழியாது வந்து உதிப்ப "

என்பது அவர் தரும் விளக்கம். நடராசப் பெருமானைத் தரிசிப்பது மட்டும் நோக்கமன்று. அப்பெருமானை அவன் நடனமாடும் திருமன்றுள் சென்று வணங்க வேண்டும் என்ற உறுதி அவர் உள்ளத்தில் இருந்ததைச் சேக்கிழார் நுண்மையாக இனங் காட்டுகிறார்.

## பெண்மைக்கு வழிகாட்டல்

எல்லாப் பெண்களுக்கும் சமூகத்தில் அவர்கள் விரும்பும் நல்வாழ்வு அமைந்துவிடுவ தில்லை. வாழ்க்கையில் அன்னாருக்குச் சோதனைகள் பல வந்து இணைகின்றன. சேக்கிழார், சைவத்தின் கொடையாகச் சோதனைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கு மூன்றுவகைத் தீர்வுகளைத் தருகிறார். வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னரே தீய்ந்து போகுமானால், மறுமணம் புரிந்து கொள்ள விரும்பாத நிலையில் சிவாலயங்களைச் சார்ந்து துறவு நிலை மேற்கொள்ளாது, மனைத்தவம் புரிந்தவாறு இறைபணி செய்து செம்மாப்புடன் வாழலாம் என்பதைத் திலகவதியார் வரலாற்றில் வைத்து நம்பிக்கையூட்டுகிறார். கணவன் செயல்களில் விருப்பம் இல்லாது வெறுப்புத் தோன்றுமானால்,

www.saivamonline.com

அவனை உதறிவிட்டு, தம் கோலம் பிறர் மனத்தில் தவறான எண்ணங்களைத் தோற்றுவிக்காதவாறு எளிய உடைபூண்டு சிவத்தல யாத்திரைகளை மேற்கொண்டு விருப்பமான தலத்தில் தங்கிப் பணி செய்து வாழலாம் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றை முன்னிறுத்தி நம்பிக்கை ஊட்டுகிறார். கணவன் தம் வாழ்க்கை விருப்பங்களுக்கு முரணானவனாக இருந்தால் தக்கவர்கள் துணையோடு அவனை மெல்ல மனமாற்றம் அடையச்செய்து இணைந்த வாழ்வை மேற் கொள்ளலாம் என்பதை மங்கையர்க் கரசியார் பெருமித வரலாற்றை முன்னிறுத்தி வழிகாட்டுகிறார்.

## சத்தியாக்கிரகம்

முடியாட்சிக்கு எதிரான தனிமனிதப் போராட்டத்தையும் சத்தியாக்கிரகத்தையும் உண்ணா நோன்பையும் நாவரசர் வரலாற்றின்வழி முன்வைக்கிறார் சேக்கிழார். பல்லவன் அழைத்த போது நாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று கூறி மறுத்த மன உறுதி மிகப் பெரிதாக ஆராயப்பட வேண்டும். பழையாறையில், சமணர்கள் சிவாலயத்தைக் குப்பை கூளங்களால் மூடி மறைத்தனர். அறிந்த நாவரசர், அங்கேயே உண்ணா நோன்பு மேற்கொண்டு, சோழன் கவனத்தை ஈர்க்கிறார். குப்பை கூளங்கள் அகற்றப்பட்டுச் சிவாலயம் வழிபாட்டுக்குத் திறந்து விடப்படுகிறது. காந்தியடிகளுக்கு முற்பட்ட, முதல் சத்யாக்கிரகி நாவரசரே என்பதை எடுத்துரைக்கத் தவறியவர்கள் நாம்தான்.

## செல்வத்தின் பயன்

செல்வம் படைத்தவர்கள் இறைவன் பெயரால் உயிர்க்குலத் திற்குப் பல்வேறு நல்லறங்களை ஆற்ற வேண்டும் என்பது சேக்கிழாரின் பெருவிருப்பம். இளமைக் காலத்தில், உலகியலில் நாவரசருக்குப் பற்று அற்றது. செல்வமோ மிக்கிருந்தது. தேச நெறியும் நிலையாமையும் அவரால் உணரப்பட்டன. நல்லறங் களுக்குத் தம் செல்வத்தைப் பலவாறாகப் பயன் கொண்டார்.

**" காசினிமேல் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்**
**ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்ப்பந்தலும் அமைப்பார் "**

என்றும்,

**" காவளர்த்தும் குளம்தொட்டும் கடப்பாடு வழுவாமல்**
**மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்**
**நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் நானிலத்துள்ளோர்**
**யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார் "**

www.saivamonline.com

என்றும் அறங்களைச் சேக்கிழார் பட்டியல் இடுகிறார். நாவுக்கரசரையே தம் ஞானகுருவாக ஏற்றுப்போற்றிய அப்பூதி அடிகளாரும் தம் தலைவருக்கு விருப்பமான அறங்களையே தாமும் செய்தார் என்று இனங்காட்டுவது ஒப்பு நோக்கி மகிழத்தக்கது.

### வாக்குச் சகாயம்

சமூக மனிதர்கள் தம்மால் இயன்றவாறு சகமனிதர்களுக்கு வாக்குத் தானமாவது செய்தல் வேண்டும் என்று சேக்கிழார் விரும்புகிறார். கதை நடத்தும் நோக்கம் ஒன்றுமட்டும் சேக்கிழார் கொண்டிருந்தால் இத்தகு பதிவுகள் பெரியபுராணத்துள் இடம் பெற்றிருக்க முடியாது. அப்பூதி அடிகள் வரலாற்றில், திங்களூர் சென்றடைந்த நாவுக்கரசர் தம் பெயரிட்டு ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைந்திருப்பது கண்டு, சிந்தையில் நயப்புற்று 'இப்பந்தல் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார்' என்று வினவுகிறார். அப்பந்தல் யாரால் அமைக்கப்பட்டது என்பதை அறிந்த பண்பாளர் ஒருவர், அப்பூதி அடிகள் என்ற ஒருவரால் அமைக்கப்பட்டது என்று மட்டும் கூறாது,

> " ...... ஆண்ட அரசு என்னும் பெயரால்
> செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
> தப்பின்றி எங்குமுள சாலை குளம் கா என்றார் "

என்று விடைபகர்ந்து, நம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கிறார். தாம் வாழும் பகுதியில் நல்லறஞ் செய்வாரை இகழ்ந்துரைக்காது அவரைப் பெருமைப்படுத்துவது ஒரு பண்பாடு. இத்தகு அன்பு மொழிகள் அன்னாரை மேலும் மேலும் அறஞ்செய்ய ஊக்கம் தருவனவாக அமையும். பந்தர்மட்டு மல்லாது, வேறு பல அறங்களும், அப்பூதி அடிகளாரால் நிகழ்த்தப்படுகின்றன என்று காட்டி உரைத்த உள்ளூர் மனிதரின் பண்பாடு தற்காலத்து வாழ்வாருக்கு இனங் காட்ட வேண்டிய ஒன்றாகும்.

## தேவையைத் தேர்தல்

சேக்கிழாரின் பெரிய புராணத்துள் இன்றைக்கு நம்மில் பலர் ஏற்க இயலாத பல பதிவுகள் உள்ளன. ஒரு சமயம் சார்ந்த இலக்கியத்தில் அத்தகைய பதிவுகள் அமைவதை அறிவு உலகத்தால் புரிந்து கொள்ள இயலும். பெண்மைக்கு எதிரான சில நிகழ்வுகளை நாம் ஏற்க இயலாது என்பதும் உண்மை. நிகழ்வை மட்டும் உற்று நோக்காது, பின்னே நிலை கொண்டிருந்த மனநிலையையும் சேர்த்துவைத்துக் காணும்போது, சிலவற்றை நம்மால் ஏற்கவும்

www.saivamonline.com

இயலும். சமயத்துறையில் கதை நடத்துவார் எவரும் தம் விருப்பம்போல் கதைகளில் மாற்றத்தைச் செய்தல் இயலாது. பல கட்டுப்பாடுகளும் மரபுகளும் அங்கே உண்டு. அத்தகு எல்லைகளுக்குள் தம்மை ஆட்படுத்திக்கொண்டே சேக்கிழார், வரலாற்றுக் காப்பியம் பாடுகிறார். முரண்பட்ட சமூக அமைப்புக்களுக்கு இடையே வாழ்ந்தாலும் தமக்குத் தேவை யானவற்றை மட்டும் தேர்ந்து கொண்டு மகிழ்ந்து வாழக் கற்றவர்கள் நாம். முரண்பாடுகளைக் குறைகூறிக் காலம் கழிப்பதைவிடச் சாத்தியமானவற்றை இனம்பிரித்து ஏற்றுப் போற்றி வாழ்தல் வாழுங்கலையில் தலையாயது.

## சேக்கிழாரின் வெற்றி

சைவம், உயிர்ப்புடைய உலகப் பெருஞ் சமயங்களுள் ஒன்று. காலப் பழமையும் சாலப் பெருமையும் கொண்டது அது; கடவுளின் பெயரால் உயிர்க்குலம் அனைத்தையும் வாழச் செய்ய வேண்டுமென்ற கருணையில் சிறப்பது. அத்தகு, உன்னத சமயத்தில் வாழ்ந்திருந்த பலர் இவ்வாறெல்லாம் வாழ்ந்திருந்து, இப்படி யெல்லாம் தொண்டு செய்தனர் என்பதைச் சேக்கிழார் போன்றவர்கள் எடுத்துக் காட்டும்போது நம் சிந்தனையும் விரிகிறது. இயன்றவாறு, பிறருக்கு உதவுவது என்பதை நம்மை அறியாமலேயே நம்மைச் செய்யவைக்கும் ஆற்றல் இத்தகு வரலாறுகளுக்கு உண்டு. சேக்கிழாரின் இந்த அரிய முயற்சி, கடந்த எண்ணூறு ஆண்டுகளில் வெற்றி பெற்றிருப்பதை நிறுவிக் காட்ட ஏராளமான சான்றுகள் உள்ளன.

## புத்துலகம் காண்போம்

சேக்கிழார் ஒரு பண்பாட்டுச் செல்வர். சிவபக்தர். அளப்பரிய உயிர் இரக்கமும் மனித நேயமும் கொண்டு வாழ்ந்த மாமனிதர். சிக்கலான கதைப்பகுதிகள் பலவும் ஒரு பண்பாட்டு மாமனிதரால் கையாளப் பட்டதால் புது அழகு பெற்றன. இத்தகு மாபெரும் ஒரு பண்பாட்டுக் காப்பியம் சேக்கிழார் வாயிலாக வெளிப்பட வேண்டுமென்று உளங் கொண்ட சிவனருள் வணங்கத் தக்கது. நாயன்மார்கள் நம் முன்னோர்கள்; வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள்; நாம் நடையிடுவதற்கு இராஜபாட்டை அமைத்துத் தந்த தியாக சீலர்கள். சேக்கிழாரைச் சிந்தையில் வைத்துப் போற்றுவோம். நாயன்மார் காட்டிய நன்னெறியில் வாழ்ந்து, புத்துலகம் காண்போம்! சிவனருள் என்றென்றும் துணை நிற்கும். வாழ்க உலகெலாம்!

www.saivamonline.com

## 6. நாயன்மார் பற்றிய குறிப்புகள்

1. **அதிபத்த நாயனார்:** நுளையர் (மீன் பிடிப்பவர்) - சோழ நாடு - நாகப்பட்டினம் - நவரத்தினம் இழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக்கொள்ளாது கடலில் விடுத்துச் சிவார்ப்பணம் செய்தவர். காலம் தெரியவரவில்லை.

2. **அப்பூதி அடிகள் நாயனார்:** அந்தணர், சோழநாடு, திங்களூர் - மகன் இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விருந்தளிக்கத் துணிந்தவர். கி.பி. 7ம் நூற்றாண்டு.

3. **அமர்நீதி நாயனார்:** வணிகர், சோழநாடு. பழையாறை. கௌபீனத்திற்கு நிறையாக மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தாமும் தராசுத்தட்டில் ஏறி அனைத்தையும் சிவனடியாருக்குத் தந்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

4. **அரிவாட்டாய நாயனார்:** வேளாளர், சோழநாடு, கணமங்கலம், சிவபெருமானுக்கு எடுத்துச்சென்ற நிவேதனப் பொருட்கள் தரையில் சிந்தியமைக்காகத் தம் கழுத்தை அரிந்துகொள்ள முயன்றவர். காலம் தெரியவரவில்லை.

5. **ஆனாய நாயனார்:** இடையர், மழநாடு, மங்கலவூர், பசுமேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் புகுத்தி வாசித்து அருள் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

6. **இசைஞானியார்:** ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் கி.பி.9ஆம் நூற்றாண்டு.

7. **இடங்கழி நாயனார்:** அரசர், கோனாடு, கொடும்பாளூர். அடியார் வழிபாடு செய்ய நெல் திருடியவர்களுக்கு மேலும் நெல்லும் பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

8. **இயற்பகை நாயனார்:** வணிகர், சோழநாடு, காவிரிப் பூம்பட்டினம். சிவனடியார் வேண்டியவாறு தம் மனைவியையே தானமாகக் கொடுத்தவர். காலம் தெரியவரவில்லை.

www.saivamonline.com

9. **இளையான்குடி மாற நாயனார்:** வேளாளர், இளையான் குடி. நள்ளிரவில் வீடு தேடி வந்த சிவனடியாருக்கு, வயலில் விதைத்த நெல் மணிகளை அரித்து வந்து, உரியவாறு அமுது செய்வித்தவர். காலம் தெரியவில்லை.

10. **உருத்திர பசுபதி நாயனார்:** அந்தணர், சோழநாடு, திருத்தலையூர். இரவும் - பகலும் திருக்குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று ஸ்ரீருத்திர மந்திரம் செபித்தவர். காலம் தெரியவில்லை.

11. **எறிபத்த நாயனார்:** சோழநாடு, கருவூர். பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பறித்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டி வீழ்த்தியவர். காலம் தெரியவரவில்லை.

12. **ஏயர்கோன்கலிக்காம நாயனார்:** வேளாளர், சோழநாடு, திருப் பெருமங்கலம். சிவபெருமானைப் பரவை நாச்சியாரிடம் தூது விடுத்தமைக்காகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வெறுத்துச் சிவனருளால் பின்பு நட்புப் பாராட்டியவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

13. **ஏனாதிநாத நாயனார்:** சான்றார் (மரம் ஏறுபவர்கள்) சோழநாடு. எயினனூர். போர்புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும், அவன் கைவாளால் வெட்டி மாயும்படி எதிர்க்காது நின்றவர். காலம் தெரியவரவில்லை.

14. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்:** குறுநில மன்னர், தொண்டை நாடு, காஞ்சிபுரம், பதவியை வெறுத்துத் தலயாத்திரை மேற்கொண்டு, சேத்திரக்கோவை வெண்பா என்ற நூலைப் பாடியவர். காலம் தெரியவரவில்லை.

15. **கணநாத நாயனார்:** அந்தணர், சோழநாடு, சீர்காழி. திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியை நெறியில் நின்றவர்களுக்குப் பயிற்சி அளித்தவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

16. **கணம்புல்ல நாயனார்:** இருக்குவேளூர். புல்லறுத்து, நெய்வாங்கி விளக்கெரித்தவர். நெய்வாங்க இயலாத நிலையில் தம் தலை முடியையே விளக்காக எரித்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

17. **கண்ணப்ப நாயனார்:** வேட்டுவர். தொண்டைநாடு. உடுப்பூர். ஆறே நாளில் அளவற்ற பக்தி கொண்டு, காளத்தி இறைவனுக்குத் தம் கண்களைப் பெயர்த்து அப்பியவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

www.saivamonline.com

18. **கலிக்கம்ப நாயனார்:** வணிகர், நடு நாடு, பெண்ணாகடம். தன்னிடம் பணியாற்றிய வேலையாள், சிவனடியாராக வந்த போது அவரை வழிபட்டதோடு, வழிபடாத தம் மனைவி கையை வெட்டியவர். காலம் தெரியவரவில்லை.

19. **கலிய நாயனார்:** செக்கார் (எண்ணெய் ஆட்டுபவர்) தொண்டை நாடு, திருவொற்றியூர். திருவிளக்கெரிக்க எண்ணெய் இல்லாகும் போது தம் இரத்தத்தால் விளக்கெரித்தவர். காலம் தெரியவரவில்லை.

20. **கழறிற்றறிவார் நாயனார்:** இவரைச் சேரமான் பெருமாள் நாயனார் என்றும் குறிப்பர். அரசர், மலைநாடு, கொடுங்கோளூர். நடராசப் பெருமான் சிலம்பொலி கேட்கச் சிறிது தாமதம் ஏற்பட, அதன் வழி சுந்தரமூர்த்தி சுவாமிகளை நண்பராகப் பெற்றவர். சிவபெருமான் பாணபத்திரர் என்ற இசைவாணருக்குத் திருமுகப் பாசுரம் கொடுத்து இவர்பால் அனுப்பினார். இவர் கயிலை சென்று 'திருக்கயிலாய ஞான உலா'ப் பாடிய சிறப்புடையவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

21. **கழற்சிங்க நாயனார்:** குறுநில மன்னர். சிவபூசைக்குரிய பூவைத் தம் மனைவி மோந்ததற்காக அவள் மூக்கை அரிந்தார். இது போதாதென்று அவள் கையையும் வெட்டியவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

22. **காரி நாயனார்:** சோழநாடு, திருக்கடவூர். 'காரிக்கோவை' என்ற நூல் பாடி, பொருள்பெற்று ஆலயப்பணி செய்தவர். காலம் தெரியவரவில்லை.

23. **காரைக்காலம்மையார்:** (பேயார்) வணிகர், சோழநாடு, காரைக்கால். சிவபெருமானை வேண்டி மாங்கனியும் பேய் வடிவும் பெற்றவர். வடதிருவாலங்காட்டில் சிவனார் ஆடல் கண்டவர். மூத்த திருப்பதிகம், திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பன இவர் பாடிய நூல்கள். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

24. **குங்குலியக்கலய நாயனார்:** அந்தணர், சோழநாடு, திருக்கடவூர். மனைவியின் தாலியை விற்றுக் குங்குலியம் வாங்கிப் புகைத்து அருள் பெற்றவர். திருப்பனந்தாளில் சாய்ந் திருந்த சிவலிங்கத்தைக் கழுத்தில் பூமாலை பூட்டி நிமிர்த்தியவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டினர்.

www.saivamonline.com

25. **குலச்சிறை நாயனார்:** பாண்டிநாடு - மணமேற்குடி. தம் அரசன் சமணசமயம் சார்ந்து வாழ்ந்த போதும் சிவபெருமானையும் சிவனடியார்களையும் வழிபட்டவர். திருஞானசம்பந்தரைச் சோழநாட்டிலிருந்து அழைத்துவந்து பாண்டியனையும் நாட்டினரையும் சைவநெறிக்குத் திருப்பியவர். கி.பி. 7ம் நூற்றாண்டு.

26. **கூற்றுவ நாயனார்:** குறுநில மன்னர், களந்தை. தில்லை வாழ் அந்தணர்கள் இவருக்கு முடிசூட்ட மறுத்ததனால் தில்லைப் பெருமான் திருவடிகளையே முடியாகச் சூடிக்கொண்டவர். காலம் தெரியவரவில்லை.

27. **கோச்செங்கட் சோழ நாயனார்:** அரசர், சோழநாடு. முற்பிறவியில் சிலந்தியாக இருந்து சிவனை வழிபட்டவர். 70 சிவாலயங்களைக் கட்டியவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

28. **கோட்புலி நாயனார்:** வேளாளர், சோழநாடு. திருநாட்டியத்தான்குடி. சிவ பூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரையும், தாய் வயிற்றிலிருந்த சிசுக்களையும் வெட்டிக் கொன்றவர். தம் மகளிர் இருவரையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மகளாக வழங்கியவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

29. **சடைய நாயனார்:** ஆதிசைவர், நடுநாடு, திருநாவாலூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

30. **சண்டேசுவர நாயனார்:** அந்தணர், சோழநாடு திருச்சேய் ஏலூர். அபிஷேகப் பால் குடத்தை இடறிய தந்தையின் காலை வெட்டித் தொண்டர் தலைவரானவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

31. **சத்தி நாயனார்:** வேளாளர், சோழநாடு, விரிஞ்சியூர். சிவனடியார்களைக் குறை கூறுபவர்களின் நாக்கை அறுத்தவர். காலம் தெரியவரவில்லை.

32. **சாக்கிய நாயனார்:** வேளாளர், திருச்சங்கமங்கை. மறவாது நாள்தோறும் (அன்பு கொண்டு) சிவலிங்கத்தின் மீது கல் எறிந்து வழிபட்டவர். கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

33. **சிறப்புலி நாயனார்:** அந்தணர், சோழநாடு, திருஆக்கூர். சிவனடியார்களுக்கு உணவும், பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

34. **சிறுத்தொண்ட நாயனார்:** மாமாத்திரர், சோழநாடு திருஞ்செங்காட்டங்குடி. சிவபெருமானுக்கு தம் ஒரே மகனைக் கறியாக்கி அமுது படைத்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

www.saivamonline.com

**35. சுந்தரமூர்த்தி சுவாமிகள்:** ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் பெரியபுராணம் தோன்ற முதல் நூலாகத் திருத்தொண்டத் தொகை பாடியவர். இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப் பட்டவர். முதலைவாய்ப் பாலகனை அழைத்தவர். பெரியபுராணக் காப்பியத் தலைவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

**36. செருத்துணை நாயனார்:** வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர், கழற்சிங்க நாயனாரின் மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்தமைக்காக அவர் மூக்கை அறுத்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

**37. சோமாசிமாற நாயனார்:** அந்தணர், சோழநாடு, திரு அம்பர். வேதவேள்விகள் செய்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

**38. தண்டியடிகள் நாயனார்:** சோழநாடு, திருவாரூர். பிறவிக் குருடராக இருந்தும், திருக்குளப் பணி செய்து, குருடு நீங்கப் பெற்றவர். சமணரை வென்றவர். காலம் கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

**39. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்:** ஏகாலியர் (வண்ணார்) தொண்டை நாடு. காஞ்சிபுரம். சிவனடியாருக்கு வாக்களித்தபடி, அவர் துணியைத் தோய்த்து உலர்த்தித்தர இயலாததால், தம் தலையைக் கல்லின் மீது மோதிக்கொண்டவர். கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

**40. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்:** அந்தணர், சோழ நாடு, சீர்காழி. உமையம்மையாரால் திருமுலைப்பால் ஊட்டப் பெற்றுச் சிவஞானம் பெற்றவர். எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் நிகழ்த்தியவர். பாண்டிய நாட்டில் சைவத்தை நிலை நிறுத்தியவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

**41. திருநாவுக்கரசு சுவாமிகள்:** வேளாளர், நடுநாடு, திருவாமூர். சமணசமயம் சென்று, தமக்கையார் திலகவதியார் தவத்தால் சைவசமயம் மீண்டவர். உழவாரத்தால் கைத்தொண்டு செய்தவர். கல் தெப்பமாக மிதக்க, கரை சேர்ந்தவர். திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் பாடியளித்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

**42. திருநாளைப் போவார் நாயனார்:** (நந்தனார்) புலையர், சோழநாடு. ஆதனூர். தில்லையைக் காண விரும்பி, தீப்புகுந்து முனிவராய் எழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தவர். காலம் தெரியவரவில்லை.

www.saivamonline.com

43. திருநீலகண்ட நாயனார்: குயவர், சோழநாடு, சிதம்பரம். அயலார் அறியாவண்ணம், மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு, அவரைத் தீண்டாது, இளமையிலும், முதுமையிலும் இல்லறம் நடத்திச் சிவனருளால் இளமை பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

44. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்: பாணர், நடுநாடு. திரு எருக்கத்தம்புலியூர். திருஞானசம்பந்தருடன் தலங்கள் தோறும் சென்று யாழ் வாசித்துத் தொண்டு செய்தவர். கி.பி 7-ஆம் நூற்றாண்டு.

45. திருநீலநக்க நாயனார்: அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை. சிவலிங்கத் திருமேனி மீது வாயால் ஊதிய மனைவியை வெறுத்து, சிவனருளால் உண்மையை உணர்ந்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

46. திருமூல நாயனார்: இடையர், சோழநாடு, சாத்தனூர். மூலன் என்ற இடையர் உடலில் தாம் புகுந்து, யோகத்தில் தலை நின்று திருமந்திரம் என்ற நூலைப் பாடியளித்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

47. நமிநந்தி அடிகள் நாயனார்: அந்தணர், சோழநாடு, ஏமப்பேரூர். தண்ணீரால் விளக்கெரித்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

48. நரசிங்க முனையரைய நாயனார்: குறுநிலமன்னர், நடு நாடு. சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர், சிவவேடம் பூண்ட காமக் குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபட்டவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

49. நின்றசீர் நெடுமாற நாயனார்: அரசர், பாண்டி நாடு, மதுரை. திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்க, அவர் திருவருளால் கூன்நீங்கப் பெற்றுச் சைவரானார். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

50. நேச நாயனார்: சாலியர்-காம்பீலிநகரம். சிவனடியார்களுக்கு ஆடைகளைத் தாராளமாக வழங்கியவர். காலம் தெரியவரவில்லை

51. புகழ்ச்சோழ நாயனார்: அரசர், சோழநாடு, உறையூர். பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமாகிய சடையைக் கண்டு, அஞ்சி உயிர் நீத்தார். காலம் தெரியவரவில்லை.

52. புகழ் துணை நாயனார்: ஆதிசைவர், செருவிலிபுத்தூர். சிவபூசைக்கு உதவியாகப் பஞ்சகாலத்தில் இறைவனால் காசு அளிக்கப் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

53. பூசலார் நாயனார்: அந்தணர், தொண்டைநாடு, திரு நின்றவூர். மனத்தினால் கோயில் கட்டிச் சிவவழிபாடு செய்தவர். திருஞானசம்பந்தர் காலத்திற்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தவர்.

www.saivamonline.com

54. **பெருமிழலைக் குறும்ப நாயனார்:** பெருமிழலையூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு, அவர் கயிலை செல்லுதல் அறிந்து, யோக நெறியால் தாமும் கயிலை சேர்ந்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

55. **மங்கையர்க்கரசியார்:** (மானியார்) அரசியார், பாண்டி நாடு. திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தம் கணவரையும், பாண்டிய நாட்டையும் சைவ நெறிக்குத் திருப்பியவர். காலம் 7-ஆம் நூற்றாண்டு.

56. **மானக்கஞ்சாற நாயனார்:** வேளாளர், கஞ்சாறூர், மணம் கொள்ள இருந்த மகள் தலைமுடியைச் சிவனடியார் வேண்டியவாறு அறுத்து வழங்கியவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

57. **முருக நாயனார்:** அந்தணர், சோழநாடு, திருப்புகலூர். பூத்தொண்டு செய்து, திருஞானசம்பந்தர் திருமணநாளில் சிவசோதியில் கலந்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

58. **முனையடுவார் நாயனார்:** வேளாளர், சோழநாடு, திருநீடூர். கூலிக்குப் போர்செய்து, அக்கூலி கொண்டு சிவனடியார்களுக்கு உதவிகளைச் செய்தவர். காலம் தெரியவரவில்லை.

59. **மூர்க்க நாயனார்:** வேளாளர், தொண்டை நாடு, திருவேற்காடு. சூதாட்டத்தால் கிடைத்த வருவாயைக் கொண்டு சிவனடியார்களுக்கு உதவியவர். காலம் தெரியவரவில்லை.

60. **மூர்த்தி நாயனார்:** வணிகர், பாண்டியநாடு, மதுரை. சந்தனம் வழங்க முட்டுப்பாடு ஏற்பட்டபோது தம் முழங்கை எலும்பையே அரைக்க முனைந்தவர். திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மூன்றால் உலகாண்டவர். காலம் தெரியவில்லை.

61. **மெய்ப்பொருள் நாயனார்:** குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவலூர். வஞ்சித்துச் சிவவேடமணிந்து வந்த பகைவன் கைவாளால் வெட்டுண்டு, அவனை மன்னித்து உயிர்நீத்தவர். காலம் தெரியவரவில்லை.

62. **வாயிலார் நாயனார்:** வேளாளர், தொண்டை நாடு, மயிலாப்பூர். மனத்தினாலேயே ஞானபூசை செய்து சிவன் அருள் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

63. **விறல்மிண்ட நாயனார்:** வேளாளர், மலைநாடு, செங்குன்றூர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

www.saivamonline.com

## நூலும் நூலாசிரியரும்...

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்' எனப் பிள்ளையவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர், தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார். அருண்மொழித் தேவர் என்ற இயற்பெயர் மறந்துபோகுமளவுக்குத் தாம் பிறந்த குலத்தின் பெயரால் புகழ் பெற்றவர். அரசாட்சி நுட்பங்களை அறிந்து சோழப் பெருமன்னனால் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்டவர். நேற்றுத் தோன்றி, இன்று ஓங்கி, நாளை இருக்குமோ என்ற குழப்பத்துக்கு இடம் தரும் அரசியலுக்குள் இவரைச் சிக்கவைத்தோமே என வருந்தி, அந்தச் சோழ மன்னனே 'சிவநெறிச் செம்மல்களைச் செந்தமிழில் வடித்துத் தரவேண்டு'மெனச் சேக்கிழாரைக் கேட்டுக்கொண்டான். அம்பலவாணரே அடியெடுத்துக் கொடுக்க, எழுந்தது பெரிய புராணம். திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராண ஆசிரியரைப்பற்றி ஆய்வு வளமும் அடியார்கள் நேயப் பாங்கும் பொலியும் வகையில் நூல் இயற்றிக் கொடுத்தவர் செந்தமிழ் வாரிதி முனைவர் செல்வக் கணபதி யாவார். தத்துவத் தெளிவு, இலக்கிய வளம், சமய நாட்டம் இவை மூன்றும் கொண்டவரே சேக்கிழாரைப்பற்றி எழுத முடியும். ஆம், பேராசிரியர் செல்வக் கணபதி அவர்கள் இந்த மும்மைச் சீரும் பெற்றவர்; தருமையாதீனக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி, சைவ மரபின் மாண்புகளை உணர்ந்து வாழ்க்கையை அமைத்துக்கொண்ட இவருடைய நாவளம் கடல்கடந்தும் சைவத் தமிழ் பரப்பும் பாங்குடையது.



www.saivamonline.com